# மகோற்சவ விளக்கம்




ச. குமாரசுவாமிக்குருக்கள்

உ

கணபதி துணை.

17.2.59

# மகோற்சவ விளக்கம்


அச்சுவேலி

ச. குமாரசுவாமிக்குருக்கள்

எழுதியது.


*


திருமயிலை

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை

பதிப்பித்தது.




*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

முதற் பதிப்பு.
விளம்பி, ஆடிமீ.
1958, ஜுலைமீ.

விலை சதம் 75

வித்தியாநுபாலன அச்சகம்,
300, தங்கசாலைத் தெரு, சென்னை-1.



சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்.

# பதிப்புரை.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலு மெம்பிரானுடைய கோயில்புக்கு"

"திருக்கோயிலில்லாத திருவிலூரும்......
ஊரல்ல அடவி காடே"

"ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே."

என்று நமது தேவாரம் கூறுகின்றபடி யாம் ஆலயந் தொழ வேண்டியது அவசியம். யாம் முத்தி பெறுவதற்கு அது ஓர் சாதனம். தமிழ் நாட்டில் ஆலயங்கள் அதிகம். அவை யெல்லாம் பல்லாண்டுகளுக்கு முன்னர் விளங்கிய அரசர்களால் ஆகமவிதிப்படி கட்டப்பட்டு நித்தியபூசை, வருஷத்திருவிழா, நன்னாள் உற்சவம் முதலியன நிறுவப்பட்டு நடந்தேறி வருகின்றன. இவற்றுள் சமயாசாரியர்களின் பாடல்பெற்றவை மிகவும் விசேஷமுடையவையாகப் போற்றப்படுகின்றன. சில கோயில்களைத்தரிசிப்பதால் பலருக்குத் தாங்கள் விரும்பியவை நடந்தேறுகின்றன. இப்படியிருந்தும் சிலர் கோயில் வழிபாட்டை ஏளனஞ் செய்கின்றனர். அவர் கோயில்களின் அமைப்பு உற்சவம் முதலியவற்றின் தத்துவங்களை ஆராய்ந்தறிந்தாரல்லர். அவற்றை விளக்குதற்குரியவரும் இக்காலத்திற் சிலரே.

இவற்றையெல்லாங் கண்ட சைவசித்தாந்த சரபம் **நா. கதிரைவேற்பிள்ளை** அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன் சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் எனப் பெயரிய சிறுநூலை அச்சிட்டார்கள். அந்நூல் அவர் அகாலமரண

மடைந்த பின்பு மறைந்தது.* இதைக்கண்ட வைதிக சைவ சிகாமணியாகிய **அச்சுவேலி ச. குமாரசுவாமிக்குருக்கள்** சிறிது விரிவாக மகோற்சவ சந்திரிகை எனப் பெயரிய நூலை எழுதி 1932-ல் அச்சிட்டனர். அதற்கு யான் அப்போது கொடுத்த மதிப்புரை:—

"சிவாலய மகோற்சவங்களின் உண்மையை நன்கு விளக்குவது. சம்ஸ்கிருத பத்ததிகளின் சாரமாயுள்ளது. பல அருமைவாய்ந்த தேவார திருவாசகத் திருவருட்பாக்களின் கருத்துக்களை நனி விளக்குவது†" என்பதாம். நிற்க,

மகோற்சவ விளக்கம் என்னும் இந்நூல் முன் சந்திரிகையில் சுருக்கிக் கூறப்பட்ட விஷயங்களை விரித்தும், அங்கே கூறப்படாத பலவிஷயங்களைச் சேர்த்தும், திருத்தியும், விளக்கியும் குருக்களவர்களால் எழுதப்பெற்ற எனது மூலமாகச் சென்னையில் நாவலர்பெருமான் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்படுகின்றது.

காமிகம், காரணம், விம்பம் முதலிய சிவாகமங்களின் சாரமாயமைந்துள்ள இச்சிறந்த நூலைச் சைவர்கள் வாங்கிப் படித்துக் கோயில் வழிபாட்டின் மேன்மையையும் உற்சவங்களின் தத்துவங்களையும் அறியவேண்டும். "கோயிலில்லாவூரிற் குடியிருக்கவேண்டாம்" என்பது நீதிநூல்.

**சே. வெ. ஜம்புலிங்கம்**
13-7-58.

---

* இந்நூல் இரண்டாவது பதிப்பாக நாவலர் அச்சுக்கூடத்தில் 1957-ல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

† "சந்திரிகை மிக உபயோகமானது."—பொ. முத்தையபிள்ளை. "மகோற்சவ சந்திரிகை மகோத்ஸவ தத்துவத்தை மிக அருமையாக விளக்கிக் காட்டுகின்றது." உலகன்பட்டி இலக்குமண சுவாமிகள்.

# விஷய சூசிகை.


| | பக்கம். |
|---|---|
| மானுடப்பிறவி | |
| சிவபுண்ணியம் | 2 |
| சரியையிற்சரியை | 4 |
| சரியையிற்கிரியை | 5 |
| சரியையில்யோகம் | 5 |
| சரியையில்ஞானம் | 5 |
| கிரியையிற்சரியை | 5 |
| கிரியையிற்கிரியை | 5 |
| கிரியையில்யோகம் | 6 |
| கிரியையில்ஞானம் | 6 |
| யோகத்திற்சரியை | 6 |
| யோகத்திற்கிரியை | 7 |
| யோகத்தில்யோகம் | 7 |
| யோகத்தில்ஞானம் | 7 |
| ஞானத்திற்சரியை | 8 |
| ஞானத்திற்கிரியை | 8 |
| ஞானத்தில்யோகம் | 8 |
| ஞானத்தில்ஞானம் | 8 |
| திருக்கோயில் | 8 |
| ஆலயசேவை | 16 |
| கோயிலதிகாரிகளும் சிவாசாரியர்களும் | 21 |
| நித்தியாதிகருமங்கள் | 24 |
| உற்சவம் | 25 |
| உற்சவாரம்பம் மூன்றுவிதம் | 27 |
| மூவகை உற்சவம் | 27 |
| அமாவாசை உற்சவம் | 28 |
| சங்கிராந்தி உற்சவம் | 29 |
| (மாசபூசை) | 29 |
| தநுர்மாசபூசை | 30 |
| திருவூஞ்சல் | 30 |
| மகரமாசபூசை | 31 |
| கும்பமாசபூசை | 32 |
| மீனமாசபூசை | 32 |
| மேடமாசபூசை | 33 |
| இடபமாசபூசை, மிதுனமாசபூசை | 34 |
| கர்க்கடகமாசபூசை, பவித்திரோற்சவம் | 35 |
| சிம்மமாசபூசை, கன்னிமாசபூசை, துலாமாசபூசை | 37 |
| விருச்சிகமாசபூசை | 38 |
| உற்சவமாசம் | 39 |
| சாவனோற்சவம் | 40 |
| சௌரோற்சவம் | 40 |
| சாந்திரமாசஉற்சவம் | 40 |
| நக்ஷத்திரமாசோற்சவம் | 41 |
| உற்சவபேதம் | 42 |
| ஒருநாள்விழா | 44 |
| பதினெட்டுநாள்விழா | 45 |
| இருபத்தேழுநாள்விழா | 47 |
| பதினொருநாள்விழா | 48 |
| பலிக்கிரமம் | 49 |
| உற்சவதினபலன் | 50 |
| உற்சவபஞ்சகிருத்தியம் | 51 |
| சாம்பவிதீக்ஷை | 53 |
| ஐந்துவிதஉபசாரங்கள் | 58 |
| அபிஷேகபலன் | 59 |
| புஷ்பவிசேடம் | 61 |
| வாத்தியபேதம் | 63 |
| தீபபேதம் | 63 |
| தாசிநடனமும் வாணவேடிக்கையும் | 64 |

| | பக்கம். |
|---|---|
| மூர்த்திகளை அலங்காரம்பண்ணல் | 65 |
| வீதிநிர்ணயம் முதலியன | 67 |
| விக்கினேசுவர அனுஜ்ஞை | 68 |
| கிராமசாந்தி | 70 |
| வாஸ்துசாந்தி | 70 |
| மிருத்சங்கிரகணம் | 72 |
| அங்குரார்ப்பணம் | 73 |
| இரக்ஷாபந்தனம் | 74 |
| பேரீதாடனம் | 74 |
| துவசாரோகணம் | 75 |
| திருவுலாக்கொண்டருளுதல் | 76 |
| யாகம், மண்டபசொரூபம் | 77 |
| கும்பலக்ஷணம் | 78 |
| ஆசனம் | 78 |
| யாகதேவர்கள் | 79 |
| ஆகுதி | 80 |
| லாஜபுஷ்பம் | 80 |
| பத்துநாள் உற்சவம் | 80 |
| முதல்நாள் உற்சவம் | 82 |
| சிவதத்துவம் | 82 |
| தசநாடிகள் | 84 |
| தசவாயுக்கள் | 85 |
| நால்வகை வாக்கு | 86 |
| இரண்டாம்நாள் உற்சவம் | 88 |
| மூன்றாம்நாள் உற்சவம் | 89 |
| மூவினை, முப்பத்தி, முக்குணம் | 89—92 |
| மும்மனம், முக்குற்றம் | 93 |
| முப்பிறப்பு, முப்பற்று | 94 |

| | பக்கம். |
|---|---|
| நான்காம்நாள் உற்சவம் | 96 |
| அந்தக்கரணம் | 96 |
| நால்வகைத்தோற்றம் | 98 |
| ஐந்தாம்நாள் உற்சவம் | 99 |
| ஐம்பொறி, அவத்தைகள் | 99 |
| ஐந்துமலம் | |
| ஆறாம்நாள் உற்சவம் | 105 |
| உட்பகை ஆறு | 105 |
| அத்துவாக்கள் | 106 |
| கன்மமலகுணம் ஆறு | 108 |
| பதமுத்தி ஆறு | 109 |
| ஏழாம்நாளுற்சவம் | 109 |
| எழுவகைப்பிறப்பு | 110 |
| வித்தியாதத்துவம் எழு | 110 |
| மாயாமலகுணம்எழு | 111 |
| எட்டாம்நாள் உற்சவம் | 112 |
| ஒன்பதாம்நாள் உற்சவம் | 113 |
| பத்தாம்நாள் உற்சவம் | 114 |
| தைலாப்பியங்கம் | 116 |
| வசந்தோற்சவம் | 116 |
| மிருகயாத்திரை | 116 |
| கிருஷ்ணகந்தம் | 117 |
| இரதோற்சவம் | 117 |
| சூர்ணோற்சவம் | 118 |
| தீர்த்தம் | 118 |
| யாககும்பாபிஷேகம் | 120 |
| மௌனோற்சவம் | 121 |
| சண்டேசுவரஉற்சவம் | 122 |
| ஆசாரியஉற்சவம் | 122 |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 22 | அவ்வுருவத், | அருவுருவத் |
| 12 | 25 | தொழிலாக | தொழிலாகி |
| 19 | 3 | தீவிளக் | திருவிளக் |
| 29 | 10 | சங்கிரமும் | சங்கிரமமும் |
| 40 | 19 | சங்கல | சங்கம |
| 50 | 9 | உற்சவதின்பலன் | உற்சவதினபலன் |
| 57 | 11 | விரதருள்ளவராய, | விரதமுள்ளவராய் |
| 59 | 10 | பஞ்சலோதகம் | பஞ்சபலோதகம் |
| 62 | 23 | மின்னல்கள் | மின்கன் |
| 62 | 24 | பறந்திடும் | பறைந்திடும் |
| 65 | 6 | செலவுசெய்து | செலவுசெய்வது |
| 67 | 8 | வாகுவாலயம் | வாகுவலயம் |
| 75 | 3 | சொடியேற்றல் | கொடியேற்றல் |
| 75 | 14 | குறிக்கும் | குறிக்கும், |
| 78 | 6 | புலனுத்துவா | புவனுத்துவா |
| 78 | 26 | பொருட்டாகவும் | பொகுட்டாகவும் |
| 86 | 14 | மும்மணமும் | மும்மனமும், |
| 86 | 25 | எழுத்துக் | எழுத்துக்கள் |
| 88 | 4 | ஒப்பலே | ஒப்பவே |
| 88 | 8 | ரறியாத | ரறியா- |
| 97 | 9 | நாம் | நாள் |
| 98 | 9 | விளய்கி | விளங்கி |
| 99 | 15 | களலாகிய | களாலாகிய |
| 101 | 8 | பிரணுதி | பிராணுதி |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 103 | 16 | என்றும் | என்னும் |
| 103 | 21 | விளே | வினே |
| 103 | 25 | லற்றஞ் | லற்றுச் |
| 104 | 9 | தாம் | தாய் |
| 105 | 25 | என்பறு | என்பது |
| 106 | 10 | என்றது | என்பது |
| 110 | 25 | ததுவத்தை | தத்துவத்தை |
| 111 | 22 | மலரச் | மாற் |
| 112 | 15 | குளத்து | குணத்து |

# சிறப்புப்பாயிரம்.

புன்னாலைக்கட்டுவன் மகாவித்துவான்
**பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்**
இயற்றியது.

திருக்கோயி றனிற்செய்யு நித்தியமாம் பூசைவிதி
சிறப்ப தாக
உரைத்திடுபல் விழாவின்விதி யெனுமிவற்றை விளக்கியுய
ருண்மை ஞானக்
கருத்தினையு முணர்த்தியவை தருகின்ற பயன்களையுங்
காட்டி யாரும்
விருப்பினொடு முணர்ந்திடுமா மகோற்சவத்தின்விளக்கமதை
விளம்பி னானல். (1)

விளம்புமவன் யாவனெனில் வேதமுட னாகமங்கள்
மிகவுங் கற்றோன்
* வளம்பெறுநற் புராணங்கள் பலவுமுண ரறிவுடையோன்
மதியின் மிக்கோன்
விளங்குறுமொண் சிவஞான போதமுதல் ஞானநூல்
விரும்பி யாய்ந்தோன்
உளங்கொளமுப் பொருள்விளக்க முதலாய பலநூல்கட்
கொளிரு மாக்கியோன். (2)

---

* வளம் - சொல்வளம் பொருள் வளம்.

ஈழமெனும் வளநாட்டின் வடபாலிற் சிரம்போனன்
    கிலங்கித் தோன்றும்
* ஆழமிகு மின்பளிக்குந் தமிழ்வழங்கும் யாழ்நகரி
    னச்சு வேலி
வாழுமுதல் வருணத்தோன் குமாரசுவாமிக் குருப்பேர்
    வகுத்தோன் யாருந்
† தாழுமுய ரொழுக்கமுளான் புலவர்சிகா மணியாகுந்
    தகைமை யோனே. (3)

---

* ஆழ - அமிழ்ந்தும்படி. † தாழுதல் - வீழ்ந்து வணங்கல்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# மகோற்சவ விளக்கம்

## 1. மாநுடப்பிறவி.

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூலமல காரணத்தினாலே, கன்மாநுசாரமாக உண்டாகும் பிறப்பு: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என நால்வகைப்படும். அண்டசம் முட்டையில் தோன்றுவன. சுவேதசம் வேர்வையில் தோன்றுவன. உற்பிச்சம் வேர் வித்துகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையில் தோன்றுவன. இவைகளின் விரிவு எண்பத்துநான்கு நூறுயிரம் யோனிபேதமாம். இவ்வாறுள்ள யோனிகளுள் இதரயோனிகள் எல்லாவற்றையும் போகத்தினாலும் பிராயச்சித்தாதிகளினாலும் நீக்கி மானுட ஜன்மத்திலே வருதல் மிக அருமையாம். அவ்வருமை ஆராயுங்காலத்துச் சமுத்திரத்தைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போலாம். இத்தன்மைத்தாகிய மானுட ஜன்மத்தை எடுப்பினும் சாஸ்திரமணமும் வீசாத மலைகளிலும் வனங்களிலும் குறவர் மறவர் முதலியோர்களாய்ப் பிறவாது சாஸ்திரங்கள் வழங்கும் தேசங்களிலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அதிலும் சிவப்பிரணீதமாகிய வேதாகமங்கள் வழங்காத மிலேச்சதேசத்தை விட்டு அவை வழங்கும் உத்தம தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அவ்வுத்தம நாட்டிலே தோன்றிடினும், தவஞ்செய்தற்குரிய உத்தமசாதியிலே தோன்றுதல் அரிது. அதினும், பரசமயங்களிற்

செல்லாமற் சிவனே பரமபதி என்று தெளிந்து வழிபடும் சைவசமயத்தைச் சார்தல் இத்துணைத்தென்று கூறலாற்றாத பெரும்புண்ணியமாம்.

அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயிரத்தா
லுண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா னுடத் துதித்தல்
கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரியங்காண்.

நரர்பயி றேயந் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தா னுருந்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே.

—சிவஞானசித்தியார்.

இப்படி மிக அருமையாகப் பெற்ற மனிதப்பிறவியினுல் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று சிவபெருமானை வழிபட்டுப் பரம புருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலே யாம்.

## 2. சிவபுண்ணியம்.

**சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்னும் நான்கு பாதங்களும் தனித்தனி உபாயம் உண்மையென வேறுபாடு பற்றி இருதிறப்படும். புகழ் முதலியவற்றை விரும்பி உலகப் பயனை நோக்கிச் செய்யும் **உபாயச் சரியை** முதல் நான்கும், மெய்யன்போடு முத்திநோக்கமாகச் செய்யும் **உண்மைச் சரியை** முதல் நான்குமாகச் சிவபுண்ணியம் எட்டாம். இன்னும்

இவை ஒவ்வொன்றும் நந்நான்காகி முப்பத்திரண்டாக விரிந்து பலதிறப்படும். உபாயச்சரியை முதலியவற்றைச் செய்பவர்கள் ஸ்ரீகண்டபுவனம் வரையும் உள்ள புவனங்களை யடைந்து, அங்குள்ள போகங்களை யனுபவித்து, மீண்டும் பூமியில் வந்து, உயர்குடியிற் பிறந்து, சைவசித்தாந்த உணர்ச்சியுடையவர்களாய் உண்மைச் சரியை முதலியவற்றை அநுட்டிப்பார்கள் உண்மைச் சிவபுண்ணியத்தின் பயனாகிய முத்தி **பதமுத்தி, பரமுத்தி**யென இருவகைப்படும். பதமுத்தி - சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன. பரமுத்தி - சாயுச்சியமாம்.

**சரியை** அனுட்டித்தோர் அகத்தொண்டர்க்குரிய உரிமை போல, சிவபெருமான் திருமேனிகொண்டிருக்கும் உலகத்துள் எவ்விடத்துந் தடையின்றிச் சஞ்சரித்து, அவ்வுலக போகங்களை அனுபவித்து வாழ்வர்.

**கிரியை** அனுட்டித்தோர் புத்திரர்க்குரித்தாகிய உரிமை போல, சிவபெருமானுக்குச் சமீபமாகவிருந்து அப்போகங்களை அனுபவித்து வாழ்வர்.

**யோகத்தை** அனுட்டித்தோர் தோழர்க்குரித்தாகிய உரிமைபோலச் சிவபெருமான் கொண்டருளுந் திருமேனியைப் பெற்று வாழ்வர்.

**ஞானத்தை** அனுட்டித்தோர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக்கலந்து நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்தலாகிய பரமுத்தியடைவர்.

முத்தியாகிய பேரின்பச் சுவையை அனுபவித்தற்கு அரும்புபோல் விளங்குந் தாதமார்க்கமாகிய சரியையும், மலர்போல் விளங்கும் புத்திரமார்க்கமாகிய கிரியையும், காய்போல் விளங்கும் சகமார்க்கமாகிய யோகமும், கனிபோல் விளங்கும் சன்மார்க்கமாகிய ஞானமும் படிகளாக இருக்கின்றன. அரும்

பில்லாமல் மலர் உண்டாகாதவாறுபோலச் சரியையில்லார்க்குக் கிரியை பயன்கொடாது; மலர் இல்லாமற் காய் உண்டாகாதவாறு போலக் கிரியை செய்து அதனாற் சித்தியடையாதவருக்கு யோகம் பயன் கொடாது. காயில்லாமற் கனி உண்டாகாததுபோல யோகமில்லாதவருக்கு ஞானம் பயன்கொடாது. கனியுண்ணாதவர் அதன் சுவையை அறியமாட்டாததுபோல ஞானமில்லாதவருக்கு முத்தியின்பங் கைகூடாது.

விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே.

—தாயுமான சுவாமிகள்.

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற் கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனென்னுங் கனி
இனிது சாலவு மேசற்றவர் கட்கே.

—திருநாவுக்கரசு நாயனார்.

**சரியையிற் சரியை**யாவது—சிவபெருமான் வீற்றிருக்குந் திருக்கோயிலில் ஆசாரமுடையவர்களாய்ச் சென்று மெல்லிய துடைப்பத்தினால் திருவலகிடல், நீரைவடித்தெடுத்துச் சுத்தமாகிய சாணத்தினால் திருமெழுக்கிடுதல், தூபமிடுதல், தீபம் ஏற்றுதல், நந்தனவனங்களமைத்தல், புஷ்பமெடுத்தல், அப்புஷ்பங்களினால் மாலைகளைத் தொடுத்துச் சாத்துதல், சிவனடியார்களையுங் குருவையுங் கண்டபொழுது சிவனாகப் பாவித்து வணங்கல் முதலான புறத்தொண்டுகளைச் செய்தலாம்.

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம்மாதீயென்றும்
ஆரூரா வென்றென்றே யலறுநில்லே.

—திருநாவுக்கரசு நாயனுர்.

**சரியையிற் கிரியை**யாவது—சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், விக்கினேசாநுக்கிரகர், சோமாஸ் கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற் பவர், விநாயகர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றை வழிபடுதலாம்.

**சரியையில் யோக**மாவது—மனசில் சிவபெருமானுடைய உருவத் திருமேனியைத் தியானித்தலாம்.

**சரியையில் ஞான**மாவது—அத்தியானபாவனையின் உறைப்பினுல் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாம்.

சரியையை அனுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினுல் நுண்ணுணர்வுடையவர்களாய், அருவுருவத் திருமேனியே பொருள், உருவத்திருமேனி அதனை யுணர்தற்கு இடமாகிய திருமேனியென்றறிந்து கிரியையில் விருப்புடையவர்களாய், அகத்தொழிலானும் புறத்தொழிலானும் வழி படுவர்.

**கிரியையிற் சரியை**யாவது: புஷ்பம், தூபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய யாவையுஞ் சேகரித்தலாம்.

**கிரியையிற் கிரியை**யாவது: பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தியாகிய பஞ்சசுத்தியுஞ்

செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்திபரியந்த பதுமமாகிய சிவாசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியாதேகமாகிய மூர்த்தியை நியாசஞ்செய்து, அவ்வித்தியா தேகத்துக்குச் சிவனுயுள்ள நிஷ்கள ரூபரும், ஞானனந்தமயரும் சர்வகர்த்தாவும், சர்வவியாபகருமாகும் பரம சிவனுகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்திலே தியானித்து, "சுவாமீ, சர்வ ஜகத்துக்கும் நாதரே! பூசையின் முடிவு எது வரையுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலே சாந்நித்தியராய் இரும்" என்று விண்ணப்பஞ்செய்து பூசித்துத் தோத்திரம் பிரதக்ஷிணம் நமஸ்காரம்பண்ணி முடித்தலாம்.

பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.

—தாயுமான சுவாமிகள்.

**கிரியையில் யோக**மாவது—இருதயத்திலும், நாபிகுண்டத்திலும், புருவமத்தியிலும் செய்யும் பூசை, ஓமம், சமாதி என்னும் அந்தர்யாக பூசையாம்.

**கிரியையில் ஞான**மாவது: அந்தர்யாக பூசையின் உறைப்பினுல் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாம்.

கிரியையை அநுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினுல் அதிநுட்ப அறிவுடையவர்களாய் அருவத் திருமேனியே பொருள் உருவத் திருமேனியும் அவ்வுருவத் திருமேனியும் அதனை அறிதற்கிடமாகிய திருமேனிகளென் றறிந்து யோகத்தில் விருப்புடையவர்களாய் அகத்தொழில் மாத்திரையால் வழிபடுவர்.

**யோகத்திற் சரியை**யாவது: இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம் என்பன. அவற்றுள் இயமமாவது:—கொல்லாமை, உண்மை கூறல், கள்ளாமை, பிரமசரியம், தயை,

வஞ்சனையில்லாமை, பொறுமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், சுத்தியுடைமை என்னும் பத்துமாம். நியமமாவது:— தவம், சந்தோஷம், தெய்வம் உண்டென்னும் விசுவாசம், தானம், ஈசுவரபூசை, சித்தாந்த சாஸ்திர சிரவணம், இலச்சை, புத்தி, செபம், விரதம் என்னும் பத்துமாம். ஆசனமாவது:— இருக்குமுறை; அது சுகாசனம் முதற் பலவகைப்படும். பிராணயாமமாவது:—பிராணவாயுவை அடக்குதல். அது மந்திர செபத்துடன் அடக்குவதும் மந்திர செபமின்றி அடக்குவதுமென இருவகைப்படும்.

**யோகத்திற் கிரியை**யாவது: பிரத்தியாகாரம், தாரணை என்பன. பிரத்தியாகாரமாவது: மனதைப் புறத்திற் செல்லவிடாதடக்குதல். தாரணையாவது: மனதைச் சுழுமுனை மார்க்கத்திற் செலுத்துதல்.

**யோகத்தில் யோக**மாவது தியானமாகும். அது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறுதாரங்களையும் அதிதேவதைகளையும் அறிந்து மூர்த்தியின் சொரூபத்தை மனதால் பிரமரந்திரத்தில் தியானித்தலாம்.

**யோகத்தில் ஞான**மாவது சமாதியாம். அது மூர்த்தியாகிய தோற்றமும் சிந்தித்தலாகிய தொழிலும் சிந்திக்கின்ற தானுமாகிய பேதங்களின்றி மூர்த்தியுந் தானும் இரண்டறக் கலந்து நிற்றலாம். இயமம் முதலிய எட்டும் வினைகள் கெடுதற்கு வழியாகிய அட்டாங்க யோகம் எனப்படும்.

சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் அநுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினால் மெய்யறிவு விளங்கிச் சச்சிதானந்த வடிவாகிய ஒளிப்பிழம்பே பதியின் சொரூபம்; உருவத்திருமேனி முதலிய மூன்றும் அதனை

உணர்தற்பொருட்டும் வழிபடுதற்பொருட்டுங் கொண்ட திரு மேனிகளென்றறிந்து, காயத்தொழில் மனத்தொழில் என்னும் இரண்டையும் விட்டு ஞானத்தில் விருப்புடையவர்களாய் அறிவுத்தொழில் மாத்திரையால் வழிபடுவர்.

**ஞானத்திற் சரியை**யாவது: ஆசாரியரிடத்து ஞானசாத்திரங்களைக் கேட்டல். **ஞானத்திற் கிரியை**யாவது: கேட்டவைகளைச் சிந்தித்தல். **ஞானத்தில் யோகமாவது:** தெளிதல். **ஞானத்தில் ஞானமாவது:** நிட்டை கூடல்.

---

## 3. திருக்கோயில்.

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் சிவலிங்கமுதலிய திருமேனியும் குருவும் சங்கமமும் இடமாகக் கொண்டு நின்றும் அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக்கொண்டருளுவர். சிவ பெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றைய இடங்களிலெல்லாம் பாலில் நெய்போல வெளிப் படாது நிற்பர். ஆதலினாலே நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை குருலிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடல் வேண்டும்.

*தாபர சங்க மங்க ளென் றிரண் டுருவி னின்று*
*மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்ப*
*னீபரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை*
*யாய்பரம் பொருளை நாளு மர்ச்சிநீ யன்பு செய்தே.*

—சிவஞானசித்தியார்.

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செயற்பாலதேயாம். மலநீங்கிய சிவஞானிகளும் பூர்வ மலவாசனை தாக்கா

மைப்பொருட்டும் சிவானந்தம் மேன்மேலும் வளர்தற்பொருட்டும் சிவலிங்க முதலிய திருமேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுங்காரணமாகவே மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றனர். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம் பெற்று முத்தியடைவர். அது,

"எண்டொகாற் பிறப்பி லெழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கெனு மிலக்க
மாண்டபல் பவத்திற் பன்முறை வினையான்
மறிதரு முயிர்களை யெடுப்ப
வாண்டரு ளமல னநாதியி னுலக
மாக்குழி யருந்தலந் தீர்த்தங்
காண்டகு மூர்த்தி யென்னமூன் றுருவாய்க்
கண்ணக னுலகெலாங் கதித்து."

—தணிகைப்புராணம்.

எனவும்,

"மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

—தாயுமானசுவாமிகள்.

எனவும்,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே."

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

எனவும் வரும் அருள்வாக்குக்களால் உணரப்படும்.

சிவபெருமானுடைய திருவடிகளை நினையவொட்டாமல் அயர்ப்பிக்கும் மும்மல அழுக்கை ஞான நீராற் கழுவி அயராத அன்பைச் செய்யும் மெய்யடியார்களோடு கலந்துகூடி மலமயக்

கம் நீக்குமாறு அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்பினோரே சீவன் முத்தராவார் எனச் சிவஞானபோதம் செப்புகின்றது. ஆலய வழிபாடு செய்து பெரும்பேறெய்திய மார்க்கண்டேய முனிவர் இதற்குச் சான்றாவர்.

அத்த னாலய மனைத்தும் வைகலும்
பத்தி யோடுமுன் பரவி யேமிகுஞ்
சுத்த னாகியே தொலைவி லாருயிர்
முத்தி யெய்தினன் முழுதுணர்ந் துளான்.

—கந்தபுராணம்.

ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மாக்களுக் குணர்த்தி அவர்களை நல்வழிப் படுத்துமாறு திருவுள்ளங் கொண்ட உமாதேவியார் காஞ்சீபுரம், திருவானைக்கா, மாயூரம், திருமயிலாப்பூர் முதலிய தலங்களிலும்; விநாயகர் திருச்செங்காட்டங்குடி, திருநாரையூர், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களிலும்; சுப்பிரமணியக் கடவுள் திருச்சேய்ஞலூர், திருப்பரங்குன்று, திருத்தணிகை, பழநி முதலிய தலங்களிலும் ஆலயம் அமைத்துப் பூசித்தார்கள். திருநந்திதேவர், அகத்திய முனிவர், வசிட்ட முனிவர், பிரமா, விட்டுணு, சரஸ்வதி, இலக்குமி, நவக்கிரகங்கள், ஏனைமுனிவர், தேவர்கள், சமயாசாரியர்கள், பட்டினத்தடிகள், அரசர்கள் முதலிய பற்பலரும் ஆலய வழிபாடு செய்தன்றோ போக மோக்ஷங்களைப் பெற்றார்கள். அஃறிணைகளாகிய சிலந்தி, நாரை, கரிக்குருவி, சர்ப்பம், யானை முதலியனவும் ஆலய வழிபாட்டாலேயே முத்தியடைந்தன.

சிவாலயங்களில்லாதவூர் எவ்வித செல்வங்களால் நிறைந்திருப்பினும் திருவமைந்த வூரன்று; காடேயாம். இவ்வுண்மை "திருக்கோயிலில்லாத திருவிலூரும்...........அவை

யெல்லா மூரல்ல வடவி காடே" எனவரும் தேவாரத்தாலும், "விபூதியில்லாத நெற்றிபாழ்; சிவாலயமில்லாத கிராமம் பாழ்; சிவபெருமானைப் பூசியாத சென்மம் பாழ்; சிவபெருமானைப் பற்றிக் கூறாத சாஸ்திரம் பாழ்; எனவரும் பிருகஜ்ஜாபாலோப நிடத வாக்கியத்தாலும் உணரப்படும்.

சைவாலயங்களிலே நித்தியபூசை உற்சவ பிரதிஷ்டை பிராயச்சித்தங்க ளெல்லாம் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த சிவாகம விதிப்படியே நடைபெறத் தக்கன. இவைகளெல்லாம் வேறெந்த நூலிலும் விதிக்கப்பட வில்லை. அது,

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
**துங்க வாகமஞ்** சொன்ன முறைமையால்.

எனவும்,

**எய்தியசீ ராகமத்தி** லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார்.

எனவும் வரும் **அருண்மொழித்தேவர்** திருவாக்காலும்,

இவ்வரை யொருசார்தன்னி லிராறுதோளுடைய வெந்தை
மைவிழி யணங்குந்தானு மாலய னுணரா வன்ன
ஐவகை யுருவிலொன்றை **யாகம விதியா** லுய்த்து
மெய்வழிபாடு செய்து வேண்டியாங் கருளும்பெற்றான்.

எனவரும் **கச்சியப்பசிவாசாரியர்** திருவாக்காலும் அறியப் படும்.

வழிபாடானது அகவழிபாடு புறவழிபாடு என இரு வகைப்படும். அகவழிபாடு அந்தர்யாகமென்றும், உட்பூசை

யென்றும், மானசபூசை என்றும் சொல்லப்படும். புறவழிபாடு புறப்பூசை என்றும், பெகிர்யாகமென்றும் சொல்லப்படும். புறவழிபாட்டிற்குள்ள ஆலயம் தூபம் தீபம் திருமஞ்சனம் நைவேத்தியம் முதலான உபகரணங்களை யெல்லாம் அகத்தே மனத்தினாற் பொருத்திச் செய்வதே அந்தரியாக பூசையாம். அந்தரியாக பூசை செய்தே புறப்பூசை செய்ய வேண்டும் என்பது ஆகமசித்தம். "அகத்தில் ஆன்மாவிலுறையும் சிவனைப் பூசை செய்யாது மறந்து புறத்திற் பூசிப்பவன் பசுவின்பால் தன் உள்ளங்கையில் இருப்பதைக் கண்டும் புறங்கையை நக்குவோனை யொப்பாவன்" என்று **சிவதருமோத்தரம்** கூறுகின்றது.

> உள்ளேவல் செய்வானைக் காந்தன் மிகவுகப்பன்
> உள்ளேசெய் பூசை யுகந்து.

எனச் **சைவசமயநெறி**யும் செப்பும்.

இங்ஙனம் சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் வழிபடாதவர்கள் ஜனன மரணத்துக்கு ஆளாகின்றார்கள்.

> திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்
> தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகி
> லொருகாலுந் திருக்கோயில் சூழா ராகி
> லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
> அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி
> லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
> பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
> பிறப்பதற்கே தொழிலாக யிறக்கின்றாரே.

—**அப்பமூர்த்திகள்.**

திருக்கோயிலும் அங்கே நடைபெறும் பூசை உற்சவம் ஆதியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக் கருவியா

யுள்ளன. மலநோயை நீக்கும் வைத்தியநாதராகிய பரமசிவனுர் ஆலயங்களையும் பூசை உற்சவாதிகளையும் செய்யுமாறு விதித்திருத்தல், அப்புற வழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அந்தர்யாக பூசையின் உண்மையை உணர்ந்து செய்து சிவஞான மேலிட்டவிடத்து அத்துவித முத்தியிற் சேர்த்தற் பொருட்டாம். அவ்வுண்மை தேவாலயங்களிலே அமைக்கப்பட்டுள்ள மண்டபங்களானும் தூபி, பிராகாரம், கோபுரம் முதலியவற்ருனும் உணரப்படும்.

சரீரத்தில் ஆருதாரங்கள் அமைந்திருத்தல் போல, புறத்தே காணப்படும் ஆலயத்கினும் கருப்பக்கிருகம் முதலிய மண்டபங்கள் ஆருதாரஸ்வரூபமாய் விளங்குகின்றன.

திருக்கோயிலுள்ள ஐந்தாம் ஆவரணத்தால் அன்னமய கோசம் அறியப்படும். நான்காம் ஆவரணத்தால் பிராணமய கோசம் அறியப்படும். மூன்ரும் ஆவரணத்தால் மனோமய கோசம் அறியப்படும். இரண்டாம் ஆவரணத்தால் விஞ்ஞான மய கோசம் அறியப்படும். முதலாம் ஆவரணத்தால் ஆநந்த மய கோசம் அறியப்படும். ஆகலின் பஞ்சாவரணங்களும் பஞ்சகோசங்களைக் குறிப்பனவாம். மூன்று பிராகாரம் மாத்திரம் உள்ள ஆலயங்களில் அவை தூலம் சூக்குமம் காரணம் என்னும் முச்சரீரங்களையும் குறிக்கும். இரண்டு பிராகாரம் உளவாயின், அவை தூலம் சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும். பிராகாரம் ஒன்றேயாயிருப்பின் இவைகளெல்லாம் அவ்வொன்றில் அடங்கும்.

கோபுரத்திலுள்ள ஒவ்வொரு பகுதிகளும் இறைவனது தூலத் திருமேனியின் ஒவ்வோருறுப்பைக் குறிப்பன. கோபுரத்தில் ஈசுவரனது பராக்கிரம லீலா விநோதங்களும், அவாதி அதிகாரம் பெற்ற பிரம விஷ்ணுவாதி தேவர்கள், அஷ்ட

திக்குப் பாலகர், சூரிய சந்திரர் முதலியோரது உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனால், பரமேசுரனது கடவுட் டன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்பு செய்ப ஏது வாகும்.

சிவமூர்த்தத்தைச் சூழ்ந்திருக்கும் திருவாசி பிரணவ வடிவம். அது "ஓங்காரமே நற்றிருவாசி யுற்றதனி னீங்கா வெழுத்தே நிறை சுடராம்" என்னும் **உண்மை விளக்கத்**தான் அறியப்படும்.

தூபியானது பிருதுவி தத்துவமுதல் முப்பத்தாறு தத்துவங்களாலும் கற்பிக்கப்பட்ட இருதயகமலத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் உண்மையைக் குறிக்கின்றது. தூபி கோபுரம் தூல லிங்கம் எனவும், விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்கும லிங்கம் எனவும், அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனவும்படும். இவ் வுண்மை நோக்கித்,

*தூய விமானமுந் தூலம தாகுமா*
*லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்*
*பாய பலிபீடம் பத்திர லிங்கமா*
*மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே.*

—**திருமூலநாயனர்.**

என்று அருளிச் செய்தார். சைவசமய நெறியிலும்,

*தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்க*
*மேலும் பலிபத் திரம்.*

என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சிவலிங்கம் நந்தி பலிபீடம் என்னும் மூன்றனுள், சிவலிங்கம் பதியும் நந்தி பசுவும் பலிபீடம் பாசமுமாகக்கொள்ளப் படும். ஆலயங்களிலே சிவலிங்கமும் அதற்கு நேராக நந்தியும் பலிபீடமும் இருக்கின்றன. அவை மூன்றும் நேராகத் தாபிக்

கப்பட்டிருத்தலால், அவை அநாதி நித்தியமாயுள்ளவை என்னும் உண்மை உணரப்படும்.

இனிக் கொடிமரம் கொடிக்கயிறு கொடிச்சீலை தருப்பைக் கயிறு என்பவற்றுள் கொடிமரம் பதியையும், கொடிக்கயிறு திருவருட் சத்தியையும், கொடிச் சீலையில் எழுதப்பட்ட இடப தேவர் பசுவையும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும் என்று காரணம் முதலிய ஆகமங்கள் கூறுகின்றன.

---

## 4. திரைச்சீலை.

சிவசந்நிதானத்திலே இடப்படும் திரைச்சீலையினாலே, மாயையாகிய திரையே அநாதி முத்தசித்துருவாகிய சிவத்தை அறியவொட்டாது மறைத்திருக்கின்றதென்றுணர்ந்து, அவ் விறைவனாது திருவருள் என்னுங் கத்தியினாலே கீறி ஞானக் கண் கொண்டு உள்ளபடி தரிசித்தவர்களே சிவகதி பெறுவர் என்னும் உண்மை அறியப்படும்.

உயர்ந்த நான்கு வருணத்தாருள் உறுப்புக்குறைந்தவர்களும் நான்கு வருணத்தார் அல்லாத சங்கர சாதியாரும் தங்கள் தங்கள் அதிகாராநுகுணமாக ஆசாரியரிடத்துத் தீக்ஷை பெற்று,

> ஆவியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழ
> பாவமறும் வாய்த்துறு மின்பம்.

என்று வருத்தமற உய்யும்வழி என்னும் நூல் கூறியவாறு தூபியையுங் கோபுரத்தையும் சிவபெருமானைகப் பாவித்து அவற்றுக் கெதிரே பத்திர புஷ்பங்களைத் தூவித் துதித்தல் முறையாம்.

இத்தன்மைத்தாகிய அரும்பெரும் விசேடங்கள் அமைந்துள்ள ஆலயங்களை இகழாது அடைந்து சிவபெருமானைத் தரி

சிக்கும் கண்களே கண்களாம். சிவாலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்யும் கால்களே பிரயோசனமுள்ள கால்களாம். சிவபெருமானை வணங்குந் தலைகளே தலைகளாம். சிவசரிதையைக் கேட்கும் செவிகளே செவிகளாம். விட்டுணு முதலிய தேவர்களும் அவ்விறைவனை வழிபடுதல் ஏனையுலகங்களிற் கூடாமையின் மண்ணுலகத்தில் வந்து சிவனையருச்சிப்பார்கள். மானுடதேகத்தைப் பெற்றவர்கள் அர்ச்சிக்க வேண்டும் என்னும் உண்மையைப் பிறவியிற் பட்டு உழலும் சிறியோர் சிறிதும் அறியார்கள்.

> மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
> மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
> வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
> ரூனெடுத் துழலு மூமை யொன்றையு முணரா ரந்தோ

**—அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.**

எனவும்,

> உற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
> செற்ற புலையர்பாற் செல்லாதே—நற்றவஞ்சேர்
> வேடமும் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
> மூடருடன் கூடிமுயங் காதே.

**—உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.**

எனவும் திருவாய்மலர்ந்தருளி யிருப்பது காண்க.

---

## 5. ஆலய சேவை.

சிவபுண்ணியம் பொதுவும் சிறப்புமென இருதிறப்படும். சிவதீக்ஷை என்னும் அங்கமின்றிச் செய்வது பொதுச் சிவபுண்ணியமாம். சிவதீக்ஷை என்னும் அங்கத்துடன் செய்வது சிறப்புச் சிவபுண்ணியமாம். சிறப்புச் சிவபுண்ணியத்தை அடைவதற்குப் பொதுச் சிவபுண்ணியம் உதவியாயிருக்கும். ஆதலால் தீக்ஷைபெற்றுத் திருத்தொண்டு செய்வது உத்தமோத்தமமாகும்.

மகோற்சவகாலத்தில் சரியையாளர் முதலிய யாவரும் தத்தமக்குரிய நித்திய கருமத்தை முடித்துக்கொண்டு, ஆசார சீலர்களாய் ஆலயத்துக்குப் போதல் வேண்டும். தூயலிங்கமாகிய கோபுரத்தையும் சூக்குமலிங்கமாகிய சிவலிங்கப் பெருமானையும் வழிபட்டுப் பிரதக்ஷிணம் நமஸ்காரங்களைச் செய்து இயன்ற சிவத்தொண்டுகளைச் செய்தல்வேண்டும். ஆலயத்திலுள்ள ஐந்து பிராகாரங்களையும் வலம்வருதலால் ஐந்து கோசங்களிலும் தங்கியிருக்கும் பாவங்கள் தேயும். பின்பு பஞ்ச சரீரங்களும் நீங்கிச் சிவவியாபகம் ஆன்மாவில் உண்டாகும். மூன்று வீதிகளை வலம் வருதலால் முச்சரீர நீக்கமும், இரு வீதிகளை வலம் வருதலால் இரு சரீர நீக்கமும் உண்டாகும். நமஸ்கரிப்பதனால் தற்போதம் நீங்கி எண்குணம் விளங்கிச் சிவத்தோடு அத்துவித முண்டாகும் என்று சதாசிவரூபம் கூறும்.

சிவபெருமானது திருவிழாவில் வலம் வருவோர் ஒவ்வோரடிக்கு ஒவ்வோரசுவமேத யாகபலன் எய்துவர். குருவுக்குப் பின்னே செல்கின்றோருக்கும் பலன் அஃதேயாகும். துவசாரோகண காலத்தில் துவஜபடத்தின்பின் வலம் வருவோர் பொன், மகவு, பௌத்திரர் முதலிய ஐசுவரியங்களை அநுபவித்திருப்பர். திருவிழாவில் நாடோறும் பிரதக்ஷிணம் வருவோர், உருத்திரராவார் என்று சிவபுண்ணியத்தெளிவிற் செய்யப்பட்டிருக்கின்றது.

காலையில் பிரதக்ஷிணம் செய்தலால் வியாதி நாசமும், மத்தியானத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் விரும்பிய சித்தியும், சாயங்காலத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் சர்வபாவ நீக்கமும், அர்த்தயாமத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் மோக்ஷசித்தியும் உண்டாகுமென்று சகலாகம சாரசங்கிரகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. சூரியோதயந் தொடங்கி அர்த்தயாம பரியந்தமாயினும் ஒருசாமமாயினும் அங்கப்பிரதக்ஷிணஞ் செய்தவர் தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்று முத்தியடைவர் என்று அருணகிரிபுராணம் கூறுகின்றது.

வரகுணபாண்டியனர் பிரமஹத்தியாற் பீடிக்கப்பட்டு வருந்தி அதனை நீக்குதற்குத் தானஞ்செய்தும், அரசவிருக்ஷத்தைப் பிரதக்ஷிணம் செய்தும்; பசுக்களுக்குப் புல் முதலியன கொடுத்தும் வேறும் பற்பல புண்ணியங்களைச் செய்தும் நீங்கப் பெருமல் முடிவில் சிவாலயப் பிரதக்ஷிணம் செய்தன்றோ நீங்கப்பெற்றனர்.

சிவாலயதரிசனம் பிராதக்காலத்திலேசெய்தால் இரவிலே செய்த பாவம்போம். மத்தியானத்திலே செய்தால் பிறந்த நாள் தொடங்கிச் செய்தபாவம் போம். சாயங்காலத்திலே செய்தால் ஏழுபிறவிகளிற் செய்தபாவம் போம். ஆதலால் சைவசமயிகள் யாவரும் எந்நாளும் காலந்தோறும் தவருமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனம் செய்யக்கடவர்.

சோமவாரம், அட்டமி, பிரதோஷம், பௌர்ணிமை அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, உற்சவம் முதலிய புண்ணிய காலங்களிலே சிவதரிசனம் செய்தல் மிக மேலாகிய சிவ புண்ணியமாம்.

ஆக்கையாற் பயனென்—அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் ஞதவில்
வாக் கையாற் பயனென்.

கால்களாற் பயனென்—கறைக்
கண்ட னுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென். —**திருநாவுக்கரசு சுவாமிகள்.**

திருக்கோயிலிலே செய்யத்தகும் சிவபுண்ணியங்கள் திருவலகிடுதலும், திருமெழுக்குச் சாத்தலும் திருமாலைகட்டிச்

சாத்துவித்தலும், சிவசந்நிதியில் அருட்பாக்களைப் பாடுதலும் சுகந்த தூபமிடுதலும் தீவிளக்கேற்றுதலும் தங்கள் தங்கள் செல்வத்துக்கு ஏற்பத் திருப்பணியும் பூசையும் செய்வித்தலும் பிறவுமாம்.

---

## 6. திருவலகிடுதல்.

திருச்சந்நிதியிலும் வீதியிலுமுள்ள குப்பைகளை மெல்லிய நடைப்பத்திஞல் திருவலகிடுபவர்கள் காமம் வெகுளி மயக்கம் பொய் ஆகிய குப்பைகளை நீங்கிப் பரிசுத்தராய் விளங்குவர்.

காமம் வெகுளி கழிபெரும் பொய்யென்னும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
யரிதி னகழ்ந்து போக்கி. —பட்டினத்தடிகள்.

## 7. திருமெழுக்கிடுதல்.

கோபமுதலிய செத்தைகளை ஒருங்கே நீக்கித் தத்துவ ஞானமென்னும் நறுஞ்சாணத்தைக்கொண்டு அன்பென்னுஞ் சலத்தோடு கலந்து மெழுகியவர், மனக்கோயிலில் சிவலிங்கத் தோற்றப்பெறுவர்.

---

## 8. கீதம்பாடல்.

சிவபெருமானது திருமேனி நாதவுருவாகுமென்று சுருதி யறிவிப்பதால், அவ்வுண்மையை விளக்கவே அவரது திருமுன்னிலையில் கீதம் பாடப்படுகின்றது என்பதும் அது செய்தோர் உண்மை விளங்கப்பெற்று முத்திபடைவர் என்பதும் பெறப்படும்.

ஆதிநம்ப னுருநாத வுருவாகு மெனமுன்
னோது கின்றமறையாவையு முணர்த்திடுதலாற்

கேதசமீசன் முனநாளு நவில்கேண்மை யுடையோர்
நீதிலிவ் வுலகுசேர் குவரெனவுரை செய்தார்.

—காசிகாண்டம்.

தூபந்தாங்குபவர்கள் ஆணவ மலசத்தி நீங்கப் பெறுவார்கள். திருவிளக்கேற்றுபவர்களும் தீபந்தாங்குபவர்களும் சிவஞானத்தைப் பெறுவார்கள். சாமரையாற் பணிசெய்பவர்கள் மலநிவாரணமும் திருவருட் செல்வமும் அடைவார்கள். குடைபிடிப்பவர்கள் ஆஞ்ஞாசக்கரத்தையும் பலத்தையும் அடைவார்கள். வாகனந்தாங்குபவர் கணநாதராய்த் திருக்கைலாசத்தை அடைந்து இன்புற்றிருப்பார்கள். சிவாசாரியரை நமஸ்கரித்து அருமருந்தாதிய விபூதி பெறுவது திருவருளைப் பெறுதல் என்னும் குறிப்பாகும்.

இங்கே கூறிய இத்திருத்தொண்டுகளையும் இவைபோன்ற ஏனைய தொண்டுகளையும் செய்வதற்கு மனங் கூசுவதும் மெய்யன்போடு செய்பவர்களை இகழ்வதும் குற்றமாகும்.

சிவாலயத்திலே செய்யத்தகாத அபராதங்கள் தூபி, துசத்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னுமிவைகளின் சாயையை மிதிப்பதும், இருமூர்த்திகளுக் கூடாகச் செல்வதும், சேவிக்கவந்த பெண்களைத் தீண்டுவதும், அவர்களை இச்சித்துப் பார்ப்பதும், வீண்வார்த்தை பேசுவதும், பயனின்றிச் சிரிப்பதும், பயனின்றிப் பேசுவதும், வீண் கீதங்களைப் பாடுவதும், கேட்பதும், சிவபெருமானுக்கும் பலிபீடத்துக்கும் நடுவே செல்லுவதும், சுவாமி திருவுலாக் கொண்டருளும்போது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குவதும், அகாலத்தில் வணங்குவதும் பிறவுமாம். இதற்குப் பிரமாணம் சிவார்ச்சனாசந்திரிகையிலும், கடம்பவன புராணத்திலும், அருணகிரிபுராணத்திலும், ஆகமங்களிலும் கண்டு கொள்க.

---

## 9. கோயில் அதிகாரிகளும் சிவாசாரியர்களும்.

குருலிங்க சங்கம பக்தியுள்ளவர்களும், ஆகம உணர்ச்சி உள்ளவர்களுமாகிய பெரியோர்களே ஆலய தருமகருத்தாக்களாய் இருத்தல் வேண்டும். அவர்களே ஆலயத்தை விதிப்படி நடாத்திச் சமயத்தை வளர்ப்பார்கள். அவர்கள் அங்கே நடைபெறும் கிரியைகளையும் முறைகளையும் முறைப்படி செய்யாவிடின் அதனால் வருங்கேட்டையும் அறிந்து பழி பாவங்களுக்குப் பயந்து வேதாகம அறிவும் நல்லொழுக்கமும் ஈசுர பத்தியுமுடைய சிவாசாரியர்களை நியமித்துக், கிரியைகளைச் செய்விப்பார்கள்.

கோச்செங்கட்சோழநாயனார் திருவானைக்காவில் அமுதலிங்கேசுரருக்கு அருச்சர்களாக அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களாகும் ஆதிசைவர்களை நியமித்தார். அவர்கள் அருச்சித்து வருநாளிலே அரசரும் பணிகேட்ப மற்றையவர்களும் எக்கருமஞ் செய்யினும் இன்றியமையாது நல்லவிருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுந் தன்மையுடைமையினால் தம்மை மதித்துக் கர்வங்கொண்டார்கள். ஞானத்தவத்தில் வாழ்தலினாலும் அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதினாலும் பெருமைகளெல்லாம் தமக்கு வந்தன என்று அறியாமல் அகமதிப்பால் கணிகையருடைய அழகை நுகர்ந்தும், சிவத்திரவியங்களைக் கவர்ந்தும், சிவபுண்ணியங்களைச் செய்யாதும், பயின்றுவந்த ஒழுக்கங்களை முற்றாக விடுத்தும், மணி அடித்தல் வாத்தியங்களை முழக்குதல் என்னுமிவைகளே அன்றி, பிறவிப்பிணி நீங்க மெய்யன்போடு பூசைசெய்யாது தவறுகளையே செய்தார்கள். மனதிற்றங்கிய காவுடையவர்களாய் அச்சிவமறையோர் நடப்ப "மனமுருகி நினையாதார்க்கு வஞ்சன் காண்" என ஸ்ரீவாகீசர் கூறியாங்கு வஞ்சர்க்கு வஞ்சகராகிய சிவபெருமான்

திருவுள்ளங்கறுத்து அவர்களை அழிப்பதற்குத் திருவுள்ளங் கொண்டிருந்தார்.

ஒருநாள் அந்தணர்கள் அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதற்குச் சிறுவனொருவனை வைத்துவிட்டு எல்லோரும் வெளிக்கொண்டு கொள்ளிடத்தைக் கடப்பதற்கு மரக்கலத்தில் ஏறிச் சென்றார்கள். சிவபெருமானுடைய திருவருளாற் சூறைக்காற்றுச் சென்றலைக்கக் கலங்கவிழ்ந்தது. சிலப்பிராமணர்களும் மனைவியர்களும் பிள்ளைகளும் நீரிற் விழ்ந்து துன்பமடைந்து இறந்தார்கள். ஆழமாகிய நீரில் செல்லாது எஞ்சிய சிறுவனைச் சிவபெருமான் தமது திருவருளுக்கு இலக்காக்கி, வேதாகமங்களை உபதேசித்து, சிவபுண்ணியங் களைச் செய்யுமாறு வைத்தருளினார்.

முன்னொருகாலத்தில் குமாரக்கடவுள் திருக்கைலாச மலையினின்றும் சிவபெருமானுக்குப் பூசைசெய்வதற்கு உரியவர் என்று திருப்பிடவூரில் சிவப்பிராமணர்களைக்கொண்டு வந்து வைத்தனர். சிவபெருமான் அவர்களுட் சிலரை அழைத்து நித்திய நைமித்தியங்களைச் செய்யும்படி வைத் தருளினார். வினைத்தொடர்ச்சியற்ற அவ்வந்தணர்கள் ஆன்ம நாயகராகிய சிவபெருமான் நல்வினை செய்பவர்களை அருளுந் தன்மையும், தீவினை செய்பவர்களைத் தண்டிக்குந் தன்மையை யும் மனதில் நினைத்து, அச்சமும் அன்புமுள்ளவர்களாய், நித்திய நைமித்தியங்களைச் சிவபெருமானுடைய திருவுள்ளத் துக்கு இயையவும் மூவுலகும் வியக்கும் வண்ணமும் செய்தார் கள். இச்சரித்திரம் திருவானைக்காப் புராணத்திற் காணப் பட்டது.

ஆதிசைவர்கள் பூசிப்பதனால் சர்வசித்திகளும் உண்டா கும். சதாசிவமூர்த்தியினுடைய பஞ்சவத்திரங்களால் தீட்சிக்

கப்பட்ட கௌசிகர் முதலிய முனிவர்களுடைய வமிசத்தில் உதித்தவராயும், அங்கப்பழுதற்றவராயும், சமயாசாரபரிபாலக ராயும், இடம்பம் அசூயை முதலிய குற்றங்கள் அற்றவராயும் உள்ளவரே பரார்த்தபூஜை செய்தற்கு யோக்கியராவர். உபவீதம், உருத்திராக்ஷம், உட்டிணீஷம், உத்தரீயம், விபூதி என்பவை ஆசாரியருக்குரிய பஞ்சமுத்திரைகளாம். ஆசாரியர் விபரீதக்கிரியைகளைச் செய்தால் அவர் க்ஷயரோகத்தால் தண்டிக்கப்படுவர்.

கோச்செங்கட்சோழநாயனார், புகழ்ச்சோழநாயனார், அமர் நீதிநாயனார் முதலிய நாயன்மார்களும், முசுகுந்தன் முதலிய அரசர்களும் பிறபெரியோர்களும் ஆகமவிதிப்படி பெரும் பொருள் செலவிட்டுப் பழையகோயில்களைப் பெரிதாக்கியும், சீர்பெறப் புதுப்பித்தும், சுற்றுக்கோயில் கோபுரம் முதலிய பல உறுப்புக்களுடன் புதிய ஆலயங்களையுண்டாக்கியும், விதி முறையாற் பிரதிட்டை செய்வித்தும், நித்தியபூசை புரிவித்தும், திருவிழாக்களைத் தவறாது நடாத்துவித்தும், பூசைவிழாக்கள் வழுவாது நடைபெற்றுவருவதற்கு நிபந்தங்கள் அமைத்தும், அன்புமேற்கொண்டு தரிசித்தும் வந்த சிவபுண்ணியப் பேற்று லன்றோ தாம்தாம் விரும்பிய பயன்களை எய்தி இன்புற்றார்கள். அது பெரியபுராணம், கந்தபுராணம், தலபுராணங்கள் முதலிய வற்றால் நன்கு தெளியப்படும்.

இப்படியே யொருபகலி லெழுவரையுந் தாபித்து
மெய்ப்பரிவில் வழிபாடு விதிமுறையாற் புரிவித்துச்
செப்பரிய புகழாரூர்த் தேவனுக்கு விழாச்செய்வான்
முப்புவனங் களும்போற்று முசுகுந்தன் முன்னினனால்.

பூக்கமலா புரிவாழும் புனிதனுர்க் கன்னதற்பி
னேங்குதிரு விழாநடத்தி யொழிந்தபதிப் பண்ணவர்க்கு
மாங்கதுபோ னிகழ்வித்தே யந்தமின்சீர் முசுகுந்தன்
பாங்கில்வரு வீரருடன் பாருலகம் புரந்திருந்தான்.

—கந்தபுராணம் கந்தவிரதப்படலம்.

## 10. நித்தியாதி கருமங்கள்.

நித்தியம் முதலிய கருமங்கள் நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்றும். இம்மூன்றும் நித்தியம் நித்தியாங்கம் என்றும், நைமித்திகம் நைமித்திகாங்கம் என்றும், காமியம் காமியாங்கம் என்றும் ஒவ்வொன்று இவ்விரண்டாய் அறு வகைப்படும். நித்தியகருமங்கள் ஸ்நானம், தருப்பணம், சிவார்ச்சனை, அக்கினிகாரியம் செய்தலும் பிறவுமாம்.

நித்தியாங்க கருமங்கள் நித்திய கருமலோபம் வந்தபோது அதற்குப் பரிகாரஞ்செய்தலும், அஷ்டபந்தன சலனம் வந்தால் மீளவும் அஷ்டபந்தனம் சாத்தலும், * சாம்வத்சரிகப் பிராயச் சித்தமாகப் பவித்திரம் சாத்துதலும், சிவராத்திரி, அர்த்தோ தயம், மகோதயம், அபரபக்க அஷ்டமி, பூர்வபக்க அஷ்டமி, பிரதோஷம், அமாவாசை, பௌர்ணிமை, சூரிய சந்திர கிரகணம், மாசசங்கிராந்தி முதலிய புண்ணியகாலங்களில் விசேஷ பூஜைசெய்தலும் பிறவுமாம். நைமித்திக கருமங்கள் பிரதிஷ்டை, தீக்ஷை, மகோற்சவம், † நவகலசஸ்நபனம், அஷ்டோத்தர சதகலசஸ்நபனம், சகஸ்ரகலசஸ்நபனம் முதலா யினவாம். நைமித்திகாங்க கருமங்கள் பிரதிஷ்டை முதலிய வற்றிற்கு ஆசாரிய தக்ஷிணையும், தீக்ஷக்குச் சபிண்டீகரணத் துடன் கூடிய அந்தியேஷ்டியுமாம்.

காமிய கருமங்கள் சித்திகளைப்பெற விரும்பி விசேஷ தினங்களிலே விசேஷமாகச் செய்யும் விரதம், பூசை, செபம்

---

* சம்வத்சரம் - வருடம், ஒருவருடத்தில் நாடோறும் செய்யும் பூசையில் மந்திரலோபம் முதலியவற்றால் சேர்ந்த குறைவைப் பூர்த்தி செய்யும்பொருட்டுப் பவித்திரம் சாத்துவதாம்.

† நவம் - ஒன்பது. அஷ்டோத்தரசதம் - நூற்றெட்டு, சகஸ்ரம் - ஆயிரம்.

முதலாயினவாம். காமியாங்க கருமங்கள் விதிப்படி செய்யும் விரதோத்தியாபனம் முதலாயினவாம்.

ஆன்மாக்களது பக்குவநோக்கி, அருள்செய்யும் நிமித்தமாகச் சிவபெருமான் ஒருவரே சந்திரசேகரர் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய திருமேனிகளைக் கொண்டருளினர். சிவபெருமான் பிதாவும் விக்கினேசுவரர் சுப்பிரமணியர் வைரவர் வீரபத்திரர் என்னும் நால்வரும் திருக்குமாரர்களென்றும் உண்மை நூல்கள் செப்புகின்றன. அவ்வாறு புகழப்படுதல் ஆன்மப் பிரயோசனம் குறித்தேயாம் என்பது "சிவனதாடலின் வடிவமாயுற்றிடுஞ் செவ்வேள்."

"ஈசனேயவ னாடலான் மதலையா யினன்காண்
ஆசிலாவவ னாறுமுகத் தண்மை யாலறிநீ
பேசிலாங்கவன் பரனொடு பேதகனல்லன்
தேசுலாவகன் மணியிடைக்கதிர் வருந்திறம்போல்."

—கந்தபுராணம்.

முதலிய அருள்வாக்குக்களினாலே நன்கு தெளியப்படும்.

இம்மூர்த்திகளுக்குச் செய்யப்படும் நித்தியம் நித்தியாங்கம் முதலிய வழிபாடுகளில் மந்திரபேதம் இருக்குமேயன்றிக் கிரியாபேதம் இல்லை; ஆகையால் விநாயகர் முதலியோருக்கும் சிவலிங்கப்பெருமானுக்குக் கூறியபிரகாரமே நித்தியமுதலாய கிரியைகளைச்செய்க வென்று சிவாகமங்கள் செப்புகின்றன.

---

## 11. உற்சவம்.

உற்சவம் என்பது உத்தமயாகம் எனவும், மேலான பஞ்சகிருத்தியம் எனவும், சிருஷ்டிமார்க்கத்தைக் குறிப்பது எனவும் போகமோக்ஷங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும்.

உத்தமயாகமாகிய உற்சவத்தைச் செய்தவர்களும், செய்வித்தவர்களும், உதவி செய்தவர்களும் சகல போகங்களையும் அனுபவித்து மோக்ஷத்தை அடைவார்கள்.

"விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும் ஞானமுண்டாகும், எல்லாமங்களமும் உண்டாகும்" எனவும், "அசுரர்களின் அழிவின் பொருட்டு உற்சவத்தைச் செய்க" எனவும், "சர்வதோஷ நிவிர்த்தியின் பொருட்டும், சர்வலோக சுகத்தின்பொருட்டும், சர்வதேவபிரியமாகவும், சர்வப்பிராணிகளின் சுகத்தின் பொருட்டும், அரசர்களுக்கு விஜயசித்தியின் பொருட்டும், எல்லாரையும் இரட்சித்தற் பொருட்டும் உற்சவத்தைச் செய்க" எனவும், "புத்தி முத்தியைக்கொடுப்பது; சர்வான்மாக்களுக்கும் சுகத்தைத் தருவது; பரிசுத்தமானது; எப்பொழுதும் விஜயத்தை உண்டாக்குவது; சர்வசித்தியையுங் கொடுப்பது; இஷ்டகாமியபலனைத் தருவது" எனவும் சிவவாக்காகிய திவ்ய ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையை வெளியிடுகின்றன. தேவாரம் முதலிய திருமுறைகளும் உற்சவங்களைப் பற்றி ஆண்டாண்டு விசேஷித்துக் கூறுகின்றன. ஆகமவிதிப்படி உற்சவம் செய்து பற்பலர் பேறுற்றமையைச் சூதசெனிமாலையாகிய புராணங்களும் விரித்து அறிவுறுத்துகின்றன. இவற்றினாலே மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் அண்ணலாரது விழாக்களை மனவுறுதியோடு நடத்துதலும், தரிசித்தலுமேயாமென்னு முண்மை இனிது பெறப்படுகின்றது.

**மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்**
**அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்**
**கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்**
**உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்.**

—திருஞானசம்பந்தநாயனுர்புராணம்.

## 12. உற்சவாரம்பம் மூன்றுவிதம்.

துவஜாரோகணபூர்வம், பேரீதாடனபூர்வம், அங்குரார்ப்பண பூர்வம் என உற்சவாரம்பம் மூன்றுவிதமாம். முதலில் துவஜாரோகணஞ் செய்து பின்பு பேரீதாடனமும் அங்குரார்ப்பணமும் செய்தல் **துவசாரோகண பூர்வமாம்**. முதலில் பேரீதாடனமும் துவசாரோகணமுஞ் செய்து, அங்குரார்ப்பணஞ் செய்தல் **பேரீதாடன பூர்வமாம்**. முதலில் அங்குரார்ப்பணஞ் செய்து, அதன்பின் பேரீதாடனமும், பின்பு துவசாரோகணமுஞ் செய்தல் **அங்குரார்ப்பண பூர்வமாம்**. துவசாரோகண பூர்வமானால் சர்வபிராணிகளுக்கும் சுகமுண்டாகும். பேரீதாடன பூர்வமானால் தேவர்கள் பிரீதியடைவார்கள். அங்குரார்ப்பண பூர்வமானால் சர்வசம்பத்தும் செல்வமுமுண்டாம். இவ்வாறு ஸ்ரீ வாதுளத்திற் கூறப்பட்டது.

சௌரோற்சவம் துவசாரோகண பூர்வமாகச் செய்யத்தக்கது. சாந்திரமும் தைவிகமும் அங்குரார்ப்பண பூர்வமாகச் செய்யத்தக்கன. பேரீதாடன பூர்வமும் உற்சவத்தில் மேலானது. சௌரோற்சவத்தில் திரவியமில்லாதபோதும் சங்கடமுற்றபோதும் சாந்திர உற்சவமாவது தைவிக உற்சவமாவது செய்க. சாந்திர தைவிகோற்சவங்கள் துவசாரோகணபூர்வமாகவும் செய்யலாம். மாறிச்செய்தல் குற்றமாம். இவ்வாறு உத்தரகாரணாகமத்திற் கூறப்பட்டுள்ளது.

---

## 13 மூவகை உற்சவம்.

உற்சவமானது **நித்தியோற்சவ**மும், **நைமித்தியோற்சவ**மும், **காமியோற்சவ**முமென மூன்றுவிதமாம். தினந்தோறும் நித்திய பூசாந்தத்திற் செய்வது நித்தியோற்சவமாம். வருஷந்

தோறும் குறித்த மாதத்தில்வரும் திதி, நக்ஷத்திரம், சங்கிராந்தி என்பவற்றுள் ஒன்றை அந்தமாகக்கொள்வது நைமித்தியோற்சவமாம். இஷ்டகாலத்திற் செய்வது காமியோற்சவமாம். உற்சவமானது **நித்தியோற்சவமும் மாசோற்சவமும் வருஷோற்சவமு**மென மூன்று விதமாமென்று அருணாசலோற்சவ பத்ததியிற் சொல்லப்பட்டிருக்கிறது. உற்சவமாவது **மாசோற்சவம் மகோற்சவம் பக்ஷோற்சவம்** என மூன்று விதமாமென்று குமாரதந்திரம் கூறும். உற்சவமானது **வாரோற்சவம் பக்ஷோற்சவம் மாசோற்சவ**முமென மூன்றுவிதமுமாம்.

வாரோற்சவம் புண்ணியத்தையும், பக்ஷோற்சவம் புஷ்டியையும், மாசோற்சவம் விஜயத்தையும் கொடுக்கும். ஆதித்தியவாரோற்சவம் உருத்திரபதவியையும் ஆரோக்கியத்தையும், சோமவாரோற்சவம் சௌக்கியத்தையும், * மங்கலவார உற்சவம் கிராமவிஜயத்தையும், புதவார உற்சவம் சர்வகாமிய சித்தியையும், † குருவார உற்சவம் வித்தையையும், ‡ சுக்கிரவார உற்சவம் மகத்தான செல்வத்தையும், மந்தவார உற்சவம் அபமிருத்து நாசத்தையும் உண்டாக்கும்.

---

## 14 அமாவாசை உற்சவம்.

அமாவாசையில் மூலலிங்கத்துக்கும் ஏனையமூர்த்திகளுக்கும் அபிஷேக அலங்கார நிவேதனம் செய்து உற்சவம் செய்க. அமாவாசை உற்சவம் செய்பவர் புண்ணியபேற்றை அடைவர். அகாலமழை ரோகம் முதலியன உளவாகா. அமாவாசை சோமவாரத்தோடு கூடிவரின் விஷுபுண்ணிய காலத்துக்கும், சிவராத்திரிக்கும் ஒப்பாகும். அமாவாசை திருவாதிரையோடு சோமவாரத்தில்வரின் கோடியாக பலனையும் கோடி தபோதான பலனையுங் கொடுக்கும்.

---

* மங்கலவாரம் - செவ்வாய்க்கிழமை. † குரு - வியாழன்
‡ சுக்கிரன் - வெள்ளி.

பௌர்ணிமை உற்சவத்தை அமாவாசை உற்சவத்திற் கூறியவாறு செய்க. இதற்குப் பிரமாணம் மகோற்சவவிதியிற் காண்க.

---

## 15. சங்கிராந்தி உற்சவம்.

ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாச சங்கிராந்தியும் சடசீதிமுகம் எனப்படும். இவைகளிலே மாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாத சங்கிரமும் விஷ்ணு பதி எனப்படும். இவைகளிலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

தக்ஷிணாயனமாகிய ஆடிமாச சங்கிரமத்திலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம். உத்தராயண மாகிய தைமாச சங்கிரமத்திலே மாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம்.

சித்திரை ஐப்பசி என்னும் இரண்டுமாச சங்கிரமமும் விஷு எனப்படும். இவைகளிலே மாசம் பிறக்குமுன் எட்டு நாழிகையும் பின் எட்டு நாழிகையும் புண்ணியகாலம்.

சூரிய கிரகணத்திலே பரிசகாலம் புண்ணியகாலம். சந்திரகிரகணத்திலே விமோசனகாலம் புண்ணியகாலம்.

சங்கிராந்தி புண்ணியகாலத்திலும் கிரகணபுண்ணிய காலத்திலும் விசேஷபூசை செய்து உற்சவம் செய்க.

---

## 16. மாசபூசை.

தை முதல் ஆடிவரை உத்தராயணம். இது சூரியன் உத்தரமாகிய வடக்குதிக்கில் செல்வது. இது தேவர்களுக்குப்

பகற்காலம். ஆடி முதல் மார்கழிவரை தக்ஷிணாயனம். இது சூரியன் தக்ஷிணமாகிய தெற்குத் திக்கில் செல்வது. இது தேவர்களுக்கு இராக்காலம். மாதம் ஒன்றிற்கு ஐந்துநாழிகை யாக, பன்னிரண்டு மாதங்களும் அவர்களுக்கு அறுபது நாழிகையாகின்றது.

சிவபெருமானை அருச்சித்தற்குரிய முக்கிய காலங்கள் உஷக்காலம், பிராதக்காலம், மத்தியான்னம், சாயான்னம் அர்த்தயாமமென்றைந்தாம். மார்கழிமாதம் உஷக்காலம். தை மாதம் பிராதக்காலம். சித்திரை மாதம் உச்சிக்காலம். ஆடி மாதம் சாயங்காலம். ஐப்பசி மாதம் அர்த்தயாமமாம்.

## 17. தனுர்மாசபூசை.

ஆகையால், மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் உஷக் காலத்தில் சிவாகமவிதிப்படி அருச்சிப்பவர்கள் இம்மை மறு மைப் பயன்களை அடைவார்கள். மார்கழி மாத உஷக்காலத் தில் ஒரு சந்தியிற் செய்யும் பூசையானது, ஆயிரம் நாட்களிற் செய்த சிவபூசைக்குச் சமமாகும். மார்கழித் திருவாதிரை நக்ஷத்திரத்திற் சிவபெருமானை வழிபட்டு சுவஸ்திகமண்ட லத்தைப் பூசித்து, மூலலிங்கத்துக்கு விசேஷமாக நெய்யாலும் இளவெந்நீராலும், ஸ்நபனகும்பத்தாலும் அபிஷேகித்துத் திருவூஞ்சல் விழாச் செய்க.

## 18. திருவூஞ்சல்*

சிவபெருமான் திருவருட்சத்தி வடிவமைந்த ஊஞ்சலின் மீதிருந்தாடுதல் ஆன்மாக்களுடைய குற்றங்களை அலைத்துப் பிறவித்துன்பங்களையும் பிறவிக்குக் காரணமாகிய பாசங்களையும்

* திருவூஞ்சல் டோலோற்சவம் எனப்படும்.

சேதித்து, ஆன்மாக்களை அடிமைக்கொண்டு திருவருள் வாயிலாகத் தம்முடன் கூட்டும் குறிப்பாம். அத்திருவருளாகிய திருவடியே ஆன்மாக்களுக்கு உறைவிடமாம்.

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
**ஆதிரைநாள்** காணுதே போதியோ பூம்பாவாய்.

நற்று மரைமலர்மே ஞன்முகனு நாரணனும்
முற்றுங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றூர்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
**பொற்றுப்புக்** காணுதே போதியோ பூம்பாவாய்.

—திருஞானசம்பந்தமூர்த்திகள்.

## 19. மகரமாசபூசை.

மகரராசியிற் சூரியன் வரும் தை மாசத்தில் பூச நக்ஷத்திரம் பூரணையுடன் கூடிவரின் உத்தமம். கூடாது வந்தாலும் நக்ஷத்திரம் பிரதானம். அத்தினம் யாகசாலையின் மத்தியிலுள்ள வேதிகையில், உமாகாந்த மண்டலத்தில் மண்டலேசுரனைப் பூசித்து, அத்திச்சமித்திஞல் அக்கினியில் விசேடமாக ஓமம் செய்க. விசேஷமாகத் தேனுலும் ஸ்நபனகும்பத்தாலும் அபிஷேகம் செய்து, கிருஷ்ணகந்தஞ் சாத்தி, உற்சவாதிகளைச் செய்க. மகரமாத பூசையை விதிப்படி செய்தவர்கள் ஆயுள் செல்வம் ஆகியவற்றை அடைவார்கள்.

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடுந்
**நைப்பூசங்** காணுதே போதியோ பூம்பாவாய்.

—திருஞானசம்பந்தமூர்த்திகள்.

கிருஷ்ணகந்தமாவது குங்குமப்பூ, புனுகு, பச்சைக் கர்ப்பூரம் என்னும் பரிமளத்திரவியங்களைப் பனிநீர் கலந்து காரகிற் கட்டையாற் சேர்க்கப்பட்ட சந்தனம்.

---

## 20. கும்பமாசபூசை.

கும்பராசியிற் சூரியன் வரும் மாசி மாசத்தில் மக நக்ஷத்திரத்தில் கம்பளபூசை செய்தவர்கள் ஞானத்தையும், புத்திர பௌத்திர விருத்தியையும், சீராரோக்கியத்தைம், இஷ்ட சித்திகளையும், சிவதீக்ஷாபலனையும் எய்துவார்கள். பதும மண்டபத்தில் மண்டலேசுரனைப்பூசித்து, அக்கினியில் அரசஞ் சமித்தினால் விசேஷமாக ஓமஞ் செய்தல்வேண்டும்.

பஞ்சவர்ணமுள்ள இரத்தினகம்பளத்திலேனும், அதற்குத் திரவியமில்லையேல் பருத்தி நூல் வஸ்திரத்திலேனும் நெய்பால் பச்சைக்கர்ப்பூரம் என்னும் இத்திரவியங்களை லேபனஞ் செய்து கம்பளத்தை அப்பாத்திரத்தில் வைத்துப் பூசித்துச் சர்வாலங்காரங்களுடனும் பிரதக்ஷிணமாக வந்து, சிவலிங்கத்திற் சாத்திப் பூசித்தல் வேண்டும்.

---

## 21. மீனமாசபூசை.

சூரியன் மீனராசியிற் சஞ்சரிக்கும் பங்குனி மாதத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் * ததிபூசை செய்தல் வேண்டும். யாக சாலை வேதிகை மத்தியில் சுவத்திகமண்டலத்தில் சிவனைப் பூசித்து நாயுருவிச்சமித்தினால் ஓமஞ்செய்து சந்தனாதித் தயிலம் முதலியவைகளால் அபிஷேகம் பண்ணி, விசேஷ

* ததி - தயிர்.

மாகத் தயிரினல் அபிஷேகித்து நைவேத்தியம் செய்து உற்சவம் செய்க. அதனல் ஆரோக்கியமுண்டாம்.

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணதே போதியோ பூம்பாவாய்.

—சம்பந்தமூர்த்தி நாயனர் தேவாரம்.

## 22. மேஷமாச பூசை.

சூரியன் மேடராசியில் வரும் சித்திரை மாசத்திலே சித்திரை நக்ஷத்திரத்தில் இலட்சுமீகாத்தின் பொருட்டும் சர்வசம்பத்தின் பொருட்டும் தமனோற்சவம் செய்யத்தக்கது. தமனம் என்பது மருக்கொழுந்து. யாகசாலையின் மத்தியில், சர்வதோபத்திர மண்டலம் அமைத்து, அதிற் பரமேசுரனை அருச்சித்து, ஓமஞ்செய்து மருக்கொழுந்தைப் பூசித்து வாத்திய சகிதமாகப் பிரதக்ஷிணம் வந்து, சிவபெருமானுக்குச் சாத்துக. விதிப்படி தமனோற்சவம் செய்யின், வேந்தனுக்கு விஜயமுண்டாம். புத்திரசம்பத்தும் க்ஷேமமுமுளதாகும். வசந்தோற்சவமும் செய்க.

மனங்குளிர வன்னவர்கள் பின்னு முன்னான்
மருவில் நைமித்திகங்கள் வகுப்பான் மாதத்
தினங்கடொறு முணர்ந்து மதுமாத மேவத்
திருந்து தமனகவிதியைச் செலுத்து முன்னு
வனங்கனது வளநகர மனையுங்காலை
யங்நகர்போன் மன்னவனிங் கமைக்க வென்ன
வினங்கொளிருஞ் சனங்கள் பணிந்தின்ப மெய்தி
யெந்தை திருவசந்த விழாவெழு வித்தார்கள்.

மருக்கொழுந்தின் முன் வரலாறு சோமசம்புபத்ததியிற் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு:—முற்காலத்தில் பிரம

சிவனுடைய கோபத்திலிருந்து தமனர் என்னும் பெயரை யுடைய வைரவர் உற்பத்தியாயினர். அவரால் அசுரர் ஆகி யோர் அடக்கப்பட்டனர். அதனுல் சந்தோஷமுடைய பரமேசுரன் அத்தமன வைரவரை நோக்கி, நீ பூமியிற் செடி யாகத் தோன்றக் கடவாய்; உன்னுடைய தளிர் முதலிய வற்ருல் எம்மைப்பூசிப்பவர் மேலான ஸ்தானத்தை அடைவர். சித்திரைப்பூரணையில் மருக்கொழுந்தாலாகிய உற்சவத்தைச் செய்தால் சிறந்த பலனுண்டாம் என்று கூறியருளினுர். இதனுல் தமனோற்சவம் சிறந்ததென்று அறியப்படும்.

## 23. இடபமாச பூசை.

சூரியன் இடபராசியில் வரும் வைகாசி மாசத்திலே விசாக நக்ஷத்திரத்திலே கந்தபூசை செய்யத்தக்கது. சுவஸ்திக மண்டல பூசை செய்து வில்வச் சமித்தினுல் ஓமம் பண்ணி, ஸ்நபனகும்ப பூசை செய்து, கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் முதலிய பரிமளத் திரவியங்களோடு பனிநீரும் சேர்க்கப்பட்ட கந்தத்தைப் பூசித்து சர்வ வாத்தியங்களோடும் பிரதக்ஷிண மாக வந்து மூலமூர்த்தியில் அபிஷேகிக்க வேண்டும். வைகாசி யில் கந்தபூசை செய்தவர் அடையும் பலன் சாயுச்சியமாம். குமாரதந்திரப்படி சுப்பிரமணியருக்கு விசேஷ பூசை உற்சவம் செய்க.

## 24. மிதுனமாச பூசை.

சூரியன் மிதுனராசியில் வரும் ஆனியில் மூலநட்சத் திரத்தில் பழ பூசை செய்க. வேதிகை அமைத்து நவநாப மண்டலத்தைப் பூசித்து, அரசஞ் சமித்தினுல் ஓமஞ்செய்து பலா வாழை முதலிய பழவகைகளில் அபக்குவமானவற்றை

நீக்கி, பக்குவமான பழவகைகளினுற் சேர்க்கப்பட்ட பஞ்சாமிர்தத்தையும் மற்றும் பழங்களையும் பூசித்துப் பிரதக்ஷிணமாகக் கொண்டுவந்து மூலலிங்கத்தில் அபிஷேகஞ் செய்க. பின்பு ஸ்நபன கும்பத்தால் அபிஷேகம் பண்ணி உற்சவம் செய்க. ஆனிமாதத்தில் பழபூசை செய்தவர்கள் காரிய ஜயத்தை அடைவார்கள்.

---

## 25. கர்க்கடகமாச பூசை.

சூரியன் கர்க்கடகத்தை அடைகின்ற ஆடி மாதத்திலே உத்தராட நக்ஷத்திரத்தில் க்ஷீரபூசை செய்க. க்ஷீரம் - பால். யாகசாலையின் மத்தியில் வேதிகை அமைத்து சர்வதோபத்திர மண்டலத்தில் சிவபெருமானுக்குப் பூசை செய்து மாஞ்சமித்தால் ஓமஞ் செய்து பாலைப்பூசித்து அபிஷேகஞ் செய்து, பாலைக்காய்ச்சி நிவேதிக்க. விசேஷ பூசை செய்து உற்சவம் செய்க. க்ஷீரபூசை விதிப்படி செய்வதினுல் விஜயமும் புண்ணியமு முண்டாகும்.

---

## 26. பவித்திரோற்சவம்.

ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆத்தியான்மிகம் என்னும் மூவகைத் துக்க நிவிர்த்திப்பொருட்டுப் பவித்திரம் சாத்துவதாம். பூசைகளின் குறைவை நீக்கிப் பரிசுத்தம் செய்வதால் பவித்திரம் எனப் பெயர் பெற்றது. ஒரு வருடத்தில் நாடோறும் செய்யும் பூசையில் மந்திரலோபம், திரவியலோபம், கிரியாலோபம் முதலியவைகளினுலும், மோகத்தினுலும், அஞ்ஞானத்தினுலும், இராசசோர பய முதலியவற்றினுலும் நேர்ந்த குறைவைப் பூர்த்தி செய்யும்பொருட்டுப் பவித்திர

சமர்ப்பணம் செய்யவேண்டும். இந்தப் பவித்திரம் நாடோறும் செய்வது நைவசிகம் என்றும், வருஷந்தோறும் செய்வது வார்ஷிகம் என்றும் இருவகையாம். இருதிறத்தில் ஒன்று மாத்திரம் செய்தால் அமையாதோ எனில்: விசேட கர்ம மாகையால் நாடோறும் செய்ய முடியாது: சூத்திரத்துக்குப் பதிலாகப் புஷ்பம் தருப்பை முதலியவற்றால் நாடோறும் செய்ய வேண்டும். அந்தக் குறைவு பூர்த்தியாக வருஷ பவித்திரமும் செய்யவேண்டும். இதன் விஸ்தாரம் பவித்தி ரோற்சவ விதியிற் காண்க.

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
*பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

—திருஞானசம்பந்தநாயனர்.

"ஆடிபுரட்டாதிக்குட்புகழ்பதிஞன்கட்டமிகவொன்றிற்பூசை—
தருந்தகுதியிகுதிகுறைதவறுநீங்கக்கந்தநவந்தருபக்தர்சமைத்
தியாகம்—
பரந்தவிரதாங்கமுடன்பவித்திரத்தைப்பயில்வித்து."

—கோயிற்புராணம்.

ஆடிப்பூரத்தில் உமாதேவியாருக்குப் பூரகர்ம உற்சவத்தைச் செய்க. அது சர்வசாந்தியையும் சகல சித்தியையும் சுபத்தையும் புண்ணியத்தையும் கொடுக்கும்.

ஆடி மதியிற் பூரத்தி லகில முயிர்த்த பார்ப்பதிதன்
தோடு விரிதா மரைப்பதங்க டொழுது வணங்கிப் பூசிப்போர்
பீடு விரியும் விழுச்செல்வம் பெருக வாழ்ந்து கடைநாளிற்
சேடு விரியு மவனுலகிற் சென்று போகந் திளைப்பாரால்.

—பேரூர்ப்புராணம்.

---

* பெருஞ்சாந்தி - பவித்திரோற்சவம்.

## 27. சிம்மமாச பூசை.

சூரியன் சிம்மராசியிற் செல்லுகின்ற ஆவணி மாதத்து அவிட்ட நக்ஷத்திரத்தில் சர்க்கரா பூசை செய்க. சுவாயம்புவ மண்டலத்தில் சிவனைப் பூசித்து மூங்கிற் சமித்தால் ஓமஞ் செய்து, ஸ்நபன கும்பாபிஷேகம் செய்க. எள்ளை நன்ருக அலம்பிச் சோதித்து சர்க்கரையுடன் கலந்து பாத்திரத்தில் இட்டுப் பூசித்து நைவேதித்து அருக்சிக்க. விதிப்படி சர்க்கரா பூசை செய்தவர்கள் விரும்பிய சித்திகளைப் பெறுவார்கள்.

---

## 28. கன்னிமாச பூசை.

சூரியன் கன்னிராசியிற் செல்லும் புரட்டாதி மாசத்து உத்தராட்டாதியிலே சௌபாக்கிய சம்பத்தின்பொருட்டு அபூப பூசை செய்க. * அபூப வகைகள்: வடை தேன்குழல் எள் ளுண்டை முதலியவைகள். வேதிகையிலே பத்திரமண்டலத் தில் சிவபெருமானைப் பூசித்து நாயுருவிச் சமித்தால் ஓமஞ் செய்து, அபூபம் முதலியவைகளை நிவேதித்து, இராசோப சாரமாகச் சிவபெருமானைப் பூசிக்கவேண்டும். புரட்டாதியில் தேவிக்கு நவராத்திரி பூசை செய்யவேண்டும். செய்வோர் முடிவில்லாத இன்பத்தை நுகருவார்கள்.

கன்னி மதியின் வரையுயிர்த்த கன்னி மகிழப் பேரன்பான்
மன்னு நவராந் திரிபூசை மரபி னியற்று முறைமையோர்
நன்னருலகம் பணிகேட்ப நவைதீர் செல்வத் திடைமூழ்கி
முன் னுங் கதியி னினிதுறீஇ முடிவி லின்ப நுகர்வாரால்.

—பேரூர்ப்புராணம்.

## 29. துலாமாச பூசை.

சூரியன் துலாராசியிற் செல்லும் ஐப்பசி மாதத்தில் அசுபதி நக்ஷத்திரத்தில், சர்வ சௌபாக்கியத்தின் பொருட்டு

---

* அபூபம் - பணிகாரம்.

அன்னுபிஷேகம் செய்க. அன்னம் உயிரை நிலைப்படுத்துவது; ஆகையால் அன்னுபிஷேகம் சிவப்பிரீதியாயுள்ளது. அன்ன ரூபம் சிவரூபம் என்று நினைத்தற்பாலது. யாகசாலா வேதிகை யில் கௌரீலதா மண்டலத்தில் சிவனைப் பூசித்து ஓமஞ்செய்க. அதிசூடுள்ள அன்னத்தையும் மந்தோஷ்ணமான அன்னத்தை யும் நீக்கிச் சாதாரண சூடுள்ளதும் பக்குவமாகச் சமைக்கப் பட்டதுமாகிய அன்னத்தைக் கிரகித்து, அதைச் சுத்த பாத்திரத்திற் போட்டு நெய்யினுற் சுத்திபண்ணிப் பரிசாரக னுடைய சிரசில் வைத்து வாத்தியகோஷத்துடன் பிரதக்ஷிண மாக வந்து, மூலபேரத்தில் அபிஷேகஞ்செய்க. சுத்தான்னம், தேன் அன்னம், தயிர் அன்னம், பாயசான்னம், எள்ளன்னம், சர்க்கரான்னம், பருப்புப் பொங்கல், புளி அன்னம் முதலிய அன்னவகைகளை நிவேதித்துப் பூசித்து உற்சவம் செய்க.

---

## 30. விருச்சிகமாச பூசை.

சூரியன் விருச்சிக ராசியிற் செல்லும் கார்த்திகை மாசத் தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீப பூசை செய்க. பூரணை யிலும் தீபோற்சவம் செய்யலாம். யாகவேதிகையிற் சர்வதோ பத்திர மண்டலமிட்டுச் சிவபிரானைப் பூசித்து அத்திச் சமித் தால் ஓமஞ் செய்க. மூலபேரத்துக்கு * லாஜபூசை செய்க. தீபதண்டத்தைத் தாபித்துத் தீபாலங்காரம் செய்க. ஒரு பாத்திரத்தில் பஞ்சதீபமேற்றி சோமாஸ்கந்தருடன் கிராமப் பிரதக்ஷிணம் செய்து, தண்டத்தில் தீபத்தை சூரியாஸ்தமன காலத்தில் ஏற்றி நான்கு திக்குக்களிலும் சுவாலிக்கச் செய்க. சுவாலையை இலிங்கமாகப் பாவித்து வணங்கவேண்டும். அக்கினி சூனியமானவுடன் தண்டத்தை ஐந்துபாகம் பண்ணி

* லாஜம் - நென்மலர்.

மூன்று பங்கு மேலும் இரண்டு பங்கு கீழுமாக நடுவில் தண்டத்தை வெட்டுக. தண்டம் கிழக்கில் விழுந்தால் அரசனுக்கும், பிரசைகளுக்கும் விருத்தியுண்டாம். அக்கினிதிக்கில் விழுந்தால் மரணமாம். தெற்கில் சோரபயமாம். நிருதியில் இராசபயமாம். மேற்கில் மோக்ஷசித்தியாம். வாயுவில் ஞானநாசமாம். வடக்கில் செல்வமாம். ஈசானத்தில் வெற்றியுண்டாம். விழுந்தபின் அந்த பஸ்மத்தை எடுத்து, சுவாமிக்கும் சண்டேசுரருக்கும் சாத்துக. ஆசாரியர் முதலியோர் தரித்துக் கொள்க. விதிப்படி தீபோற்சவத்தைச் செய்தவர் விரும்பிய பலனை அடைவர்.

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில்கபா லீச்சரத்தான் றொல்கார்த் திகைநாட்
டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

—ஆளுடைய பிள்ளையார்.

நித்தியத்திருநாள் பக்கவிழா நிகழ்திங்கட்சாறும்
புத்தலரினவேனிற் கட்பொருவரும் வசந்தங்கோடை
மெத்தியமுதுவே னிற்கண்மிதவை நீராட்டுமாரி
மொய்த்தசாரற் பருவந்தன்னிற் பவித்திர முதுவிழாவும்.

அன்புறு கூதிர்க்காலையைப் பசிப்பூரச்சாறு
முன்பனிப் பருவந்தன்னில் வைகறை முகிழ்ந்தபூசை
பின்பனிப் பருவந்தன்னிற் பிறங்குபொன் னூசலாட்டு
மென்பன சிறப்புமான வியற்றுவோர் வீடுசேர்வார்.

—சிவஞானசுவாமிகள் காஞ்சிப்புராணம்.

## 31. உற்சவ மாசம்.

உற்சவமாசங்கள் சாவனமாசம், சாந்திரமாசம், நக்ஷத்திரமாசம், சௌரமாசம் என நான்கு வகைப்படும். இந்த நான்கு

மாசத்திலும் உற்சவத்தைச் செய்யலாம். சௌர மாதத்தில் சாகல்பம் பாவனம் என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. சாவனம், சாந்திரம், நக்ஷத்திரம் என்னும் மாதங்களில் சாந்தி மங்களம் என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. எல்லா உற்சவங்களும் சௌரமாசத்திற் செய்யத்தக்கன. சாவனமாச உற்சவம் சாந்தியையும், சாந்திரமாச உற்சவம் முத்தியையும், நக்ஷத்திரமாச உற்சவம் பாபநாசத்தையும், சௌரமாச உற்சவம் பிரஜாவிருத்தியையும் கொடுக்கும்.

**சாவனோற்சவம்.**

அரசனுடைய ஜன்ம நக்ஷத்திரம், பட்டாபிஷேகதினம், யுத்தாரம்பதினம், லயதினம், எசமானுடைய நக்ஷத்திரம், கிராம நக்ஷத்திரம் முதலியவற்றைத் தீர்த்தாந்தமாக நிச்சயிப்பது **சாவனோற்சவமாம்.** பிரதிஷ்டா நக்ஷத்திரத்தை அந்தமாகக் கொள்வது **பிரதிஷ்டோற்சவமாம்.** இது புத்தி முத்திகளைக் கொடுக்கும்.

**சௌரோற்சவம்.**

சூரியன் ஒவ்வொரு ராசிகளிலும் செல்லுங்காலம் சங்கிராந்தி எனப்படும். பிராதக்காலத்திலாவது சங்கலகாலத்திலாவது மத்தியான்னத்திலாவது அபரான்னத்திலாவது பிரதோஷகாலத்திலாவது அர்த்தராத்திரியிலாவது இராத்திரியின் இறுதியிலாவது சங்கிராந்தி சம்பவிக்கின்றதோ, அக்காலத்தில் தீர்த்தத்தை ஆரம்பிக்க. அத்தீர்த்தம் எல்லாப் பலனையுங் கொடுக்கும். சௌரமாச உற்சவம் சர்வாரிட்டங்களையும் நீக்கும்.

**சாந்திரமாச உற்சவம்.**

எல்லா மாசங்களிலும் பூரணையையும் அமாவாசையையும், வைகாசியில் கிருஷ்ண சதுர்த்தசியையும், மாசியில் சஷ்டியையும், ஆனியில் அட்டமியையும் அந்தமாகக்கொண்டு

தீர்த்தோற்சவத்தைச் செய்வது சாந்திரமாச உற்சவமெனப்படும். அது உத்தமோத்தமமாம்.

**நக்ஷத்திரமாசோற்சவம்.**

தை மாசத்தில் பூசத்தையும், மாசியில் மகத்தையும், பங்குனியில் உத்தரத்தையும், சித்திரையிற் சித்திரையையும், வைகாசியில் விசாகத்தையும், ஆனியில் மூலத்தையும், ஆடியில் உத்தராடத்தையும், ஆவணியில் திருவோணத்தையும், புரட்டாதியில் பூரட்டாதியையும், ஐப்பசியில் அச்சுவினியையும், கார்த்திகையில் கார்த்திகையையும், மார்கழியில் திருவாதிரையையும், எல்லா மாசங்களிலும் திருவாதிரையையும் திருவோணத்தையும் ரோகிணியையும் அந்தமாகக்கொள்வது நக்ஷத்திரமாச உற்சவமாம்.

தானம், ஆலயசேவை, ஓமம், தீர்த்தம், வேதாத்தியயனம் தமிழ் வேதபாராயணம் முதலியவைகளை எல்லாச் சம்பத்தையும் அடைதல் காரணமாக அக்காலத்திலே விசேஷமாகச் செய்க.

ஒரு மாதத்தில் இருமுறை திதியாவது நக்ஷத்திரமாவது வரின் முந்தியதை விட்டுப் பிந்தியதில் தீர்த்தோற்சவத்தைச் செய்க. பிந்தியதிற் சங்கிராந்தியானல் முந்தியதிற் செய்க. முந்திய நக்ஷத்திரம் பூரணையோடு கூடிவரின் பிந்தியதைவிட்டு முந்தியதிற் செய்க.

ஒவ்வொரு வருஷத்திலும் எந்த மாசத்தில் எந்தத் திதியிலாவது நக்ஷத்திரத்திலாவது உற்சவம் செய்யப்பட்டு வந்ததோ, அந்தத் திதி நக்ஷத்திரத்திலேயே உற்சவத்தைச் செய்தல்வேண்டும். செய்யாவிடின் கோயில் அதிகாரிகளுக்கும் கிராமச்சனங்களுக்கும் க்ஷேமமுண்டாகாது. சிகரத்த

பனம் இல்லாத ஆலயங்களில் உற்சவம் செய்தல் ஆகமசம்மதம் அன்று. உற்சவங்கள் மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பதுநாள், பதின்மூன்றுநாள், பதினைந்துநாள், பதினேழு நாள் முதலிய பிரிவுகளையுடையன. ஏழுநாள் முதலாகிய விழாக்களுக்கே துவசாரோகணஞ் செய்யத்தக்கது.

மஹோற்சவத்தின் மத்தியில் வேறு உற்சவம் வந்தால் இரட்சாபந்தனம் யாகம் தீர்த்தம் என்பவைகளை விடுத்து உற்சவத்தை மாத்திரம் செய்க. இதற்குப் பிரமாணம் காமிகத்தும் பீமசங்கிதையிலும் காண்க.

ஆசாரியரும் கோயில் அதிகாரியும் ஊரவர்களும் உற்சவ புண்ணிய காலங்களிலே ஒருகாலப் போசனஞ் செய்து, விதிப்படி விரதமநுட்டித்தல் கடனாகும். தருப்பைப்பாயில் முதலியவற்றில் சயனித்தலும் தைலாப்பியங்கம் ஸ்திரீ சம்போகம் முதலியவற்றை விடுதலும் முறையாகும். அக்கிராமவாசிகள் அவரோகணம்வரை விவாக முதலிய சுபக்கிரியைகளும் பிரயாணமுஞ் செய்தலாகாது.

ஒவ்வொரு தினங்களிலும் காலசந்தி உற்சவத்திற் செய்யும் ஓமம் பலி முதலியவைகளைப் பத்து நாழிகைக்கு உள்ளாகவும், சாயங்கால ஓமம் பலி முதலியவைகளை இரவு பத்து நாழிகைக்குள்ளாகவும் செய்தல் உத்தமம். காலாதீதத்திற் செய்யும் கிரியைகள் பயன்படாவாகையாற் காலந்தவறாது சிரத்தையோடு கிரியைகளைச் செய்தல்வேண்டும்.

---

## 32. உற்சவபேதம்.

உற்சவம் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். துவசாரோகணாதி தீர்த்தாந்தமான

உற்சவம் **சாகல்யம்** எனப்படும். துவஜாரோகண மாத்திரமின்றி மற்றெல்லாக் கிரியைகளையும் சாகல்யத்துக்குக் கூறியவாறு செய்வது **பாவனம்** எனப்படும். பிராதக்காலத்தில் ஓமமும் பலியும் சாயங்காலத்தில் உற்சவமும் செய்வது **சாந்தி** என்னும் உற்சவமாம். எசமானும் குருவும் ஒரு தினத்தை அந்தமாக நியமித்துச் செய்யும் சிவோற்சவம் **மாங்கல்யம்** என்னும் உற்சவமாம். சாகல்ய உற்சவமானது சௌரம், சாந்திரம், சாவித்திரம், கௌமாரம், தைவிகம், பௌவனம், பௌதிகம், கௌணம், சைவம் என ஒன்பது பேதமாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சௌரம் | 27 நாள் | உத்தமம் சௌக்கியத்தைக் கொடுக்கும். |
| 2. | சாந்திரம் | 17 ,, | |
| 3. | சாவித்திரம் | 15 ,, | |
| 4. | கௌமாரம் | 13 ,, | மத்திமம் விஜயத்தைக் கொடுக்கும். |
| 5. | தைவிகம் | 9 ,, | |
| 6. | பௌவனம் | 7 ,, | |
| 7. | பௌதிகம் | 5 ,, | அதமம் செல்வத்தைக் கொடுக்கும். |
| 8. | கௌணம் | 3 ,, | |
| 9. | சைவம் | 1 ,, | |

இங்ஙனம் உற்சவபேதம் ஸ்ரீமத் உத்தரகாரணாகமத்திற் கூறப்பட்டது.

இனிச் சூட்சுமாகமத்திற் கூறிய பிரகாரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | சைவம் | 1 நாள் | அதமம். |
| 2. | கௌணம் | 3 ,, | |
| 3. | பௌதிகம் | 5 ,, | |
| 4. | பௌவனம் | 7 ,, | மத்திமம். |
| 5. | தைவிகம் | 9 ,, | |
| 6. | பைத்ருகம் | 11 ,, | |
| 7. | கௌமாரம் | 13 ,, | உத்தமம். |
| 8. | சாவித்திரம் | 15 ,, | |
| 9. | சாந்திரம் | 17 ,, | |

குமாரதந்தரத்திலே மகோற்சவமானது பைத்ருகம் சௌக்கியம், ஸ்ரீகரம், பௌதிகம், சாத்துவிகம், சிவம் என ஆறு பேதமாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பைத்ருகம் பதினொருதின உற்சவம். சௌக்கியம் ஒன்பதுதின உற்சவம். ஸ்ரீகரம் ஏழுதின உற்சவம். பௌதிகம் ஐந்துதின உற்சவம். சாத்துவிகம் மூன்றுதின உற்சவம். சிவம் ஒருதின உற்சவம். இந்த ஆறு பேதங்களுள் பௌதிகம் சாத்துவிகம் சைவம் ஆகிய உற்சவங்களில் துவஜாரோகணத்தை நீக்குக. ஸ்ரீகரம் முதலியவைகளில் துவஜாரோகணம் செய்க. சுப்பிரபேதாகமத்திலே ஒன்பதுநாள் விழா உத்தமம் என்றும், ஏழுநாள்விழா மத்திமம் என்றும், ஐந்துநாள் விழா அதமம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

---

## 33. ஒருநாள் விழா.

ஒருநாள் விழாவானது கோஷணம் கேவலம் என இருவிதமாம். பேரீதாடனத்தோடும் இரட்சாபந்தனத்தோடும் செய்யும் ஒருநாள் விழா கோஷணம் எனப்படும். இரட்சாபந்தனமும் பேரீதாடனமுமின்றிச் செய்யும் ஒருநாள் விழா கேவலம் எனப்படும். கோஷணம் சர்வசித்தியையும் கேவலம் முத்தியையுங் கொடுக்கும்.

கருத்தாவினுடைய ஜனனதினம், அவர் முத்தியடைந்த தினம், சங்கிராந்தி, சதுர்த்தசி, அட்டமி, அமாவாசை, அயனபுண்ணியகாலம், கிரகண புண்ணியகாலம், தமனோற்சவம், பவித்திரோற்சவம், மாசபூசை, கிருத்திகாதீபம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் ஓர்நாள் உற்சவம் செய்க.

---

## 34. பதினெட்டுநாள் *விழா,

பதினெட்டு நாள் உற்சவத்தில்; கணேசயாகம் ஆறு காலமும்; கந்தயாகம் மூன்றுகாலமும், பக்தயாகம் மூன்று காலமுமாகப் பன்னிரண்டு காலம் பூசைபண்ணி யாகத்தைப் பூர்த்தி செய்து அபிஷேகம் செய்க. (பக்தர்கள் சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.) ஏழாம்நாள் சாயங்காலத்தில் ஆரம்பித்து ஒன்பதாம்நாள் பிராதக்கால உற்சவம் வரையும் அஸ்திர யாகம் நான்கு காலமென்று சொல்லப்படுகின்றது. யாகாந்தத்தில் அஸ்திர ராஜருக்கு அபிஷேகம் செய்க. உற்சவத்திற்கு முதலிலும் நடுவிலும் அந்தத்திலும் சிவபக்தர்களுக்கு விதிப்படி உற்சவத்தைச் செய்க.

ஒன்பதாவது தினம் சாயங்காலத்தில் மகாயாகத்தை ஆரம்பித்து, பதினெட்டாம் நாள் பிராதக்காலம் வரையுமுள்ள ஒன்பது தினங்களிலும் பூசைசெய்து முடிக்க.

முதலில் கணேச யாகவேதிகையில் விக்கினேசுரர், சக்தி அட்டவித்தியேசுரர்களைத் தாபிக்க. பஞ்ச குண்டமாவது ஏகுண்டமாவது போடுக. சமித்து, நெய், அன்னம், நெல், மலர், மோதகம், அபூபம், பலா, மா, வாழை முதலிய பழவகைகள், நாளிகேரம், கருப்பந்துண்டு, முதலியவைகளாற் குரு ஓமம் பண்ணுக. ஓமத்தின் முடிவில் பலியையும், பலி முடிவில் உற்சவத்தையும் செய்தல் கிரமம்.

அஸ்திரயாகத்திற் அஸ்திரமூர்த்தியையும், சக்தியையும், அஷ்டவித்தியேசுரர்களையும் பூசிக்க. மகாயாகத்தில் விசேஷமாக வேதிமத்தியில் சிவனையும் சக்தியையும் அஷ்டவித்தியேசுரர்களையும் பூசிக்க. நவகுண்டத்தில் விசேஷமாக ஓமம் செய்க. ஒவ்வொரு தினமும் சாயங்காலத்திலும் பிராதக்

---

* அஷ்டாதசதின உற்சவம்.

காலத்திலும் விதிப்படி பூசையும், ஓமமும் செய்து பலி போடுக. பலி அந்தத்தில் உற்சவம் செய்க. முதலில் நித்தியோற்சவ பலியும், பின்பு துவசாதி பலிபீடாந்தமாக உற்சவ பலியும் இடுக. இந்திராதி தேவர்கட்குப் பலியிட்டு அதன்பின் தினதேவபலியிடுக.

ஆறும்நாள் உற்சவத்தில் சீகாழியில் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானப்பால் கொடுத்த லீலாபாவனை செய்க. அவ்வுற்சவத்தால் உமாதேவியார் பிரீதியடைவர். சமணர் கழுவேறிய பாவனையும் செய்க.

ஏழாம்நாள் உற்சவத்தில் பிக்ஷாடனமூர்த்தியை அலங்கரித்து, பிராமணருடைய ஆச்சிரமங்களிலும் சிவபக்தர்களுடைய ஆச்சிரமங்களிலும் நிருத்தம் செய்து பிக்ஷையேற்ற பாவனையாகச் செய்க.

எட்டாம்நாள் உற்சவத்தில் அபரான்னத்திலே அருச்சுனனுடைய தவசோதனை செய்த லீலாபாவனையும் மிருகயாத்திரையும் செய்க.

ஏழாம் நாளும் ஒன்பதாம் நாளும் நடேசருக்கு உற்சவம் செய்க. உரிய வாரங்களில் தைலாப்பியங்கம் செய்க.

சூர்ணோற்சவம், தீர்த்தம், மகாபூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், அதன்பின் துவசஅவரோகணம்,* † லோகபால விசர்ச்சனம், மௌனோற்சவம், சத்தியுற்சவம், ‡ உடுபாரோபணம், சண்டயாகம், ஆசார்யோற்சவம் செய்க.

---

* துவச அவரோகணம் - கொடியிறக்கம்.

† உடுபம் - தெப்பம் உடுபாரோபணம் - தெப்பவிழா.

‡ விசர்ச்சனம் - அனுப்புதல்.

## 35. இருபத்தேழுநாள் விழா.*

துவசாரோகணத்துக்கு முதல்நாள் இரவு த்வசாங்குரார்ப் பணத்தைச் செய்க. பின்பு விருஷபத்துக்கு அதிவாசக் கிரியைகளைச் செய்க. மறுநாள் பிராதக்காலத்தில் விருஷபயாகத்தைச் சமாப்திசெய்து, துவசபடத்தைப் பிரதக்ஷிணம்செய்து, துவசபீடத்துக்குத் தெற்குப் பக்கத்தில் தாபிக்க. மண்டபத்துக்கு வெளியில் துவசபீடத்தினுடைய தெற்குப் பக்கத்தில் சந்திரசேகரநாயகரை வடக்கு முகமாகத் தாபனஞ் செய்க. அஸ்திரமூர்த்தியை நன்றாக அர்ச்சிக்க. பின்பு புண்ணியாகத்தைச் செய்க. அபிஷேகம் நியாசம் முதலியவைகளைச் செய்க. கயிற்றினால் படத்தைக்கட்டி திர ராசியில் துவசாரோகணம் செய்க. சக்தி உற்சவத்தில் உபயராசியில் துவசாரோகணம் செய்க. யாகாரம்பங்களுக்கு முதலில் யாகாங்குரார்ப்பணஞ் செய்க. பின்பு யாக பூசையைச் செய்து ஓமகருமங்களைச் செய்க.

துவசாரோகண தினத்தில் சாயங்காலந்தொடங்கி பதின்மூன்றாந்தினம் பிராதக் காலம் வரையும் பன்னிரண்டு தினங்களுக்கு கணேச யாகபூசை செய்து யாக கும்பங்களைக் கணபதிக்கு அபிஷேகம் செய்க.

பதின்மூன்றாம் உற்சவத்தில் இரவு அஸ்திரயாகத்தைத் தொடங்கி ஐந்துதினம் பூசித்து பதினெட்டாம் உற்சவத்தி லன்று காலையில் அஸ்திர தேவரில் அஸ்திரகும்பத்தை அபிஷேகம் செய்க.

பதினெட்டாநாட் சாயரட்சையில் மகாயாகத்தைத் தொடங்குக. மகாயாகத்தில் தீர்த்தாங்குரார்ப்பணம் செய்க.

* சப்தவிம்சதிதின உற்சவம் எனவும் கூறப்படும்.

மகாயாகபூசையை ஒன்பது தினங்களுக்குச் செய்க. இருபத்தேழாநாட் காலையில் தீர்த்தோற்சவத்தின்பின் யாக கும்பங்களை மூர்த்திக்கு அபிஷேகம் செய்க.

---

## 36. பதினொருநாள் விழா.

| | |
|---|---|
| முதல் விழா .... | பிரகிருதி நடனம். |
| இரண்டாம் விழா .... | இருவினை நடனம். |
| மூன்றாம் விழா .... | முக்குண நடனம். |
| நாலாம் விழா .... | அந்தக்கரண நடனம். |
| ஐந்தாம் விழா .... | பஞ்சேந்திரிய நடனம். |
| ஆறாம் விழா .... | காமாதியாறின் நடனம். |
| ஏழாம் விழா .... | சப்தகோடிமகாமந்திரபத நடனம் |
| எட்டாம் விழா .... | வித்தியாதத்துவமும் ஆணவமும் நடனம். |
| திருக்காப்பு நாள்.... | திரோதாயி நடனம், திருச்சாந்து திருவெழுச்சியில் நவபத நடனம், திருவுலாப்புறத்தில் சத்தி முத்தி நடனம், திருவனந்தலில் வாதனை நடனம். |
| பத்தாம் விழாவில் .... | பேரின்பாதீத நடனம். |
| பதினொராம் விழாவில் | பதிபசுபாச நடனம். |

---

## 37. பலிக்கிரமம்.

முதலில் கொடியும், இரண்டாவதாகச் சங்குபேரி தாளம் என்னும் வாத்தியங்களும், மூன்ருவதாக ஆசாரியரும், அதன் பின் அஸ்திரதேவரும், ஐந்தாவதாகப் பலிபீடமுஞ் செல்லுதல் வேண்டும்.

ஒருநாள் உற்சவத்தில் முதல்நாள் சாயங்காலத்தில் ஆரம்பித்து, மறுநாள் பிராதக்காலத்தில் தீர்த்தோற்சவத்தைச் செய்க. ஒருநாள் உற்சவத்தில் இரண்டுகாலப் பலியிடுக.

தீர்த்த தினத்தை நியமித்துக்கொண்டு, அதற்குமுன் சாயங்காலத்தில் ஆரம்பித்து மூன்றுநாள் உற்சவத்தைச் செய்து, ஆறுகாலப் பலியிடுக. நான்காம் நாட்காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

### ஐந்து தினம்.

சாயங்காலத்தில் ஆரம்பித்துப் பத்துக்காலப் பலியிட்டு, ஆரும்நாட் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

### ஒன்பது தினம்.

தீர்த்ததினத்தை நியமித்துக்கொண்டு, அதற்குமுன் சாயங்காலத்தில் ஆரம்பித்து, பதினெட்டுக்காலப் பலியிட்டு, பத்தாம்நாட் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

### 11 - தினம்.

சாயங்காலத்தில் யாகாரம்பமாகி, இருபத்திரண்டு பலியிட்டு, பன்னிரண்டாம் நாட்காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

### 13 - தினம்.

சாயரட்சை முதலாகக்கொண்டு, இருபத்தாறுகாலப் பலியிட்டு, பதினுன்காம்நாட் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

### 15 - தினம்.

சாயங்காலத்தில் ஆரம்பமாகி, முப்பதுகாலப் பலியிட்டு, பதினாறுநாட் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

### 17 - தினம்.

சாயங்காலத்தில் ஆரம்பமாகி முப்பத்துநான்கு காலப் பலியிட்டு, பதினெட்டாம்நாட் காலையில் தீர்த்தோற்சவம் செய்க.

---

## 38. உற்சவதின் பலன்.

ஒருநாளுற்சவம் இராஜவிருத்தியின்பொருட்டும், மூன்று நாளுற்சவம் சிவத்தைச் சந்தோஷிப்பித்தற் பொருட்டும், ஐந்துநாளுற்சவம் போகத்தின் பொருட்டும், ஏழுநாளுற்சவம் சிவப்பிரியத்தின் பொருட்டும், ஒன்பதுநாளுற்சவம் சாந்திகத்தின் பொருட்டும், பதினொருநாள் புஷ்டியின் பொருட்டும், பன்னிரண்டுநாள் முத்தியின்பொருட்டும், பதின்மூன்றுநாள் சர்வசித்தியின்பொருட்டும், பதினைந்துநாள் ஜனசுகத்தின் பொருட்டும், பதினேழுநாள் புண்ணியப்பேற்றின் பொருட்டும், பத்தொன்பதுநாள் சர்வபாபத்தைப் போக்கும் பொருட்டும், இருபத்தொருநாள் லோகரக்ஷையின் பொருட்டுமாமென ஸ்ரீ சூட்சுமாகமம் செப்பும்.

ஒருநாளுற்சவம் சிவப்பிரீதியின்பொருட்டும், மூன்றுநாள் கிராமரட்சையின் பொருட்டும், ஐந்துநாள் பூதரட்சையின் பொருட்டும், ஏழுநாள் உமைக்குப் பிரியத்தின் பொருட்டும், ஒன்பதுநாள் லோகரட்சையின் பொருட்டும், பதினொருநாள் புத்தியின் பொருட்டும், பன்னிரண்டுநாள் தேவருக்கும் சகலருக்கும் பிரீதியின் பொருட்டும், பதின்மூன்றுநாள் சாந்தித்தியத்தின் பொருட்டும், பதினைந்துநாள் சௌக்கியத்தின்

பொருட்டும், பதினேழுநாள் ஜனங்களுக்குப் புஷ்டியின் பொருட்டும், பத்தொன்பதுநாள் புபுட்சுக்களுக்கு முத்தியின் பொருட்டும், இருபத்தொருநாள் சர்வதேவப்பிரியம் சேர்தற் பொருட்டுமாம் என்று ஸ்ரீ காமிகாகமம் கூறும்.

---

## 39. உற்சவ பஞ்சகிருத்தியம்.

சிவபெருமான் பஞ்சகிருத்தியம் செய்வது ஆன்மாக்களது பக்குவம் நோக்கிப், பெத்தகாலத்துச் சுவர்க்காதி போகங்களையும் பதமுத்தியையுங் கொடுத்தற் பொருட்டும், முத்திக் காலத்து மலங்களை அருளால் நீக்கி வீடுபேறு கொடுத்தற் பொருட்டுமாம். பஞ்சகிருத்தியமானது சூக்கும பஞ்சகிருத்தியம் தூல பஞ்சகிருத்தியம் அதிசூக்கும பஞ்சகிருத்தியம் என முத்திறப்படும். அதிசூக்கும ஐந்தொழில் கேவலாவத்தையில் நிகழும்.

சூக்கும அநுக்கிரகமாவது மலபரிபாகத்துக்குத் தக்கபடி அறிவிக்கத் தக்கவற்றை அறிவித்தல். திரோபவமாவது மறைக்கத் தக்கவற்றை மறைத்தல். சங்காரமாவது ஆன்மாக்களின் சஞ்சிதகன்மங்களைப் பக்குவப்படுத்துதல். திதியாவது மாயாகாரியங்களை வெளிப்படத் தகுந்தவைகளாகச் செய்தல். சிருட்டியாவது தோன்றுதற்குரிய இயங்கும் பொருள்களையும் இயங்காப் பொருள்களையும் பார்த்துக்கொண்டிருத்தல்.

தூலசிருட்டியாவது ஆன்மாக்கள் செய்தகன்மங்களை நீக்குவதற்காகவும், மலபரிபாகம் உண்டாக்குவதற்காகவும் தநுகரண புவன போகங்களை முதற்காரணத்தினின்றுந் தோற்றுவித்தல்.

திதியாவது அவரவர் செய்த கன்மங்களை அவரவர் புசித்து முடியும்வரையும் உண்டாக்கப்பட்ட தநு முதலியவற்றைக் காத்தல்.

சங்காரமாவது ஆன்மாக்கள் பிறந்திறந்து வினைப்பயன்களை அநுபவித்தலாலாய இளைப்பு நீங்குவதற்காகத் தநு முதலியவற்றை முதற்காரணத்தி லொடுக்குதல்.

திரோபவமாவது அநுபவிக்கவேண்டிய வினையின் பயனை முறைப்படி அநுபவிக்கச் செய்து மலத்தைத் தேய்த்தல். அநுக்கிரகமாவது மலத்தினின்று விடுவித்து நிரதிசயானந்தத்தைக் கொடுத்தல்.

அதிசூக்கும சிருட்டியாவது ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை உணர்த்துதல். திதியாவது உணர்ந்த சிவஞானத்தில் அழுந்தச் செய்தல். சங்காரமாவது பாசத்திலிருந்து பிரித்தல். திரோபவமாவது சிவஞானத்தை அறியுஞ் சமயத்தில் முன்பிரிக்கப்பட்ட பாசஞானத்திற் செல்லவொட்டாது மறைத்தல். அநுக்கிரகமாவது சிவஞானத்தை அநுபவிக்கச் செய்தலாம்.

உற்சவகாலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருட்டி முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தைக் குறிப்பதால், அக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடுபேறு அருளுதற்காக வைக்கப்பட்டன என்று உணரப்படும்.

அநுஞ்ஞை, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், பேரீதாடனம், இரட்சாபந்தனம், விருஷபயாகம், அஸ்திரதேவதாவாகனம், துவசாரோகணம், துவஜபீடபலி, சந்தியாவாகனம், கிராமப்பிரதக்ஷிணம், கோபுரத்துவார நீரா

சனம், யாகமண்டபபூசை, பிரமத்தானத்திலும் எட்டுத் திக்கிலும் போடும் பலி, திருக்கல்யாணம் என்னுங் கிரியைகள் சிருட்டியைக் குறிக்கும்.

வாகனோற்சவம், ஓமகருமம், பலி என்பன திதியைக் குறிக்கும்.

மிருகயாத்திரை, இரதாரோகணம், கிருஷ்ணகந்தார்ச்சனை என்னும் கிரியைகள் சங்காரத்தைக் குறிக்கும்.

சூர்ணோற்சவம், தீர்த்தம், அங்குரவிசர்ச்சனம், யாககும்பாபிஷேகம், அவரோகணம், மௌனோற்சவம், இரட்சாபந்தன விசர்ச்சனம், சண்டயாகம் என்னுங் கிரியைகள் திரோபவத்தைக் குறிக்கும்.

சத்தியாத்திரை என்னும் ஊடல் சண்டேசுவரோற்சவம், ஆசாரியோற்சவம் என்னுங் கிரியைகள் அநுக்கிரகத்தைக் குறிக்கும்.

## 40. சாம்பவி தீக்ஷை.

ஆன்மாவுக்குப் பாசத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசத்திக் கிரியையே தீக்ஷை எனப்படும். தீக்ஷையானது **மாந்திரி, சத்தி, சாம்பவி** என மூன்றும். மாந்திரி தீக்ஷையாவது குண்டமண்டலங்களைப் புறத்தேயிட்டு, விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது மலத்தைக் குன்றும்படி செய்யுந் தீக்ஷையாம். சத்தி தீக்ஷையாவது குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சுருக்கு, சுருவ முதலியனவெல்லாம் மனத்தாற் கற்பித்துக்கொண்டு, விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது பாசத்தைக் கெடுத்தலாம். மாந்திரி எனினும் கிரியாவதி எனினு மொக்கும். சத்தி எனினும் ஞானவதி எனினு மொக்கும். ஞானவதி கிரியாவதி என்னு மிரண்டும் ஔத்திரி

தீக்ஷை யெனப்படும். ஔத்திரியாவது ஓமத்தோடு கூடச் செய்வது. (ஹோதசஹிதம் ஹௌத்திரி: ஹோதம் - ஓமம்.)

ஞானவதி யென்றுங் கிரியாவதி யென்றும் இருவகைப் பட்ட ஔத்திரி தீக்ஷை, இன்னும் **நிர்ப்பீச தீக்ஷை, சபீச தீக்ஷை** யென வெவ்வேறிருவகைப்படும். அவற்றுள் நிர்ப்பீச தீக்ஷை யாவது மலபரிபாகமுடையராய வழியும், தீக்ஷைக்குப்பின் ஒருதலையான் வழுவின்றி அனுட்டிக்கக் கடவனவாகிய சமயா சாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலும் அறிவும் இலராயினுருக்கு மற்றைக் கருமங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து, நித்திய கருமமாத்திரையில் இயன்ற மட்டும் அதிகாரமுடையவராகச் செய்தலாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத் தினும் காமியத்தினும் அதிகாரங் கொடாமையால் இது **நிரதிகாரதீக்ஷை** யெனவும் பெயர்பெறும்.

இத்தீக்ஷை சமயமும் விசேடமும் நிருவாணமுமென மூவகைப்படும். அவற்றுட் சமயமும் விசேடமும் ஒரோ வொன்றேயாம். மற்றை நிருவாண தீக்ஷை **அசத்தியோ நிரு வாண** மெனவும், **சத்தியோ நிருவாண** மெனவும் இருவகைப் படும். அசத்தியோ நிருவாணம் தேகாந்தத்தின் முத்தியைப் பயப்பது. சத்தியோ நிருவாணம் அப்பொழுதே முத்தியைப் பயப்பது. சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாண தீக்ஷையும் அதற்கங்கமாயும் சுதந்திரமாயும் செய்யப்படும் சமய விசேடங்களும் நிர்ப்பீச தீக்ஷையெனக் கொள்க.

இனிச், **சபீச தீக்ஷை**யாவது மலபரிபாகத்தோடுகூடக் கற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினுருக்குச் சமயாசார கன்ம மாத்திரம் நிறுத்தி மற்றைக் கன்மமெல்லாஞ் சுத்திசெய் தொழித்து, நித்தியகன்ம முதலிய மூன்றினும் பேரதிகா

முடையராகச் செய்வதாம். ஆதலின் இது **சாதிகார தீக்ஷை** யெனவும் பெயர் பெறும். இத்தீக்ஷைப் பேறுடையார் தீக்ஷை வேறுபாட்டால் சாதகரும் ஆசாரியருமென் றிருதிறப்படுவர். இந்தச் சபீசதீக்ஷைதான் **லோகதருமிணியும் சிவதருமிணியு** மென்றிருவகைப்படும். லோகதருமிணியாவது போககாமிகட்குத் திரோதான சத்திரூபமாகிய சிகாச்சேதமின்றிச்செய்வது. சிவதருமிணியாவது முத்திகாமிகட்குத் திரோதான சத்திரூபமாகிய சிகாச் சேதத்தோடு செய்வது. சமயாசாரசுத்தியின்றிச் செய்யப்படும் **நிருவாண தீக்ஷை**யும், அதற்கங்கமாய்ச் செய்யப்படும் **சமய விசேடங்களும் சபீச தீக்ஷை**யெனக் கொள்க.

ஔத்திரி தீக்ஷைக்கு அருகரல்லாதவருக்கு அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப, நயன தீக்ஷையினாலும், பரிசதீக்ஷையினாலும், வாசிக தீக்ஷையினாலும், மானச தீக்ஷையினாலும், சாத்திர தீக்ஷையினாலும், யோக தீக்ஷையினாலும் பாசத்தை நீக்கத்தக்கது. இவற்றுள், **நயன தீக்ஷை**யாவது கருடபாவனை கைவந்தவன் பாம்பினாலே கடிபட்டவனைப் பாம்பாகவுந் தான் கருடனாகவும் பாவித்து, பார்த்து விஷந்தீர்த்தல்போல ஆசாரியர் சிஷனைச் சிவபாவனையினாலே பார்த்துப் பாசவிமோசனஞ் செய்தலாம்.

**பரிசதீக்ஷையாவது** பரிசவேதியினாலே தாமிராதி லோகங்களினது களிம்பு நீங்கி சுவர்ணமானது போல, ஆசாரியர் தமது வலக்கரத்தில் சிவனை ஆசனமூர்த்திமூலம், வித்தியாதேகம், பஞ்சப்பிரமஷடங்க மூலமந்திரங்களினாலே புஷ்பங்கொண்டு பூஜித்து சிஷ்யனுடைய தலையிலே வைத்து அவனுடைய பாசத்திரயத்தை நீக்கிச் சிவமாம்படி பண்ணுவதாம். **வாசக தீக்ஷை**யாவது வருணாசிரமாது குணமாக பஞ்சா

க்ஷரத்தை உபதேசம் பண்ணுவதாம். **மானத தீக்ஷை**யாவது ஆசாரியர் தம்முடைய ரேசகவாயுவினாலே புறப்பட்டு, சிஷ்யனுடைய பூரக வாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்து, சிஷ்ய சைதன்னியத்தை வாங்கித் துவாதசாந்தமளவுங் கொண்டுபோய்த் தம்முடைய இருதயத்திலே சிவசைதன்னியத்துடனே கலந்து, உப்பும் அப்புங் கலந்து ஏகரசமானது போற் பாவித்து சிஷ்ய சைதன்யத்தை சிஷ்யதேகத்திலே பிரதிஷ்டை செய்தலாம்.

**சாத்திர தீக்ஷை**யாவது சாஸ்திரார்த்தங்களை யெல்லாம் சங்கிரகித்து பதிபாசத்தினுடைய லக்ஷணங்களையும் சிவசீவர்களுடைய ஐக்கியத்தையும் சத்சம்பிரதாயமாகப் போதிப்பதாம்.

**யோக தீக்ஷை**யாவது நிராதாரசிவலோகத்தை அப்பியாசம் பண்ணுவிப்பதாம். இவ்வறுவகைத் தீக்ஷையும் அவுத்திரி தீக்ஷைக்கு அருகரல்லாதவர்களுக்குப் பண்ணப்படுவனவெனவும் அறிக.

**சாம்பவி தீக்ஷை**யாவது "சாம்பவி ஞானக்கண்ணினாற்—சுத்திசெயலென்றே துணி" என்று சைவசமயநெறி கூறியபடி திருநோக்கு முதலியவற்றால் மாணாக்கனது பாசத்தைச் சேதிக்கையாம். சாம்பவி தீக்ஷை யெனினும் விஞ்ஞான தீக்ஷையெனினும் ஒக்கும். ஞானதீக்ஷை சிற்சத்தி சகிதமான மனோபாவனையினாலே பண்ணுவது. சாம்பவி கேவல சிற்சத்திமாத்திரத்தினாலே பண்ணுவதாம்.

கர்ஷணாதி பிரதிஷ்டாந்தமான கிரியைகளைத் தாம் தேடியபொருளாலாவது காயத்தின்முயற்சியாலாவதுசெய்வதனாற் சமயதீக்ஷாபலன் உண்டாகும். நித்தியக் கிரியைகளையும் காமியக் கிரியைகளையும் செய்வதனால் விசேஷ தீக்ஷாபலனுண்

டாம். உத்சவம் செய்வதனுல் அத்துவசுத்தி சகிதமான நிருவாண தீக்ஷாபலனும், தீர்த்தோற்சவம் செய்வதனுல் ஆசார்யாபிஷேக பலனுமுண்டாம்.

உற்சவமானது சாம்பவிதீக்ஷை என்று சொல்லப்படும். சிவபெருமான் தீக்ஷையில் மண்டலம், கும்பம், அக்கினி, ஆசாரியர், சிஷ்யர் என்னும் ஐந்து இடங்களில் நின்று அருள் செய்வார். சாம்பவி தீக்ஷையாகிய உற்சவத்திலும் அங்ஙனமே ஐந்து இடங்களில் நின்று அருள் செய்வார். எவ்வாறெனில்; பவிநாயகர்மண்டலமாம்; அஸ்திரமூர்த்திகும்பமாம்; சோமாஸ்கந்தேசுரர் சிவாக்கினியாம்; விரதருள்ளவராய நியமிக்கப்பட்ட உற்சவாசாரியரே குருவாம்; தீக்ஷைபெற்றவர்களும் தீக்ஷை பெருதவர்களும், பக்தர்களும், சமயாசாரலோபம் உள்ளவர்களும், தூர்த்தர்களும் பிறரும் ஆகிய எல்லா ஆன்மாக்களும் சிஷ்யராவர். இன்னும் யாககும்பம் தம்பம் விம்பம் என்னும் இடங்களிலும் நின்று அருள் செய்வார்.

சோமாஸ்கந்தமூர்த்தத்தில் வாகீசுவரர் சம்புவும், வாகீசுவரி போகசத்தியும், சிவாக்கினி கந்தருமாம். மற்றைய மூர்த்தங்களில் சிவம் சத்தி இரண்டும் சிவாக்கினியாகப் பாவிக்கப்படுவதாம். சோமாஸ்கந்தமூர்த்தம் முக்கியம்; அம்மூர்த்தம் இல்லாத ஆலயங்களில் சந்திரசேகரர் முதலிய மூர்த்திகளைப் பாவிக்கத்தக்கது.

இதனுல் உற்சவமானது சமஸ்தருக்கும் தீக்ஷாகாலமென்பது நன்கு தெளியப்படும். இங்ஙனமாதலின், உற்சவத்தின் பெருமை அளவிடுதற்கரியது.

### பண்டாரசாத்திரம் உற்சவவிளக்கம்.

"நாலுபாதங்களிலே சரியாதாற்குத் திருவடி பெறுவது காரியமாக, நாலுகாரியமும் பொருந்திய சாம்பவமென்னுந்

தீக்கையே உற்சவமாயது. இது பத்து நாளாகக் கொண்டது காரியம் பத்தையு முடையதானபடியினுலே. இதிலேநின்ற பதத்திற்குரியோர் அதற்கேற்ற முத்தியைப் பெறவும், அல்லாதார்க்குச் சத்திநிபாத முண்டாகவுங் காரணமாம். இதற்கு உதாரணம் கூறுகின்றது."

"உற்சவ விளக்கந் தன்னை யுரைத்திடி லுயிர தற்கு
முற்சென னங்கள் விட்ட முகிழ்த்ததோர் கருணை யாலே
தற்பரந் தரும மாய தனிக்கொடிக் கட்டி யுண்மைச்
சிற்பரத் துயிர்கண் முத்தி சேர்ந்திடச் செய்வார் மன்னே."
"சாதிசண் டாளர் பொல்லாக் கன்மசண்டாள ரென்னும்
போதமி லுயிர்க டம்மைக் கதியினிற் போக்க வேண்டி
யோதருங் கருணை யாலே யுமையவ ளோடுங் கூடி
யாதிபொய்ப் பாச நீக்க வவுத்திரி தொடங்க லுற்ருர்."

## 41. ஐந்துவித உபசாரங்கள்.

சிவபெருமானுக்குச் செய்யும் உபசாரங்கள் எல்லாம் ஐம்பெரும் பூதங்களின் சம்பந்தமுள்ளவைகளாய் ஐந்துவிதமாயிருக்கும். அவை வருமாறு:—

பிருதிவி சம்பந்தமான உபசாரங்கள்: சந்தனம், புஷ்பம், கிழங்கு, வேர், பழம், அன்னம் முதலானவைகளாம்.

அப்பு சம்பந்தமான உபசாரங்கள் சலம், பால், தயிர், வஸ்திரம் முதலியவைகளாம்.

அக்கினி சம்பந்தமான உபசாரங்கள்: பொன், இரத்தினம், தீபம், கர்ப்பூரதீபம், ஆபரணம் முதலியவைகளாம்.

வாயு சம்பந்தமான உபசாரங்கள்: தூபம், சாமரை, விசிறி முதலானவைகளாம்.

ஆகாசசம்பந்தமான உபசாரங்கள்: மணி, வாத்தியம், தோத்திரம் முதலானவைகளாம்.

## 42. அபிஷேகபலன்.

சிவமூர்த்திகளுக்கு எண்ணெய் பால் தயிர் நெய் தேன் இளநீர் முதலியவைகளினால் விதிப்படி அபிஷேகம் பண்ணுதல் புண்ணியமென்று சைவாகமங்கள் சாற்றுகின்றன.

சந்தனாதித் தைலாபிஷேகம் சுகத்தையும், மாக்காப்பு மலநாசத்தையும், நெல்லிக்காப்பு ரோகநாசத்தையும், மஞ்சட்காப்பு இராசவசியத்தையும், பஞ்சகவ்வியம் ஆன்மசுத்தியையும், இரசபஞ்சாமிர்தம் வெற்றியையும், பலபஞ்சாமிர்தம் செல்வத்தையும், பஞ்சலோதகம் மந்திரசித்தியையும், பால் ஆயுள் விருத்தியையும், தயிர் பிரஜா விருத்தியையும், நெய் மோக்ஷத்தையும், தேன் சங்கீதவன்மையையும், கருப்பஞ்சாறு நித்தியசுகத்தையும், சர்க்கரை சத்துருநாசத்தையும், வாழைப் பழம் பயிர் விருத்தியையும், பலாப்பழம் லோக வசியத்தையும், மாம்பழம் சகலவிஜயத்தையும், தமரத்தம்பழம் பூமி லாபத்தையும், மாதுளம்பழம் பகை நீக்கத்தையும், நாரத்தம் பழம் சற்புத்தியையும், எலுமிச்சம்பழம் மிருத்துநிவாரணத்தையும், தேங்காய்த்துருவல் அரசுரிமையையும், இளநீர் சற்புத்திரப் பேற்றையும், கோரோசனை தீர்க்காயுளையும், பச்சைக்கர்ப்பூரம் பயநாசத்தையும், கஸ்தூரி வெற்றியையும், பனிநீர் சாலோக்கியத்தையும், சந்தனக்குழம்பு சாயுச்சியத்தையும், சகஸ்ரதாராபிஷேகம் ஞானத்தையும், ஜன்மசாபல்யத்தையும் சாரூப்பியத்தையுந் தரும். அன்னாபிஷேகமானது அபமிருத்துவை விலக்கும்; ஆயுள் ஆரோக்கியம் அரசு தேசம் என்பவற்றின் விருத்தியைச் செய்யும்; சர்வசாந்தியையுந் தரும் என்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

ஆன்மாவின் மலத்தைச் சுத்திசெய்வதற்கு அறிகுறியாகவே அபிஷேகம் செய்வதாம். அது,

"நிகழ்மலசுத்தி நிமித்தமாக
மகிழ்வுடனேதிரு மஞ்சனம்பண்ணி."

எனச் சதாசிவரூபத்திற் கூறியவாற்ருன் உணரப்படும்.

தடங்கொண் டதோர்தா மரைப்பொன் முடிதன்மேற்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண் டதோர்பாம் பரையார்த் தபரம
னிடங்கொண் டிருந்தான் றனிடை மருதீதோ.

ஆடினய் நறுநெய்யோடு பால்தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பல
மாடின யிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினய் மறையோடுபல்கீதமும் பல்சடைப்பனிகால் கதிர்வெண்
சூடின யருளாய் சுருங்கவெம் தொல்வினையே. [டிங்கள்

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்.

பாவ மும்பழிப் பற்றற வேண்டுவீர்
ஆவி லைஞ்சுகர் தாடும வன்கழல்
மேல ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே. —அப்பர்சுவாமிகள்.

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாவெயி ருமையு மென்பு
மீடு தாங்கிய மார்புடை யானே
தேனெய் பால்தயி ராட்டுகந் தானே
தேவ னேதிரு வாவடு துறையு
ளானே யேயெனை யஞ்சலென் றருளா
யாரெ னக்குற வமரர்க ளேறே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

சிவபுண்ணியத் தெளிவு (விபூதி அபிஷேகபலன்.)

வேத நீற்றை விமலனுக் காட்டினோர்
ஓது மச்சிவன் போன்றங் கொழிவின்றி
மூதெ யிற்சிவ லோக முதற்பதி
போத முற்றவர் போற்றப் பொலியரே.

## புஷ்ப விசேடம்.

கோங்கம்பூவில் சரசுவதியும், அலரிப்பூவில் பிரமாவும், வன்னியில் அக்கினியும், நந்தியாவர்த்தையில் நந்தியும், புன்னையில் வாயுவும், எருக்கில் சூரியனும், சண்பகப்பூவில் சுப்பிரமணியரும், வில்வத்தில் இலக்குமியும், கொக்கிறகம்பூவில் விட்டுணுவும், மாவிலிங்கையில் வருணனும், மகிழில் சரசுவதியும், வாகையில் நிருதியும், சாதிப்பூவில் ஈசானனும், செங்கழுநீரில் சூரியனும், குமுதப்பூவில் சந்திரனும், மந்தாரையில் இந்திரனும், மதுமத்தையில் குபேரனும், நாயுருவியில் இயமனும், தாமரைப்பூவில் சிவனும், அறுகில் விநாயகரும், நீலோற்பலத்திலும் ஏனைய வாசனைப் புஷ்பங்களிலும் உமாதேவியாரும், அதிதேவதைகளாய் இருப்பார்கள்.

ஆகையால், இப்பத்திர புஷ்பங்களையும் ஏனையவற்றையும் விதிப்படி எடுத்துக் கொடுப்பவர்களும், அவற்றினாற் பூசித்தவர்களும், திருமாலை கட்டிக்கொடுப்பவர்களும் திருநந்தனவனம் வைப்பவர்களும் போகமோக்ஷங்களை அடைவார்களென்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

## சாத்துவிக புஷ்பங்கள்.

வெண்ணிறப் புஷ்பங்கள் சாத்துவிக குணமுடையன. அவைகள்:—வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, கொக்கிறகு மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலியனவாம். இப்புஷ்பங்களால் சாத்துவிக காலங்களாகிய உஷக்காலம் சாயரட்சை அர்த்தயாமம் என்னுங் காலங்களில் அருச்சிப்பவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள்.

## இராசத புஷ்பம்.

செந்நிறப்புஷ்பங்கள் இராசத குணமுடையன. அவை பாதிரி செந்தாமரை, செங்கழுநீர் செவ்வலரி, செங்கடம்பு

முதலியனவாம். இப்புஷ்பங்களால் இராசத காலமாகிய மத்தியானத்தில் அருச்சிப்பவர்கள் போகத்தை அடைவார்கள்.

### இராசத சாத்துவிக புஷ்பங்கள்.

பொன்னிறமுள்ள கொன்றை, சண்பகம், பொன்னூமத்தை செருந்தி, பொன்னெச்சி முதலியவைகளாம். இப்புஷ்பங்களால் இராசத சாத்துவிக காலமாகிய பிராதக் காலத்தில் அருச்சிப்பவர்கள் போகமோக்ஷங்களை அடைவார்கள்.

### இராசத நாமத பத்திரங்கள்.

வில்வம், துளசி, மருக்கொழுந்து, அறுகு, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை முதலியவைகளாம்.

வாசகவஞ்செய்திமையோர் நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானு ரினிதாகவுறைபுமிடம்
யோசனைபோய்ப்பூக் கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான் புள்ளிருக்குவேளூரே.

நொச்சியேவன்னி கொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடம் விடையூர்தியான்
கச்சியேகம்பம்மேவய கறைக்கண்டனை
நச்சியேதொழுமினும் மேல்வினைகையுமே.

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்.

விண்டமாமலர் கொண்டுவிரைந்துநீர்
அண்டநாயகன் றன் னடிசூழ்மின்னல்கள்
பண்டுநீர்செய்த பாவம்பறந்திடும்
வண்டுசேர்பொழில் வான்மியூரீசனே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

## 43. வாத்தியபேதம்.

வாத்தியங்கள் பிருதுவி வாத்தியம், அப்பு வாத்தியம், ஆக்கினேய வாத்தியம், வாயவ்விய வாத்தியம், ஆகாச வாத்தியம் என ஐந்து பேதமாம். மரத்தினாற் செய்யப்பட்டவை பிருதுவி வாத்தியம். சங்கு முதலியவை அப்பு வாத்தியம். லோகங்களினாற் செய்யப்பட்டவை ஆக்கினேய வாத்தியம். துளையுள்ளவை வாயவ்விய வாத்தியம். இராக பேதங்கள் ஆகாச சம்பந்தமானவை.

ஆலயத்தில் மத்தளம் இயம்புவதால் சுகமும், பேரி யடித்தலால் புஷ்டி விருத்தியும், தாளத்தாற் கிலேச நாசமும், காதாளத்தால் அபயமும், சல்லரியால் விரும்பிய காமிய பயனும், நரம்பு வாத்தியத்தால் கோடியாக பலனும், துளை வாத்தியத்தால் புத்திர பௌத்திர விருத்தியும், தோல் வாத்தியத்தால் ஜயமும், சங்குத் தொனியால் சத்துரு நாசமும், நிருத்தத்தால் வியாதி நாசமும் உண்டாம். வாத்திய பேத பலன் விஸ்தாரமாகக் காமிகாகமத்திற் கூறப்பட்டது.

சல்லரியியாழ்முழவ மொந்தைகுழலொமதியம்பக்
கல்லரியமாமலையர்பாவை யொருபாக நிலைசெய்து
அல்லெரிகையேந்திநட மாடு சடையண்ணலிடமென்பர்
சொல்லரியதொண்டர்துதி செய்யவளர்தோணிபுரமாமே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

---

## 44. தீபபேதம்.

ஐந்தடுக்குள்ள அலங்காரதீபம் பஞ்சகலைகளைக் குறிக்கின்றது. மூன்றடுக்குள்ள தீபம் முத்தத்துவங்களைக் குறிக்கின்றது. இத்தீபத்தால் ஆராதிப்பின் ஆன்மசுத்தியுண்டாம்.

நாகதீபம் புத்திர விருத்தியின் பொருட்டும், இடபதீபம் பசு விருத்தியின் பொருட்டும், புருஷதீபம் சகல சித்தியின் பொருட்டும், நக்ஷத்திர தீபம் ரோகசாந்தியின் பொருட்டும் வித்தையின் பொருட்டும், கும்பதீபம் மல நிவாரணத்தின் பொருட்டும், ஐந்து தட்டைகள் ஈசானம் முதலிய ஐந்து குணங்கள் பதிதற் பொருட்டும், தூபம் சாரூப பதவியின் பொருட்டும், செம்பஞ்சும் நிம்பபத்திரமும் திருட்டி தோஷ நீக்கத்தின் பொருட்டும், விபூதி மூவுலகரக்ஷையின் பொருட்டும் சிவசந்நிதியில் ஆராதிக்கப்படுகின்றன.

---

## 45. தாசி நடனமும் வாண வேடிக்கையும்.

திருக்கோயில்களில் நன்மார்க்கமுள்ள தாசிகளை அழைத்து நடனம் செய்விப்பது குற்றமாகும். உபயகாரர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் அரிய பொருளை, அறிவும் நல்லொழுக்கமுமுடைய சமயபோதகர்களையும் ஓதுவார்களையும் அழைத்துச் சற்பிரசங்கம் செய்வித்தும் வேதங்களையும் திருமுறைகளையும் அத்தியயனம் செய்வித்தும் யாகத்துக்கு வேண்டிய நெய் சமித்து முதலிய உபகரணங்களைக் குறைவின்றிக் கொடுத்தும், தீபங்கள் இரவும் பகலும் அவியாதபடி பாதுகாத்தும் இவைபோன்ற பிறபுண்ணியங்களைச் செய்தும் சிவபக்தி வளரும் வழியிற் செலவு செய்வது உத்தமோத்தமமாகும்.

இன்னும் சிலர் வாண வேடிக்கைகள் செய்து, அரிதிற் றேடிய பொருளை அற்ப நேரத்திற் கரித்தும் புகைத்தும் எரித்தும் உத்ஸவ தரிசனம் செய்யவரும் அடியார்களை அச்சப்படுத்தி உயிர்வதையும் புரிகின்றனர். அன்றியும் அவர்கள் உடற்பற்றை நீக்கிச் சிவத்தியானஞ் செய்யுங் காலமாகிய

அரிய உற்சவகாலத்தில் உடற்பற்றி முதலியவற்றை உண்டு பண்ணிப் பழிபாவங்கட்கு ஆளாகின்றனர். அப்பழிபாவங் கட்கு ஆளாகாது அப்பொருளை மகேசுவரபூசை, வறியவருக்கு அன்னமிடுதல், ஆலயத்திருப்பணி முதலிய சிவபுண்ணியங் களிற் செலவுசெய்து உத்தமோத்தமமாகும். அது பிறவுயிரும் தம் உயிரும் மோக்ஷமடையக்கூடிய நல்வழியாயிருக்குமே. இது, அமர்நீதி நாயனர் மகோற்சவதரிசனத்துக்கு வந்த அடியார்களைத் திருவமுது செய்வித்துச் சிவலோகமடைந்த சரித்திரத்தாலும், கோச்செங்கட் சோழநாயனர் திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்துச் சபாநாயகரது திருவடிநீழலை அடைந்த சரித்திரத்தாலும் நன்கு உணரப்படும்.

திருப்பதி வணங்கவென்று சென்றுறும் சிவநேசர்க்கும்
அருத்தியாற் கங்கையாதி யாடிட நாடினர்க்கும்
அருத்துக வன்னபான மவரவர்க் குபயோகங்கள்
பொருத்துக வூனைப்போக்கிச் சிவபுரம் புகுவர்தாமே.

—சிவதருமோத்தரம்.

திருப்பணி செய்வார்க்குச் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புட னீவார் பெறுக வீடு.

—சைவசமயநெறி.

## 46 மூர்த்திகளை அலங்காரம் பண்ணல்.

ஆன்மாக்களது கன்மத்திற்குத் தக்கவாறு பஞ்சகிருத்தியத்தைச் செய்தருளும் இறைவன் பலமூர்த்தங்களாகத் தோன்றி, அவர்களுக்குப் போகமோக்ஷங்களைக் கொடுத்தருளுகின்றனர். அம்மூர்த்தங்களுட் சில சயனிப்பனவும், சில நடப்பனவும், சில நிற்பனவும், சில இருப்பனவுமாக உள்ளன. அன்பர்கள் பூசைபண்ணும்போது அம்மூர்த்திகள் சுகாசனமாக இருந்துகொண்டே அப்பூசையை ஏற்கும். அம்மூர்த்திகளை ஆலயங்களில் ஆகமமுறைப்படி பிரதிட்டை செய்து

பூசித்து வருவது தொன்றுதொட்டுள்ள வழக்கமும் விதியு மாம். அம்மூர்த்திகளை முறைதவறாது அலங்கரித்து வழி படுவது மிகமேலாகிய புண்ணியமாகும்.

நிற்பனவாகிய மூர்த்திகளை நின்றரூபமாகவும், இருப்பன வாகிய மூர்த்திகளை அந்தரூபமாகவும், சயனமூர்த்தியை அந்த ஆகிருதியாகவும் அலங்கரித்து வணங்குதல் வேண்டும். மாறிச் செய்யிற் குற்றமாம். மூர்த்தியின் திருமேனியில் கட்டுதல், மரக்கட்டை லோகம் முதலியவற்றாற் செய்யப்பட்ட கால் கைகள் வைத்துக் கபடமாக அலங்கரித்தல், லீலாபேதமான வோர் விக்கிரகத்தைப் பிறிதொரு லீலாமூர்த்தியாக அலங் கரித்தல், சிவதேகத்தில் விஷ்ணுரூபத்தைக் கற்பித்தல், சந்திர சேகரத் திருமேனியில் நிருத்தரூபத்தையும், கல்யாண சுந்த ரிடத்தில் நிருத்தரூபத்தையும் அலங்கரித்தல், உக்கிரமூர்த்தி யைச் சாந்தரூபமாகவும், சாந்தமூர்த்தியை உக்கிரரூபமாகவும் அலங்கரித்தல், திருவாசியில்லாதபடி அலங்கரித்தல் முதலிய விபரீத அலங்காரங்கள் செய்யப்படின் விபரீத பலனுண்டாம். ஆயுள்குன்றும்; பிரபுக்கள் அரசர் யஜமானர்கள் அங்கஹீன மாவார்கள். அத்தோஷம் நீங்கும்பொருட்டுப் பிராயச்சித்தம் செய்க. அவ்வத்தேவர்களுக்குரிய வஸ்திரம், யோக்கியமான தும் வாசனைபொருந்தியதுமான புஷ்பமாலை உத்தமமான ஆபரணங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கத்தக்கது என்று காமிகம் வீரதந்திரம் முதலிய ஆகமங்கள் கூறுகின்றன.

ஆலய அதிகாரிகள் ஆகமசாஸ்திர ஆராய்ச்சியுள்ள சிவா சாரியர்களுடன் கலந்து அக்கிரமமான செயல்களை அகற்றிச் சற்கருமங்களைக் கைக்கொண்டு ஒழுகுவது உத்தமமாகும்.

---

## 47. வீதிநிர்ணய முதலியவைகள்.

உற்சவாரம்பத்துக்கு முன், திருஆபரணங்கள், குடை, கொடி, ஆலவட்டம், விசிறி, சாமரை, மகரதோரணம், தேர், மண்டபம் முதலியவைகளைப் பிரபையுண்டாகுமாறு புதுப்பித்தல் வேண்டும். வீதியிலுள்ள முள், புல், கல் ஆதியவற்றை அகற்றிச் சுத்தமாக்கிச் சலத்திஞற் புரோட்சித்தல் வேண்டும். கிரீடம், வாகுவாலயம், குண்டலம், முத்துமாலை, பதக்கம், தண்டை, சிலம்பு முதலிய திருவாபரணங்களை உண்டாக்குவித்தல் வேண்டும். பல நிறங்களையுடைய வஸ்திரங்களையும், பீதாம்பரங்களையும் தருவித்தல் வேண்டும். அலங்காரம் பொருந்தும்படி பந்தர் இடுதல் வேண்டும். தேவாலயத்தை மிகவும் அழகுசெய்து மேற்கட்டி கட்டி, மாவிலைத் தோரணம், புஷ்பமாலை, கரும்பு, கமுகு, இளநீர், சிவபக்தியையுண்டாக்கத்தக்க சித்திரப் பிரதிமை கண்ணுடி முதலியவைகளால் அலங்கரித்து, சித்திரவஸ்திரங்கட்டி, பலநிறக் கொடிகளை நிறைத்து அலங்கரித்தல் வேண்டும். வீதிகளையும் அலங்கரித்துத் தீபங்களேவற்றிப் பூரணகும்பங்களை நிறைத்தல் வேண்டும்; கிராமத்தையும் கிருகங்களையும் அலங்காரஞ்செய்து சித்திரங்கள் அமைத்தல்வேண்டும்.

உற்சவாரம்பத்துக்கு முதற்றினத்தில் சண்டேசுரரையாவது சிவபக்தர்களையாவது அலங்கரித்துப் பக்தோற்சவம் செய்தல்வேண்டும்.

---

## 48. பக்தோற்சவம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய பக்தர்களுக்கு விசேஷ பூஜை அலங்காரஞ்செய்து,

சிவிகையிலாவது பீடத்திலாவது ஏற்றி, குடை சாமரம் வாத்தியம் முதலிய அலங்காரங்களுடன் கிராமப் பிரதக்ஷிணமாவது ஆலயப்பிரதக்ஷிணமாவது செய்து, அவரவர்களுடைய தானங்களிலே தாபித்தல் வேண்டும். அக்காலங்களில் தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களை விசேஷமாக ஓதல்வேண்டும். உற்சவம் முடிந்தபின்பு பிராமணர்களை அருச்சிக்க. சிவகானங்களாகிய தேவாராதிகளில் வல்லவருக்கு உபசாரங்களைச் செய்க.

---

## 49. விக்கினேசுவர அனுஜ்ஞை.

உற்சவஆரம்பத்துக்குமுன் விநாயகாலயத்தை அடைந்து விநாயகருக்கு விசேஷபூசை செய்து மோதகாதிகளை நிவேதித்து, விக்கினங்களைப் போக்கியருளும்படி பிரார்த்தித்து, விழாச்செய்து, அப்பெருமானிடத்தில் அநுக்கிரகம் பெறுமாறு ஆகமங்கள் கூறும்.

விநாயகருக்குரிய நிவேதனப்பொருள் எல்லாவற்றினும் தேங்காய் மிக விசேஷமுடையது. ஆசாரியர் தேங்காயை எடுத்துச் சோதித்தல் வேண்டும். இளந்தேங்காயையும் முற்றி உலர்ந்து விழுந்த தேங்காயையும் நீக்கி, நன்றாகத் தேறிய தேங்காயையே உடைத்தற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். துர்க்கந்தமுள்ளதும் வளைந்ததும் நீண்டதும் பின்னமானதுமாகிய தேங்காய் நீக்கப்படத்தக்கது. மேலும் கண்ணில்லாததும் பெரியகண்ணுள்ளதும் சிறியகண்ணுள்ளதும் குறைந்ததும் முடியில்லாததும் பழையதும் ஜலமில்லாததும் தள்ளத்தக்கது. இப்படியே அநேகமாகப் பரீக்ஷித்து, குற்றமற்ற தேங்காயைச் சந்நிதானத்தில் உள்ளகல்லில் அடித்தல் வேண்டும்.

ஒருமுறை அடித்தலினால் இரண்டு பாகமும் சமமாக உடைதல் வேண்டும். அதனால் சுபமுண்டாம்; தனதான்ய விருத்தியுண்டாம். முகப்பாகம் மூன்று பங்கும் அடிப் பாகம் ஒரு பங்காகவும் விரல்நுதியளவு பிரமாணமாக எப்பக் கத்திவாவது எடுபடுதல் என்னுங் குற்றமுண்டாகுமாறும் உடைந்தால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கலகமெய்தும், சிதறுண்டுடைந்தால் கர்மநாசமுண்டாம். கண்பக்கமாக உடைந்தால் கர்த்தாவுக்குச் சுகமுண்டாகாது. பிரதான கண் ரேகை மார்க்கமாகவுடைந்தால், குருவுக்குத் தீமை உண்டாம். வலப்பக்கக் கண்ரேகை மார்க்கமாக உடைந்தால் அக்கிராம வாசிகளுக்குச் சுகமில்லை. இடக்கண்ரேகை மார்க்கமாக உடைந்தால் அரசனுக்கு க்ஷேமமுண்டாகாது. முகப்பக்க மாக உடைந்தால் பெருந்துக்கமுண்டாம். நீளமாக உடைந் தால் பயமுண்டாம். சேதமாயுடைந்ததில் ஒருபாகம் கை யோடு இருக்குமாயின், கருப்பிராணிகளுக்கு நாசமுண்டாம். அநேகமாகச் சேதப்படின், கிராமவாசிகளுக்குப் பசி பீடை உண்டாம். சலமில்லாதிருந்தால் மழைபெய்யாது. இளநீர் துர்க்கந்தமாயிருந்தால், இராச்சியலட்சுமி நீங்கும்; நோயுண் டாம். இவை முதலிய தோஷம் நீங்கும்பொருட்டு அகோ ராஸ்திரத்தை நூறுருச் செபிக்கவேண்டும். பின்பு தேறின தேங்காயை எடுத்து, பெரிய ரேகையில் அடித்து நிவேதிக்க வேண்டும்.

அடிப்பாகம் இரண்டு பங்கும் முகபாகம் ஒரு பங்கும், முகபாகம் மூன்று பங்கும், அடிப்பாகம் இரண்டு பங்கும், இரண்டு பாதியுஞ் சமமாகவும் உடைந்தால் சகல சித்திகளும் சுபமுமுண்டாகும்.

## 50. கிராமசாந்தி.

மகாபிரதிஷ்டாகாலம் உற்சவகாலங்களில் கிராமசாந்தி செய்யாவிடின், இலக்குமிவாசம் உண்டாகாதென்று உத்தர காரணாகமத்திற் கூறப்பட்டிருப்பதனால் கிராமசாந்தி செய்து உற்சவத்தை ஆரம்பிக்கவேண்டும்.

---

## 51. வாஸ்து சாந்தி.

தொடங்கிய கிரியையும், மந்திரமும், இடமும் சுத்தியாதற்பொருட்டு வாஸ்து சாந்தி செய்க. வாஸ்து பூசை செய்யாதொழியின் தொடங்கிய கிரியை பயன் கொடாது.* வாஸ்து பதம் மண்டூக பதம் பரமசாயீ பதம் என இரண்டு வகைப்படும். தேவகருமங்களில் மண்டூக பதமும் தேவி கருமங்களில் பரமசாயீ பதமும் அமைத்துப் பூசிக்கத்தக்கன. மண்டூக பதம் என்பது அறுபத்து நான்கு பதமுள்ள வாஸ்து. பரமசாயீ பதம் எண்பத்தொரு பதமுள்ள வாஸ்து. பதங்களில் ஈசானுதியாக ஈசானன் முதலிய தேவதைகளையும், மத்தியத்தில் பிரமாவையும் பூசித்து அக்கினிகாரியம் செய்க. பலாசு, அத்தி, அரசு என்பவற்றின் சிறுசாகை, இலை, தருப்பை என்பவைகளால் புருஷாகிருதியாகக்கட்டி, குண்டாக்கினியில் சுவாலிக்கச் செய்து வீதி யாகம் முதலிய இடங்களிற் பர்யக்கினிகரணஞ் செய்து ஈசானதிக்கிற் போடுக. வாஸ்துவுக்குப் பாபரூபம் என்றும் பரியாயநாமம் உண்டு.

வாஸ்துவின் உற்பத்தி வருமாறு:—அந்தகாசுர யுத்தத்திலே சிவபெருமானிடத்துண்டான கோபத்தினால் அவர்

---

* சோமசம்புபத்ததியில் வாஸ்து புருஷனுடைய தேகத்தில் வசிக்கும் தேவதைகள் பூசை செய்யப்பெற்று சுபத்தைத்தருபவர்களாக இருக்கின்றனர் என்றிருக்கிறது.

நெற்றியிலிருந்து வியர்வை பூமியில் விழுந்தது; அதிலிருந்து பூதமொன்று உண்டாயிற்று. அது சிவாஞ்ஞையினுல் பூமியில் விழுந்த அந்தகாசுரனுடைய இரத்தத்தைப் பானம் பண்ணித் திருப்தியடைந்து, பின் சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்தது. அவர் சந்தோஷித்துப் பூதமாய் வந்த அவ்வசுரனுக்கு விரும்பிய வரங்களைக் கொடுத்தார். அவன் தனது வல்லமையினுலே பூவுலகையும்சுவர்க்கத்தையும் அடக்கினுன். தேவர்கள் பயந்து ஸ்ரீகண்டபரமேசுரனைச் சரணடைந்தார்கள். கருணாநிதியாகிய பரமசிவன் தேவர்களை இரட்சிக்கும் பொருட்டு அதிபலர் என்னும் உருத்திரரையும் மாயாபாசங்களையுஞ் சிருட்டித்தார். அதிபலருத்திரர் எட்டுப்பாசங்களினுலும் அவனைக் கட்டிப் பூமியிற்றள்ளி, பிரமாதி தேவர்களை அவன் தேகத்தில் வசிக்கும்படி செய்தார். சிவாஞ்ஞையினுலே தேவர்களால் அதிஷ்டிக்கப்பட்ட வாஸ்துபுருஷன் பிரமதேவருடைய பகற்காலம் வரையிற் சயனிக்கின்றுன். ஈசானத்திற் சிரசும், நிருதியிற் பாதமும், மார்பில் அஞ்சலியும் அதோமுகமும் கோபவடிவமுமாகத் திரவாஸ்து சயனிப்பன். கன்னிமுதல் மூன்று மாசம் கிழக்கே சிரசாகவும், தநுமுதல் மூன்று மாசம் தெற்கே சிரசாகவும், மீனமுதல் மூன்றுமாசம் மேற்கே சிரசாகவும், மற்றைய மூன்றுமாசம் வடக்கே சிரசாகவும் சலவாஸ்து சயனிப்பன். பூசா காலத்தில் ஊர்த்துவமுகமாகவும், மற்றைய காலங்களில் அதோ முகமாகவும் சயனிப்பன். இதற்குப் பிரமாணம் சித்தாந்தசாராவளி வியாக்கியானத்திற் காண்க.

முன்னெருகாலத்தில் அசுரகுருவாகிய சுக்கிராசாரியர் தேவர்களை வெல்லுவதற்காக யாகஞ்செய்து அஜமுகாசுரனைச் சிருஷ்டித்தார். அதனுற் றுன்புற்ற தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கிய சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து

தீப்பொறி தோன்றியது. சுக்கிரன் பயந்து சிவபெருமானைச் சரணமடைந்தார். சுக்கிராசாரியர் தம்மைச் சரணமடைந்ததை யுணர்ந்த பரமேசுரர் சந்தோஷத்துடன் அவருடைய வேண்டுகோளுக்கிரங்கி அஜமுகனைப் பார்த்து, உனக்கு வாஸ்துபன் என்னும் பெயர் சித்திக்குக; உன்னுடைய தேகத்தில் பிரமன் முதலிய தேவர்கள் வசிக்குக; வீடுகள் கட்டும் போதும் தேவாலய நிர்மாணஞ் செய்யும்போதும் உன்னையும் உன்சரீரத்தில் வசிப்பவர்களையும் முதலில் பூசிப்பவர்களுக்கு எல்லா ஐசுவரியங்களும் சித்திக்குக. இவ்வாறு பூஜியாது வீடு ஆலயம் முதலியன செய்தால் அசுரப்பிரீதியாக இருக்குக என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இந்தப் பூர்வகதைகளாலும் வாஸ்துபுருஷனுடைய தேகத்தில் வசிக்குந் தேவர்களைப் பூசிக்காவிடில், இவர்கள் சுபத்தைத் தரமாட்டார்கள் என்பது பெறப்படும்.

வாஸ்துவினுற்பத்தி ஈண்டுக் கூறியவிதமேயன்றி வேறு விதமாகவும் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது. இவற்றைக் கற்பபேதமாகக் கொள்க.

---

## 52. மிருத்சங்கிரகணம்.

புண்ணிய தீர்த்தசமீபத்திலும், நந்தனவனத்திலும், சமுத்திரக்கரையிலும், யக்ஞவிருட்சத்தினடி முதலிய இடங்களிலும் மிருத்சங்கிரகணம் செய்யலாம். ஆலயத்தின் ஈசானத்திற் செய்வது ஆயுள்விருத்தியையும், அக்கினிதிக்கிற் செய்வது புத்திரவிருத்தியையும், மேற்கிற் செய்வது மோக்ஷ சித்தியையும், வாயுவிற் செய்வது சம்பத்தையும், வடக்கிற் செய்வது செல்வத்தையும் கொடுக்கும். நிருதியிலும் கிழக்கிலும் செய்யிற் கலகமும், தெற்கிற் செய்யில் அஞ்ஞானமும் உண்டாம்.

நவகோட்டங் கற்பித்துப் பூசித்து, அதிற் பூமியை நிருதியிற் சிரசும், ஈசானத்திற் பாதமும், அக்கினியில் வலக்கையும், வாயுவில் இடக்கையும் உடையதாகவும், கடி இருதயம் என்பவற்றோடு கூடினதாகவும் பாவித்து, அதன் வயிற்றினிடத்திருந்து மண்ணை எடுத்தல் வேண்டும்.

நெற்றியில் எடுத்தால் கிராமத்திற்கும், முகத்தில் எடுத்தால் பிராமணருக்கும், கழுத்தில் எடுத்தால் ஆசாரியருக்கும், புயத்தில் எடுத்தால் க்ஷத்திரியருக்கும், ஸ்தனத்தில் எடுத்தால் பெண்களுக்கும், மார்பில் எடுத்தால் புத்திரருக்கும், தொடையில் எடுத்தால் வைசியருக்கும், பாதத்தில் எடுத்தாற் சூத்திரருக்கும் அழிவு உண்டாம்.

---

## 53. அங்குரார்ப்பணம்.

வித்துக்களுக்கு அதிபன் சந்திரன் ஆகையால் இரவில் அங்குரார்ப்பணஞ் செய்தல் வேண்டும். பகற்காலத்திற் செய்தல் கூடாது. செய்யிற் பயிர்கள் விருத்தியடையா. மனிதர்களுடைய சௌளம் முதலிய கிரியைகளில் இரவை நீக்கிப் பகலிற் செய்யின் சகல சோபனமும் உண்டாம்; தேவர்களுக்குப் பகற்காலத்தை நீக்கி இரவிற் செய்க. சத்தியாங்குரார்ப்பணஞ் செய்யின் இரவிலாவது பகலிலாவது செய்யலாம்.

பாரவன்காண் பாரதனிற் பயிரானான்காண்
பயிர்வளர்க்குந் துளியவன்காண் துளியினின்ற
நீரவன்கா ணீர்சடைமே னிகழ்வித்தான்காண்
நிலவேந்தர் பரிசாக நினைவுற்றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப்பன்றி
பிரியாது பலநாளும் வழிபட்டேத்தும்
சீரவன்காண் சீருடைய தேவர்க்கெல்லாஞ்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்தானே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

## 54. இரட்சாபந்தனம்.

இரட்சா என்பது எல்லாப் பாவங்களையும் நீக்குவது எனப் பொருள்படும். ர - எல்லா; க்ஷ - பாபநாசம். மூர்த்தி கும்பந்தாபித்து, ஓமகருமஞ் செய்து சம்பாதாகுதிபண்ணி, மூர்த்தி கும்பத்தை மூர்த்தியி லாவாகித்து, இரட்சாபந்தனஞ் செய்வது உத்தமம். ஓமமின்றிச் செய்வது மத்திமம். ஓமமுங் கும்பமுமின்றிச் செய்வது அதமம்.

தொடங்கிய கிரியையுங் கருமமுஞ் சித்தியாதற் பொருட்டு ஆசாரியர் இரட்சாபந்தனஞ் செய்க. அன்னையானவள் ஔஷதத்தையுண்டு, தனது பிள்ளைகளின் நோயை நீக்கிப் பாதுகாத்தல்போல புத்திரர்களாகிய ஆன்மாக்களின் மல நோயை நீக்கி இரட்சித்தல் காரணமாகச் சுவாமிக்கு இரக்ஷா பந்தனஞ் செய்யப்படுகின்றது.

முடிவில் இரக்ஷாசூத்திரத்தை அவிழ்த்து, அதனைச் சுழூ தோதகத்துடன் சிவனுருடைய வரதகரத்தில் நிவேதிக்க.

---

## 55. பேரீதாடனம்.

விதிப்படி பேரியில் உருத்திரன் முதலியோரைப் பூசித்து ஆசாரியர் மும்முறை பேரீதாடனஞ் செய்க. முதற்றாடனத்தினால் பூமி அந்தரிக்ஷம், சுவர்க்கம், பாதாளம் என்னுமிடங்களில் வசிக்கிறவர்களுக்கு இதமும், தேவவிரோதிகளாகிய அசுரர் முதலியோருக்கு அழிவும் உண்டாம். இரண்டாவது தாடனத்தினால் பிரமா, விஷ்ணு, உருத்திரன், இந்திரன் முதலிய தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மிருகம், பட்சிகளுக்கும் இதமுண்டாகும். மூன்றாவது தாடனத்தினாலெல்லா உலகங்களுக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் இதமும், சுகமும் உண்டாகும்.

---

## 56. துவசாரோகணம்.

மகோற்சவாரம்பத்திலே கொடியேற்றல் ஆகம சம்மதமாம். மும்மலத்திலே மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மா ஆசாரியனுடைய அருளால், தீக்ஷாக்கிரமத்தினாலே பாசபந்தமற்றுச் சிவஞானத்தைப் பொருந்திப் பதியின் திருவடியை அடையும் முறைமையைத் துவசாரோகணம் காட்டும். அஃது எவ்வாறெனில்: காரணம் முதலிய சிவாகமங்களிற் கூறியவாறு கொடிமரம் பதியாகிய சிவபெருமானையும், கொடிக்கயிறு திருவருட்சத்தியையும், கொடிச்சீலை பசுவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசபந்தம் நீங்கிச் சிவபெருமானை அடையுமிடத்துத் திருவருட்சத்தி வாயிலாகவே அடைதல் வேண்டும்; இவ்வாறே துவசாரோகணத்திலும் பசுவைக் குறிக்கும் கொடிச்சீலை, திருவருளைக் குறிக்கும் கயிறு வழியாகச் சென்று தம்பத்தில் ஆறுதாரங்களை ஆசனமாகக் கொண்டு அதன்மீதிருக்கும் பரமசிவத்தை அடைகின்றது. தம்பமுஞ் சீலையும் பொருட்டன்மையால் இரண்டாயிருப்பினும், தம்பமே பொருளாகச் சீலை அதிலே ஒடுங்கித் தங்கியிருத்தல் அத்துவித நிலையைக் குறிக்கும். ஆகலினாலே துவசாரோகணம் செய்தல் மும்மலபந்தத்தாற் பிறந்திறந்து சுழன்று வருந்தும் ஆன்மாக்கள் தீக்ஷைமுறைப்படி மலநீக்கம் பெற்றுச் சிவபெருமானை அடைதலை உணர்த்தும் நற்குறியாம் என்பது செவ்விதிற் றுணியப்படும்.

ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிட மொன்றுமேலிடிலொன்
றொளிக்குமெனினு மிருளடரா துள்ளுயிர்க்குயிராய்த்
தெளிக்குமறிவு திகழ்ந்துளதேனுந் திரிமலத்தே
குளிக்குமுயிரருள் கூடும்படிக் கொடிகட்டினனே.

—உமாபதி சிவாசாரியர் கொடிக்கவி.

துவசத்தம்பம் பதி எழுத்தையும், கொடியேற்றுங் கயிறு பரை எழுத்தையும், கொடிச் சீலையில் எழுதப்பட்ட இடப தேவர் உயிரெழுத்தையும், கொடிச்சீலை திரோத எழுத்தையும், தருப்பைக் கயிறு மல எழுத்தையும் குறிக்கும்.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி.

—கொடிக்கவி.

---

## 57. திருவுலாக்கொண்டருளுதல்.

சுவாமி திருவுலாக் கொண்டருளும்போது ஆசாரியர் சுவாமிக்கு வலப்பக்கத்திலும், கோயில் அதிகாரி இடப்பக்கத்திலும், பக்த ஜனங்கள் பின்னாகவும் நமஸ்கரித்துத் தோத்திர பாராயணஞ் செய்துகொண்டும், சிவகைங்கரியம் செய்பவர்கள் சுவாமிக்கு முன்பாகவும் இருமருங்குகளிலும் நின்று தத்தமக்குரிய தொண்டுகளைச் செய்துகொண்டும் செல்லுதல் வேண்டும். சுவாமி திருவுலாக் கொண்டருளும் போதும் பூசை நடைபெறும்போதும் எழுந்து நின்று நமஸ்கரியாது அக்கிரியைகள் நடைபெறும் இடங்களில் இருப்பவர்கள் யாவரேயாயினுந் தண்டிக்கப் பெறுவர்.

சதசிருங்கம் என்னும் மலையின் ஒரு பாங்கராகச் சநற்குமாரமுனிவர் யோகம் செய்திருக்குங்கால், ஒரு தினம் பரமசிவன் உலகைக் காத்தருளும் பொருட்டுக் கிருபைகொண்டு இடப வாகனத்தில் ஆரோகணித்துக் கணங்கள் சூழ ஆகாயத்தில் உலாவியருளினர். சநற்குமாரமுனிவர் யோகத்தில் வைத்த கருத்தினால் அதனை யறியாதவராய், இருக்கையினின்று எழும்பாதவராயினர். கணநாதராகிய திருநந்திதேவர்

முனிவரை நோக்கி வெகுண்டு, எம்பெருமானை இகழ்ந்தமை பற்றி ஒட்டகமாகக் கடவாய் என்று சபித்தருளினர். முனிவர் உடனே ஒட்டகமாயினர். சில காலங்கழியத் திருவருள் வசத்தினுற் காஞ்சிபுரத்தை அடைந்து சிவார்ச்சனை செய்து சாபநீக்கம் பெற்றனர் என்று காஞ்சிப் புராணத்திற் கூறப்பட்டுளது.

சிவபெருமான் வீதிப்பிரதக்ஷிணம் செய்தருளுவது மூவுலகங்களையும் இரட்சித்தருளும் குறிப்பாகும். இடபம் முதலிய வாகனங்களில் எழுந்தருளுதல், இயக்கர், இராக்கதர், அவுணர், பைசாசர் முதலிய துட்டர்களை நிக்கிரகித்தற் பொருட்டும் தேவர் மனிதர் முதலிய சிட்டர்களை அநுக்கிரகித்தற் பொருட்டுமாம்.

கல்வரைப் பிராட்டி செவ்வே ளைங்கரன் கணங்கள் சூழ
பல்வகை யூர்தி யும்பர்ப் படரொளி யரச வீதி
யெல்லையி லுயிர்கட் கெல்லா மென்னருங் கருணை பூத்துப்
புல்கொளித் திருவே கம்பன் றிருவுலாப் போதச் செய்வோர்.

மேதகு தவங்தானங்கள் வேள்விகளனைத்துஞ் செய்தோர்க்
கோதிய பயத்திற் கோடி யுடையராய்க் கோடிகோடி
யேதமில் குலத்தினோடு மெம்பிரா னுலகில் வாழ்ந்து
சாதலும் பிறப்புமில்லாத் தத்துவர் தலைப்பட்டுய்வார்.

—காஞ்சிப்புராணம்

## 58. யாகம்.

### மண்டப சொரூபம்.

சிவ யாக மண்டபமானது ஷடத்துவாக்களின் வடிவமாகவுள்ளது. யாகசாலை எங்கும் சாந்திய தீதாகலா சொரூபமாம். கிழக்குத் துவாரம் முதலிய நான்கு துவாரங்களும் சாந்தி வித்தை பிரதிட்டை நிவிர்த்தி என்னுங் கலாத்துவா

வடிவாயுள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு வர்ணத்துவா வடிவமாகவுள்ளது. கும்பங்கள் பதினொரு மந்திராத்துவா வடிவமாகவுள்ளன. ஓமத்திரவியங்கள் முப்பத்தாறு தத்துவாத்துவா வடிவாகவுள்ளன. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இருநூற்றிருபத்து நான்கு புவனத்துவா வடிவாகவுள்ளது என்று சைவபூஷணத்திற் சொல்லப்பட்டது.

## கும்ப லக்ஷணம்.

கும்பத்தில் ஆவாகிக்கப்படும் சிவபெருமானுக்குக் குடம் மாமிசமாகவும், கும்பத்தில் நிறைந்த உதகம் இரத்தமாகவும், சுற்றப்பட்ட நூல் எழுபத்தீராயிரம் நாடிகளாகவும்; இரத்தினம் எலும்பாகவும், வஸ்திரம் தோலாகவும், கூர்ச்சம் கேசமாகவும், மாவிலை சடையாகவும் மாதுளம்பழம் பற்களாகவும், தேங்காய் சிரசாகவும், செபிக்கும் மந்திரம் பிராணனாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு யோகஜாகமத்திலே கூறப்பட்டது. இரத்தினம் சுவர்ண புஷ்பம் முதலியன சுக்கிலமென்று சித்தாந்த சாராவளி செப்பும்.

## ஆசனம்.

பிருதுவி தத்துவம் கூர்மாசனமும், உபவேதிகை அநந்தாசனமும், மகாவேதிகை சிம்மாசனமும், நெல் யோகாசனமும், அரிசி பதுமாசனமும், எள்ளு விமலாசனமும், நெல் மலர் சத்தியாசனமுமாகப் பிருதுவி முதற் குடிலையீறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன. நெல்லு தாமரை நாளத்து முட்களாகவும், அரிசி தாமரைப்பூ இதழ்களாகவும், பயறு தாமரைப் பொருட்டாகவும், உழுந்து தாமரைக் கொட்டையாகவும், எள்ளு கேசரங்களாகவும் பாவிக்கப்படுகின்றன.

## யாகதேவர்கள்.

பிரமா, விட்டுணு, இந்திரன் முதலியோர் அசுத்த மாயா புவனங்களில் இருப்பவரும் சுத்தவித்தையில் இருப்பவருமென இருதிறப்படுவர். சுத்தவித்தியா தத்துவத்தில் சத்த கோடி மகா மந்திரங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டாகமங்களும், ஐம்பத்தொரு அக்ஷரங்களும், நந்தி, மகாகாளர் பிருங்கி, விநாயகர், இடபதேவர், கந்தர், தேவி, சண்டர் என்னும் கணநாதர் எண்மர்களும் இந்திரன் முதலிய உலக பாலகர்களும் இருக்கும். மகேசுர தத்துவத்தில் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி ஸ்ரீகண்டர், சிகண்டி என்றும் அட்ட வித்தியேசுரர்களும் இருப்பர். சத்தி தத்துவத்தில் நிவிர்த்தி முதலிய கலைகள் இருக்கும்.

சுத்த வித்தை முதலிய தத்துவங்களில் இருப்பவர்களது சரீரம் வைந்தவமாகையாலும், மலபரிபாக முற்றப் பரமசிவனருளாற் பதம் பெற்றவர் ஆகலானும், பிறப்பிறப்புக்களை நீக்கி ஆண்டு நின்றபடியே சிவதரிசனத்தால் ஆனந்த விளக்கத்தை அடைவர் ஆகலானும் இவர்களே யாகாதி கன்மங்களிற் பூசிக்கப்படும் பெருமை பெற்றவர்களாவார்.

அசுத்தமாயா புவனங்களில் இருப்பவரது சரீரம் பிரகிருதி சம்பந்தம் ஆகலானும், முன் பரமசிவன் அனுக்கிரகம் இல்லாமையானும் அவர்களது தானம் பசுத்தானம் ஆகலானும் அசுத்த தத்துவம் முப்பத்தொன்றையும் மனசாற் கடந்து சுத்த வித்தியாமயமான யாகசாலையை யடைந்து பூசித்து வணங்குவதினூலும் அசுத்தபுவன வாசிகள் சுத்த வித்தியாமயமான ஸ்தானத்திற் பூசிக்கப்படத் தக்கவர் அல்லர்.

### ஆகுதி.

யாகசாலையிலுள்ள சிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அநுபவத்துக்கு வரவொட்டாது சுத்தமாக்கும் பாவனையாகும்.

### லாஜ புஷ்பம்.

உமி முதலியவற்றிலிருந்து சுத்தமான நெல்மலரைச் சுவாமிக்கு ஆசாரியர் சமர்ப்பிப்பது மலநீங்கிய ஆன்மாக்களைச் சிவத்தோடு சேர்க்கும் பாவனையாகும்.

---

## 59. பத்துநாள் உற்சவம்.

மகோற்சவ நாள் பத்தினுள் முதல் நாள் விழாத் தூல நீக்குதற் பொருட்டும்; இரண்டாம் நாள் விழாத் தூலசூக்குமம் நீக்குதற் பொருட்டும்; மூன்றுநாள் விழா மூவினையும்; முப்புத்தியும், முக்குணமும், மும்மணமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற் பொருட்டும்; நாலாம் நாள் விழா நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும், நீக்குதற் பொருட்டும்; ஐந்தாம் நாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும், ஐந்து மலமும் நீக்குதற் பொருட்டும்; ஆறாம் நாள் விழா காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும், நீக்குதற் பொருட்டும்; எழாம் நாள் விழா எழுவகைப் பிறப்பும், கலாதியேழும், மாயாமல குணமேழும் நீக்குதற் பொருட்டும்; எட்டாம் நாள் விழா எண்குணம் விளக்குதற் பொருட்டும்; ஒன்பதாம் நாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இல்லையெனற் பொருட்டும்; பத்தாம் நாள் விழா பரமானந்தக் கடலில் அழுத்துதற் பொருட்டும் என விம்பதந்திரம் சிவோத்சவ விதிபடலம் செப்புகின்றது. இவ்வாகமம் கூறும் மகோற்சவ உண்மையைச்

சைவசமயநெறியிற் பொதுவிலக்கணத்து 346ம் திருக்குற ளின் ஆறுமுகநாவலர் விசேட உரையிற் காண்க.

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றிய சந்திர மௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகம்:—

விழாவொன்று துலம விடுத்தற் பயத்தது
விழாவிரண் டடவிரண்டும்
விள்ளற் பயத்தமுந் நாள்விழா வினைமுதன்
மும்மையா மெழுமைவீட்டல்
விழாநான்கு நாற்கரண நால்வகைத் தோற்றம்
விடுத்தலைந் தாநாள்விழா
விரவுமைம் பொறியைந் தவத்தைமல மைந்தும்
விலக்கன்மூ விருநாட்டிரு
விழாகாம மாதிகலை யாதிபத முத்திகள்
வினைக்குண மவ் வாறும்வீய்த்தல்
விழாவேழு சனனங் கலாதிமா யாமல
விதங்களெவ் வேழும்வேறல்.........
சந்த்ரபுர தலவாசனே.

எண்ணாள் விழாவென் குணம்விளக் கற்பொருட்
டென்பவொன் பானாள்விழா
வெய்துமூன் றருமுத் தொழின்மூன் றிடத்துறைத
லென்றுமொன் பதுமிலையெனல்
பண்ணுபத் தாநாள் விழாப்பரா னந்தமாப்
பரவையிற் படிதல்பயனும்
பத்துநா ளின்மேல் விழாவில்லை விம்பதந்
திரமீது பகருமதனிற்
கண்ணாரவேகாண லாம்பத்து நாள்விழாக்
காட்டுகா ரியவிரிவினைக்
கழறிடு மகோற்சவத் தொருகாலை பகலுண்டு
காத்தல்விர தங்கடனதாம்.........
சந்த்ரபுர தலவாசனே

## முதல்நாள் உற்சவம்.

முதல்நாள் உற்சவம் தூலதேகத்தை நீக்கிக்கொள்ளுதற் பொருட்டுச் செய்யப்படுவதாம். பரம வைத்தியராகிய சிவ பெருமான் தூல சூக்குமமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் மருந்தாக நமக்குத் தந்தது, மலமாகிய நோயைநீக்கி, அஞ்ஞானத்தைக் கெடுத்துச் சிவஞானத்தை விளக்கிச் சிவானந்தப் பெரும்பேறு தந்தருளுதற் பொருட்டேயாம்.

மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என முத்திறப்படும். சுத்தமாயையிற் சிவதத்துவம் ஐந்தும் தோன்றும். அசுத்தமாயையில் வித்தியாதத்துவம் ஏழுந்தோன்றும். கலையிற் பிரகிருதி தோன்றும். பிரகிருதியிற் புத்தி தோன்றும். புத்தியில் அகங்காரந் தோன்றும். அகங்காரம் தைசதம், வைகாரிகம், பூதாதி என முத்திறப்படும். தைசத அகங்காரத்தில், மனமும் ஞானேந்திரியமைந்துந் தோன்றும். வைகாரிகா அகங்காரத்தில் கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றும். பூதாதி அகங்காரத்தில் தன்மாத்திரை ஐந்தும் தோன்றும். தன் மாத்திரையிற் பூதங்கள் ஐந்தும் தோன்றும். இங்ஙனம் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் தோன்றும்.

### சிவதத்துவம்.

சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை .... 5

### வித்தியாதத்துவம்.

மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன். 7

### ஆன்மதத்துவம்.

அந்தக்கரணம் : புத்தி, அகங்காரம், மனம், சித்தம் .... 4

| | | |
|---|---|---|
| ஞானேந்திரியம் : | சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் .... | 5 |
| கன்மேந்திரியம் : | வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம். | 5 |
| தன்மாத்திரை : | சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம். | 5 |
| பூதம் : | ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி .... | 5 |

ஆகத்தத்துவம் முப்பத்தாறு.

இவற்றுட் பஞ்சபூதங்களின் காரியமே புறக்கருவிகள்.

| | | |
|---|---|---|
| பிருதுவியின் காரியம் : | மயிர், தோல், எலும்பு, நரம்பு தசை | 5 |
| அப்புவின் காரியம் : | மூத்திரம், உதிரம், சிலேட்டுமம், வியர்வை, சுக்கிலம் .... | 5 |
| தேயுவின் காரியம் : | ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் .... | 5 |
| வாயுவிற்றோன்றும் வாயுக்கள் : | பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன். கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் .... | 10 |
| வாயுவின் காரியம் : | கிடத்தல், ஓடல், இருத்தல், நடத்தல், நிறுத்தல் .... | 5 |
| பிருதுவியிற்றோன்றும் நாடிகள் : | அத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, குகு, சங்கினி, சிகுவை, புருடன் | 10 |
| ஆகாயத்தின் காரியம்: | காமம், குரோதம், மதம், லோபம், மோகம் .... | 5 |
| கன்மேந்திரியத்தின் தொழில் : | வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் .... | 5 |

| | | |
|---|---|---|
| மூலாதாரத்திற் பிறக்கும் வாக்குகள் : | சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி .... | 4 |
| பிரகிருதியிற் றோன்றும் குணங்கள் : | சாத்துவிகம், இராசதம், தாமதம் | 3 |
| ஏடணைகள் மூன்று : | தாரஏடணை, புத்திரஏடணை, அர்த்த ஏடணை .... | 3 |

இவை ஆகாயத்திற் றோன்றுவன.

ஆக அறுபது.

## தசநாடிகள்.

நாடிகள் தோற்றுதற் கிடமாகிய கிழங்கு நாபிக்குக் கீழிருக்கும். அதில் எழுபத்தீராயிரம் நாடிகள் தோற்றி மேலுங்கீழுமாகச் சஞ்சரிக்கின்றன. அவற்றுள் தசநாடிகள் விசேடமுள்ளன. **இடைநாடி** கந்தத்தினிடப்புறத்திலிருந்து தோற்றிக் கத்தரிக்கோல் போல மாறி, பிராணவாயுவுடன் கலந்து, பிரமரந்திரம் வரையும் வியாபித்து, இடநாசியைப்பற்றி நிற்கும். **பிங்கலை** நாடி கந்தத்தின் வலப்புறத்திலிருந்து தோன்றிக் கத்தரிக்கோல்போல மாறிப் பிராணவாயுவுடன் கலந்து பிரமரந்திரம்வரையும் வியாபித்து வலநாசியைப்பற்றி நிற்கும். **சுழுமுனை** நாடி இரண்டு காற்பெருவிரலிலிருந்து தோன்றி மூலாதாரம்வரை இரண்டு வடிவுடையதாகவும், அதன்மேல் ஒரு வடிவுடையதாகவும், சகல நாடிகளுக்கும் ஆதாரமாயும், நடுநாடியாயும், பிராணவாயுவைச் சேர்ந்து, பிரமரந்திரம் வரையும் சகளரூபமாயும், அதற்குமேல் துவாதசாந்தம் வரையும் நிஷ்களரூபமாயும் வியாபித்து நிற்கும். **காந்தாரி** வலக்கண்ணளவாய் நிற்கும். **அத்தி** இடக்கண்ணிலும் நாக்கிலும் நிற்கும். **சிகுவை** வலக்காதளவாய் நிற்கும்

புருடன் இடக்காதளவாய் நிற்கும். அலம்புடை குறியளவாய் நிற்கும். குருநை குதத்தளவாய் நிற்கும். சங்கினி நாசி மத்தியில் நிற்கும். நாடிகளெல்லாம் சக்கரம்போலச் சரீரத்தைச் சூழ்ந்திருக்கும்.

## தசவாயுக்கள்.

நாடிகளின் மத்தியில் வாயுக்கள் சஞ்சரிக்கும். இந்திர நீலரத்தினம்போன்ற **பிராணவாயு** நெற்றியிற்றோன்றி, சித்திர நாடியில் விழுந்து மூலாதாரத்திற் குதித்து, நாபித்தானத்தை முட்டி இருதயத்திலிருந்து உச்சுவாசநிச்சுவாசங்களை உண்டாக்கி, இடை பிங்கலைகளிலோடிக் கபாலத்தைச் சுற்றி, நாசியிற் பன்னிரண்டங்குலம் புறப்பட்டு, நாலங்குலங் கழன்று, எட்டங்குலம் மீண்டு, தான் நின்ற இடத்தைத் தாக்கும், இங்ஙனம் ஒரு நாழிகையில் 360 சுவாசமாக 60 நாழிகையில் 21600 சுவாசமாகும். இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் இயங்கி, 7200 சுவாசம் வெளியேகழிய 14400 சுவாசம் உள்ளேபோகும். இந்திரகோப நிறத்தையுடைய **அபானன்** குதத்தையும், குய்யத்தையும் சுற்றிநின்று மலசலங்களைக் கழிப்பிக்கும். வெண்மை நிறமுடையதாகிய **வியானன்** உடம்பிலுள்ள சந்திகளை அடைந்து, தோலில் நின்று பரிசத்தை அறிவிக்கும். மின்னலையும் அக்கினியையும் போன்றதும் பலமும் ரோகமும் உண்டாதற்கு இருப்பிடமாயுள்ளதுமாகிய **உதானன்** விலாக்களையும், காதுகளையும், கண்களையும் மூக்கையும் இடமாகக் கொண்டு இருக்கும். காயாமலரைபொத்த நிறமுள்ள **சமானன்** கழுத்து, சிரசு, நாக்கு, கணைக்கால் பரடு என்னுமிடங்களிலிருந்து எல்லா வாயுக்களையுங் கூடியுங் குறைந்துமிருக்க வொட்டாது சமமாக்கிக் கொண்டு உண்ட அன்னபானாதிகளை உதராக்கினியினாற்

சிரணிக்கச் செய்து, பாதந்தொடங்கித் தலைவரையுமுள்ள எழுபத்தீராயிரம் நாடிகளிலும் கலப்பித்துச் சரீரத்தை வளர்க்கும். பொன்னையும் இளஞ்சூரியனையுமொத்த **நாகன்** நெற்றி மூக்கு முதலியவற்றை இடமாகக்கொண்டு, மயிர்ச்சிலிர்ப்பு முதலியவற்றை உண்டுபண்ணும். குருந்தமலர் போன்ற நிறமுடைய **கூர்மன்** கண்ணிமையை அடைந்து விழிக்கவும் மூடவும் செய்யும். கருநிறமுடைய **கிருகரன்** மூக்குநுதியில் நின்று தும்மல், அழுகை, நீட்டல், முடக்கல், அசைவு முதலியவற்றையும் பசியையும் உண்டுபண்ணும். பளிங்குநிறமுடைய **தேவதத்தன்** முகத்தையும், முதுகையும், காலையும், பிடரையும் இடமாகக் கொண்டு, நித்திரையினின்று எழும்பச்செய்து, கொட்டாவியையும் ஓடல் உலாவல் முதலியவற்றையுஞ் செய்விக்கும். நீலநிறமுடையதாகிய **தனஞ்சயன்** தேகத்தில் அமிர்தத்தைச் சொரியச் செய்யும். உயிர் உடம்பைவிட்டு நீங்கிய பின்பும் தான் பிரிகிலாது நின்று உடலை வீங்குவித்தல் முதலியவற்றைச் செய்து கபாலத்தைப் பிளந்துசெல்லும்.

## நால்வகை வாக்கு.

சுத்தமாயா காரியமான வாக்கானது **சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி** என நால்வகைப்படும். **சூக்குமை** வாக்கானது சாந்தியதீதகலையைச்சார்ந்து தோன்றிச் சிவதத்துவத்தினின்று தொழிற்பட்டுக் காரண சரீரத்தின் அகத்தே நாத வடிவாய் இயங்கிக்கொண்டு, ஞானமாத்திரைக்கு ஏதுவாயிருக்கும். **பைசந்தி** வாக்கானது சாந்திகலையைச் சார்ந்து தோன்றி சத்தி தத்துவத்தினின்று தொழிற்பட்டு எழுத்துக் வெவ்வேறாகப் பிரிந்து தோன்றும் முறையை அடக்கி, சூக்கும ரூபமாய்ச் சித்தத்தில் நிற்றலும், நிர்விகற்பமாய்த் தோன்றுதலுமாயிருக்கும். **மத்திமை** வாக்கானது வித்தியா

கலையைச்சார்ந்து தோன்றிச் சாதாக்கிய தத்துவத்தினின்று தொழிற்பட்டுத் தன்னுள்ளே உணரும் ஓசையாய், உதான வாயுவின் தொழிற்பாட்டினால் உள்ளே அக்கரங்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாயிருக்கும். வைகரி வாக்கானது சூக்கும வைகரி தூலவைகரி என இருவகைப்படும். சூக்குமவைகரி பிரதிட்டாகலையைச் சார்ந்து தன் செவிக்குக் கேட்கப்படுவதாய், மகேசுவர தத்துவத்திலும் தூலவைகரி நிவிர்த்திகலையைச் சார்ந்து தன் செவிக்கும் பிறர்செவிக்கும் கேட்கப்படுவதாய்ச் சுத்தவித்தையிலும் நின்று தொழிற்படுவனவாம்.

இந்த வாக்குகள் பகுத்துணர்வதாகிய சவிகற்ப ஞானத்துக் கேதுவாதலால், ஆன்மாக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும். இவ்வாக்கு இல்லையாயின், விளங்கிய ஞானமில்லையாம். இதனாலுண்டாகும் ஞானம்உலகப்பொருளை அறியும் ஞானமாம். ஆகலின் சவிகற்ப உணர்விற்கேதுவாகிய இவ்வாக்குகள் மேலான பந்தமாம். ஆதலின் இவ்வாக்குகளைத் தன்னின் வேறாகக் கண்டு நீக்கி, அவற்றிற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின் அப்பொழுதே சிவபெருமான் திருவடியாகிய பரமுத்தியை அவன் தலைப்படுவன்.

சாதி, குலம், பிறப்பு முதலியவற்றான் அபிமானஞ் செய்தற்கு இடமாகிய இந்தத் தூலதேகத்தின் பற்றை நீக்கினாலன்றிப் புத்தியின் குணமாகிய சுகதுக்க மோகங்களை நீக்கமுடியாது. ஆகையாற் சரீரத்தை வெறுத்து அதனைத் தரித்தற்கு இளைத்து, நிலையற்றதெனத் தெளிந்து தூலதேகத்திற்குக் காரணமாகிய பஞ்சபூதங்களும் அநித்தியம் என்பதை அறிந்து நித்தியராகிய சிவபெருமானது திருவடிகளில் அன்பு வைத்து, இச்சரீரத்தை அச்சிவன்வசமாக ஒப்பித்து அவரையே பற்றி நிற்கவேண்டும்.

முப்பது முப்பத்தாறு முப்பது மிடுகுரம்பை
அப்பர்போ லைவர்வந்து வதுதரு கிதுவிடென்று
ஒப்பலே னவியலுற்று லுய்யுமா றறியமாட்டேன்
செப்பமே திகழுமேனித் திருப்புக லூரனீரே.

—ஸ்ரீவாகீசமூர்த்திகள்.

தேனைக் காவல்கொண்டு விண்டகொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல்கொண்டு நின்றாரறியாத நெறியானே
யானைக் காவிலரனே பரனேயண்ணா மலையானே
யூனைக் காவல் கைவிட்டுன்னை யுகப்பா ருணர்வாரே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

சித்திரையிற் செத்தபிண நேருமுடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.

—தாயுமானசுவாமிகள்.

---

## இரண்டாம்நாள் உற்சவம்.

### தூலசூக்கும நீக்கம்.

சூக்கும உடம்பு தூல உடம்பிற்குக் காரணம். சூக்கும உடம்பு சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னுந் தன் மாத்திரைகள் ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்றுமாகிய எட்டுத் தத்துவங்களால் உண்டாயது. குருடனுக்குக் கோலை ஆதாரமாகக் கொடுப்பதுபோல, கேவலாவத்தையில் அறிவு தொழிற்பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்குச் சிவபெருமான் சூக்குமதேகத்தைக் கருணையினாற் கொடுத்தருளினார்.

தூலசூக்கும தேகத்தின் வேறாகிய ஆன்மா அத்தேகத்தைத் தன்னின் வேறெனக் கண்டு பற்றுநீக்குதல் வேண்டுமென்னும் பாவனையாகவே இரண்டாம்நாள் உற்சவம் நடத்தப்படுகின்றது.

---

## மூன்றும்நாள் உற்சவம்.

மூன்றும்நாள் உற்சவம் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று என்னும் ஏழையும் ஒழித்தற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

### 1. மூவினை.

வினைகள்: ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். ஆகாமியமாவது ஒவ்வோர் பிறவிகளிலும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றிஞலும் செய்யப்படும் நல்வினை தீவினைகளாம்.

மனத்திஞலுண்டாகும் நல்வினைகள்: அருளுடைமை, பொறை. பிறர்பொருள் விரும்பாமை, செய்ந்நன்றி மறவாமை, அபிமானம்பேணல், அழுக்காறின்மை, அவாவறுத்தல், பிறர் துன்பங்கண்டிரங்குதல், பிறர்கல்வி செல்வம் அழகு ஆகியவற்றைக் கண்டு சந்தோஷித்தல் முதலியன. இவைகளுக்கு மாறுபட்டவைகள் தீவினைகளாம்.

வாக்கிஞலுண்டாகும் நல்வினைகள்:—தருமம். ஞானங் கூறல், புறங்கூருமை, உண்மைபேசுதல், நாலுரைகூறல், இனியவைகூறல், வேதாகமங்களை ஓதல் முதலியன. இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம்.

காயத்திஞற் செய்யும் நல்வினைகள்: பிறர்மனைசேராமை, குளம், கூவல், தன்மசாலை, வித்தியாசாலை, நந்தனவனம், திருக்கோயில் முதலியவற்றை அமைத்தல். இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம்.

மேற்கூறிய நல்வினை தீவினைப்பயன்களை ஆன்மா திருஷ்டம் அதிருஷ்டம், திருஷ்டா திருஷ்டம் என மூவகையாக அனுபவிக்கும். நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற பயன்களைச்

செய்த அப்பிறப்பில் அனுபவிப்பது திருஷ்டம் எனப்படும். செய்த பிறவியில் அனுபவியாமை அதிருஷ்டம் எனப்படும். செய்த பிறவியிலும் மறுபிறவியிலும் அனுபவிப்பது திருஷ்டா திருஷ்டம் எனப்படும்.

சஞ்சிதமாவது அங்ஙனஞ் செய்யப்பட்ட வினைகள் பயனுக்கு வராமல் பக்குவமடையும் வரையும் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையில் புண்ணிய பாவமாய்க் கட்டுப் பட்டுக் கிடக்கும். அங்ஙனம் கிடக்குங்காற் சூக்கும கன்மம் எனப் பெயர்பெறும்.

பிராரத்தமாவது கட்டுப்பட்டிருந்த சஞ்சித கன்மத்தைப் பக்குவப்பட்டவழி சிவபெருமான் நியதிசெய்துதர ஆன்மா இன்பதுன்பமாய் அனுபவிப்பதாம். அனுபவிக்குங் கால், ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என முத்திறப்படும். ஆதி தைவிகமாவது உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வ முன்னிலையாக மாதாவின் கருப்பம், சனனம், மரணம், நரை, திரை, வியாதி, நரகம் முதலியவற்றினாலே துக்கப்படுதல். ஆத்தியான்மிகமாவது: மிருகம், பறவை, இராக்கதர், பிசாசு, கள்வர், மானுடர் முதலிய பிற உயிர்களாலும் பிறர் கல்வி செல்வம் ஆதியவற்றைக் கண்டு பொறாமை கொண்டு கோபியாய்த்திரிதல் முதலாகத் தன்னாலும் வருவது. ஆதி பௌதிகமாவது: குளிர், தீ, பனி, மழை, காற்று, மின்னல், இடி, சுவர்வீழ்தல் முதலிய பூதமுன்னிலையாக வருவது.

தினந்தோறுஞ் செய்யுஞ் சிவபுண்ணியங்களால் ஆகாமியங் கெடும். ஆசாரியர் தீக்ஷையிற் செய்யும் அருட்பார்வையால் அக்கினியை அடைந்த வித்தைப்போலச் சஞ்சிதகன்மம் பயனுக்கு வராமற் கெட்டு நீங்கும். பிரார்த்தம் உடம்புடன் நீங்கும்.

திருநேரிசை.

விளக்கின்ற வினையைநோக்கி
வெண்மயிர் விரவிமேலும்
முளைக்கின்ற வினையைப்போக
முயல்கிலே னியலவெள்ளம்
திளைக்கின்ற முடியினான்றன்
றிருவடி பரவமாட்டா
திளைக்கின்றே னிருமியூன்றி
யென்செய்வான் றோன்றினேனே.

—திருநாவுக்கரசு நாயனர்.

நெறிசெய்தருளித் தன்சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்துகொண் டென்னையாண்ட பிரான்குணம்பரவி
முறிசெய்தநம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்தவாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

—திருவாசகம்.

## 2. முப்புத்தி

முப்புத்திகள்; ஐயம், விபரீதம், மயக்கம் என்பன. அவற்றுள் ஐயமாவது மறுபிறப்பும் இருவினைப்பயன்களும் கடவுளும் உண்டோ இல்லையோ என்று ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல். விபரீதமாவது பொருளல்லாதவற்றைப் பொருளென்று உணர்தல். அஃதாவது மறுபிறப்பும் இருவினைப் பயன்களும் இல்லையென்றும், இவை முதலியவற்றைக் கூறுகின்ற பசுசாஸ்திரத்தை மெய்ந்நூல் வழக்கமென்றுந் துணிதல். இதனால் நால்வகைத் தோற்றங்களினுஞ் சென்று துன்பத்தை அனுபவிப்பார்கள். மயக்கமாவது மாயையின் காரியமாகிய அஞ்ஞானமாகும். அருள்வழி நிற்போருக்கு மயக்கம் வந்து தாக்காது.

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

—திருவள்ளுவநாயனர்.

## 3. முக்குணம்.

குணமானது மாயையாகிய சடத்தின் குணமும் ஞான மாகிய சித்தின் குணமுமென இருவகைப்படும். மாயையின் குணமானது சாத்துவிகம், இராசதம், தாமதம் என முத்திறப் படும். இக்குணங்கள் மாயாகாரியமாகிய தநுகரண புவன போகங்களிற் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாக்களிடத்து நிகழ் வனவாம். ஞானகுணத்தின் வியாபாரபேதமான எண்குணங் கள் இறைவனிடத்து நிகழ்வனவாம்.

ஆன்மாக்கள் ஒன்றேடொன்று மாறுபடுவனவும் பந்தத் திற்கு ஏதுவாயுள்ளனவுமாகிய மாயாகுணங்களை நீக்கினலே யன்றி, ஒன்றேடொன்று மாறுதலடையாத எண்குணப் பேற்றை அடையமாட்டா. எட்டாம்நாள் விழாவில் எண் குணம் விளங்கித்தோன்றும். ஈண்டு மாயாகுணம் நீக்க முண்டாகும்.

சாத்துவிகம் சாந்தத்தையும் இன்பத்தையுந்தந்து நன்மை தீமைகளைப் பகுத்தறியச் செய்யும். இராசதம் பிரவிருத்தி யையுந் துன்பத்தையுந் தந்து அறிந்தவற்றில் முயற்சியை உண்டாக்கும். தாமதம் மோகத்தையும் மூடத்தையுந் தந்து சுகதுக்கங்களை வினைப்பயனென்று அறியவொட்டாது அவற்றிற் கட்டுப்படுத்தி மயக்கத்தை உண்டாக்கும்.

பண்டாரசாத்திரத்தில் "மற்றைமூன்றும் விழாவின் முக்குண மாழ்வதாகக் கற்றைவார் சடையெம்மண்ணல் கலந்திலாச் செய்யனுற்றார்" எனவருவதுங் காண்க.

## 4. மும்மனம்.

அவை சிந்தித்தல் நிச்சயித்தல் கொண்டெழுப்பல் என்னும் இவற்றுக்கேதுவாகிய சித்தம் புத்தி அகங்காரங் களாம்.

தைசத அகங்காரத்தினின்று மனந்தோன்றி எதிர்ப்பட்ட பொருளைச் சித்தரூபமாய் நின்று அப்பொருளின் உண்மையை அறியாமல் பிண்டமாகவறிந்து சிந்திக்கும். புத்தி ஆன்மாக் கள் செய்த புண்ணிய பாவங்களைப் பொருந்தி அப்புண்ணிய பாவத்திற்கீடாக வந்த பொருளை நிச்சயிக்கும். நிச்சயிக்குங் கால் சிலகாலத்துச் சரியாயும் சிலகாலத்துப் பிழையாயும் இருக்கும். புத்தி தத்துவத்தில் அகங்கார தத்துவந்தோன்றி, இவ்விடத்து என்னையொப்பார் ஒருவருமில்லையென அகந் தைப்படுதற்குக் காரணமாய் உடலை யான் என்றும் மற்றைப் பொருள்களை எனதென்றும் புத்தியுடன் ஒருப்பட்டெழுந்து உயிரோடு வேற்றுமையின்றி நிற்கும்.

## 5. முக்குற்றம்.

அவை காமம் வெகுளி மயக்கம் என்பன. காமம் - அவா; வெகுளி - கோபம்; மயக்கம் - மனக்கலக்கம்.

அவாவாவது இவ்வுலகத்திலுள்ள சிற்றின்பப் பொரு ளைக் காமித்தலாம். பிறப்பு இறப்புக்களிற் கட்டுப்படுத்துவ தாகிய சிற்றின்பப் பொருளை அவாவிய ஆன்மாவிற்குத் தான் விரும்பியபொருள் கிடைக்காவிடினும், பிறரால் தடை முதலியன வந்து சம்பவிப்பினும் கோபந்தோன்றி அருளையும் அருளினுலுண்டாகும் முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையுங் கெடுக்கும்; இது செய்யலாம் இது செய்யலாகாதென ஆராய்ந் தறிகின்ற நல்லறிவும் நீங்கிவிடும்; மனக்கலக்கத்தையும் இப் பிறப்பிற் பழியையும் மறுமையில் நரகத்துன்பத்தையும் உண்டு

பண்ணும். ஆகையால், இவ்வுலகத்து இன்பமும் சுவர்க்காதி உலக இன்பமும் ஆராயுமிடத்துக் கீழ்ப்பட்டவைகளெனக் கண்டு, அவாவையறுத்துக் கோபத்தையடக்கிச் சிவபெருமானை அன்புடன் தியானிக்க மனக்கலக்கம் நீங்கும். நீங்கவே மோக்ஷத்தில் அவாவுண்டாம்.

மருளவா மனத்தனாகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா வறுக்குமெந்தை யிணையடி நீழலென்னும்
அருளவாப் பெறுதலின்றி யஞ்சினா னலமர்தேற்குப்
பொருளவாத் தந்தவாறே போதுபோய்ப் புலர்ந்ததன்றே.

—திருநாவுக்கரசுநாயனார்.

உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன் வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ.

—திருவாசகம்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய். —உத்தரவேதம்.

## 6. முப்பிறப்பு.

அவை கழிந்தபிறப்பு, இப்பிறப்பு, இருபிறப்பு என்பன. இவை முறையே உம்மை, இம்மை, அம்மை எனவுங் கூறப்படும்.

பிறப்பு அநாதியாகலின், ஆன்மாக்களால் அளவின்றிச் சம்பாதிக்கப்பட்ட வினைப்பயன்களுள், கழிந்த பிறவிகளால் அநுபவித்தனவும், இப்பிறப்பில் உடம்புள்ளவரையும் அநுபவிப்பனவும், அநுபவித்தொழிய வருபிறப்பில் அநுபவிக்கும்படி இருக்கும் வினைகள் சிவபெருமானையுணர்ந்து அகப்பற்றுப் புறப்பற்றுக்களை நீக்கினவர்களுக்கு வந்து தாக்கமாட்டா.

இம்மை யம்மை யெனவி ரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்
மெய்ம்மை யானினை வார்கடம் வல்வினை
வம்மின் தீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே.

—திருநாவுக்கரசுசுவாமிகள்.

## 7. முப்பற்று.

தநு கரண புவன போகம் என்னும் நான்கும் மாயையில் உன்டானவை. அவற்றுள் தநு கரணம் என்னும் இரண்டும் நான் என்னுஞ் செருக்கினையும் புவனபோகம் இரண்டும் எனது என்னுஞ் செருக்கினையும் உண்டாக்கும். தநு - தேகம்; கரணம் - அந்தக்கரண புறக்கரணங்கள்; புவனம் - பூமி முதலிய பிரபஞ்சம்; போகம் - அனுபவிக்கப்படும் பொருள்.

தேகத்தை நானென்று சொல்லுகின்ற அகப்பற்றாகிய அகங்காரப் பிராந்தியை நீக்குதற்கு மண் முதலியவைகளை எனது என்று சொல்லுகின்ற புறப்பற்றை நீக்குதல்வேண்டும். புறப்பற்றானது விறகாகவும், அகப்பற்றானது அக்கினியாகவும் இருக்கும். விறகைப்பற்றிய அக்கினியானது மூண்டு பற்றி முழங்கி எரியும். விறகிலதேல் அக்கினியுமின்றாம். ஆகையால் புறப்பற்று உள்ளளவும் அகப்பற்று ஆன்மாவை விட்டு நீங்காது. இவைகளை நீக்கினவர்களே மெய்ஞ்ஞானத்தை அடைவார்கள்.

புறப்பற்றானது: உலகவீடணை, தனவீடணை, தாரவீடணை என மூன்றாம். உலகவீடணையானது அநித்தியமானதும் மூலப்பிரகிருதியின் காரியமானதுமாய் உள்ளது. தனவீடணை யானது பொய்யான இன்பத்துக்குக் காரணமானதும், தன்னை விட்டு நீங்குங்காலத்துத் துன்பத்தை உண்டாக்குவதுமா யுள்ளது. தாரவீடணையாவது பெண்களிடத்து வைக்குமாசை.

கேடு மூடிக் கிடந் துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே

—திருநாவுக்கரசுநாயனர்.

வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலங் கல்வியெனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

—மாணிக்கவாசகசுவாமிகள்.

சிவசத்திவடிவாகிய நிவிர்த்தியென்னும் பெயரையுடைய கிரியாசத்தியானது மண் பெண் பொன் முதலிய பிரபஞ்சப் பற்றுக்களினின்றும் ஆன்மாக்களை நிவிர்த்தி செய்யும். பிரதிஷ்டை என்னும் பெயரையுடைய ஞானசத்தியானது நிவர்த்திசெய்யப்பட்ட ஆன்மாக்களை வாசனைபற்றி மீளப்பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் நிலைபெறச் செய்யும். வித்தியாகலை என்னும் பெயரையுடைய இச்சாசத்தியானது நிலைபெறச் செய்யப்பெற்ற ஆன்மாக்களுக்கு அனுமான ஞானம் ஆகம ஞானமின்றிச் சிவாநுபூதி ஞானத்தைப் பயப்பிக்கும்.

---

## நான்காம்நாள் உற்சவம்.

நான்காம்நாள் உற்சவம் மனம் முதலிய நாற்கரணமும், அண்டசம் முதலிய நால்வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டுச் செய்யப்படுவதாம்.

### 1. அந்தக்கரணம்.

அந்தக்கரணமானது: உள்ளந்தக்கரணம், புற அந்தக்கரணம் என இருவகைப்படும். புற அந்தக்கரணமாவது: மனம்,

சித்தம், அகங்காரம், புத்தி என்பன. இவை இந்திரியங்களுக்கு உள்ளாக இருத்தலால் அந்தக்கரணம் எனவும் கலாதிகளுக்குப் புறத்தே யிருத்தலால், புற அந்தக்கரணம் எனவும் கூறப்படும்.

கலாதி தத்துவங்கள் மனம் முதலிய தத்துவங்களுக்கு உள்ளாக விருத்தலால், உள்ளந்தக்கரணம் எனப்படும். கலாதி தத்துவங்களாகிய உள்ளந்தக்கரண நீக்கம் ஏழாம்நாள் விழாவில் நிகழும். நான்காம்நாம் விழாவில் புற அந்தக்கரணநீக்கம் உண்டாகின்றது.

அரசன் அமைச்சரோடு கூடிநின்று அரசகாரியத்தை நடாத்துவதுபோல, யான் எனது என்னுஞ் செருக்குறுதற் கேதுவாகிய ஆணவமலச் சேர்க்கையாற் பகுத்தறிவின்றிக் கிடக்கும் ஆன்மா, மனம் முதலிய அமைச்சரோடு கூடிச், சாக்கிரம் முதலிய அவத்தைகளைப் பொருந்தி விடயங்களை அறியும்.

அந்தக்கரணங்கள் சடமாகையால் மகேசுவரன் விந்துவை அதிட்டிக்க, விந்து சித்தத்தை உடனின்று செலுத்தச், சித்தம் யாதோ ஒருபொருள் பிண்டமாகத் தோற்றுகின்றதென்று சிந்தித்தறியும்.

உருத்திரன் மகாரத்தை அதிட்டிக்க, மகாரம் மனத்தைச் செலுத்த, மனம் சித்தத்தால் பிண்டமாக அறியப்பட்ட அப்பொருளைக் கட்டைதான் என்று சங்கற்பித்தும், கட்டையோ அன்றோ என ஐயுற்றும் அறியும்.

பிரமா அகாரத்தை அதிட்டிக்க, அகாரம் அகங்காரத்தைச் செலுத்த, அகங்காரம் மனதால் இன்னதென்று நிச்சயிக்கப்படாத அப்பொருளை இன்னதென்று நிச்சயிப்பேன் என எழுந்து, அகங்கரித்தறியும்.

விட்டுணு உகாரத்தை அதிட்டிக்க, உகாரம் புத்தியைச் செலுத்தப் புத்தி அப்பொருளை இன்னதுதான் என நிச்சயித்தறியும். இங்ஙனம் கடற்றிரைபோல் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் அந்தக்கரணங்களைக் கருவியாகக் கொண்டு ஆன்மா அறியும். இவ்வாறு அறியும் பசுஞானம் வந்தபின்பு இவ்வறிவு முன்னில்லாமையால் நாமாக அறிந்தோம் என்னும் நினைவையும் விடுத்து, அறிவிக்கும் பொருள் யாது என ஆராயின் சிவஞானம் விளங்கித் தோன்றும்.*

"—அலைக்கு
மந்தமனம் புத்தியுட னங்காரஞ் சிந்திவிழ—மோதி."
—நெஞ்சுவிடுதூது.

பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
 பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
 மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
 சேர்வார்தாமே தானாகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
 காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே.

—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

## 2. நால்வகைத் தோற்றம்.

நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. அவை ஆன்மாக்கள் செய்து கொண்ட நல்வினை தீவினை காரணமாக உண்டாகின்றன. அவற்றுள் அண்டசங்கள் முட்டையிற்றோன்றுவன. அவை: அரவு, தவளை, முதலை, ஆமை, உடும்பு, மீன், ஓந்தி, பறவை,

* இங்கே குறித்த பிரம விட்டுணு ருத்திரர்கள் சுத்தவித்தையில் இருப்பவர் என அறிக.

பல்லி, இப்பி முதலியனவாம். அண்டம் - முட்டை; ஜம் - பிறப்பது. சுவேதசங்கள் வேர்வையிற் றோன்றுவன. அவை: கிருமி, கீடம், விட்டில், பேன் முதலியனவாம். சுவேதம் - வேர்வை. உற்பிச்சங்கள்: வித்து வேர் கிழங்கு முதலியவை களை மேற் பிளந்து தோன்றுவன. அவை: மரம் பூண்டு கொடி முதலியனவாம். உற்பித் - மேற்பிளத்தல். ஜம் - தோன்றி யது. சராயுசம் கருப்பையிலே தோன்றுவன. அவை மனிதர் நாற்கால்விலங்கு முதலியனவாம். சராயு - கருப்பாசயப் பை.

---

## ஐந்தாம்நாள் உற்சவம்.

ஐந்தாம்நாள் உற்சவம் மெய் முதலிய ஐம்பொறிகளும், சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளும், ஆணவம் முதலிய ஐந்து மலங்களும் என்னுமிவற்றின் நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுவதாம்.

இந்திரியங்களலாகிய அறிவு பொய்யெனக் கண்டு, அவை களைத் தம்மின் வேறென விடுத்துக் கேவலாவத்தை சகலாவத் தைகளைப் பொருந்தி, அவைகளும் அஞ்ஞானத்தை உண்டாக் குவதால் தம்மின் வேறெனக் கண்டு, சுத்தாவத்தையைப் பொருந்துதலினல் பிரபஞ்சப்பற்றுக் குறைந்து பஞ்சமலங்கள் காரியப்பட்டுப் பாகம் வருதற்கு வழியாகும். அம்மலங்கள் நீங்கினலன்றி அருளைப்பெற முடியாது.

### 1. ஐம்பொறி.

பளிங்கானது தன்னிடத்துக் காணப்பெறும் பலநிறங் களின் தன்மையை விளக்கி நிற்கும். அங்ஙனமாயினும் தோன்றிய பொருட்கள் பளிங்கிற்கு வேறென்று அறியுமாறு போல, ஆன்மாவிடத்துப் பொருந்திய மெய் வாய் கண் மூக்கு

செவி என்னும் ஐம்பொறிகளும் பசுகரணமாய் நின்று உலகப் பொருள்களை அறியும் அறிவை விளக்க ஆன்மா இந்திரியங்களின் தன்மையையே தன்னிடத்தில் விளங்காநிற்கும்.

இதனைச் சிந்தித்து வெவ்வேறு விடயங்களை உண்டு பண்ணுகின்ற இந்திரியங்களைத் தன்னின்வேறெனத்தெளிந்து, அவைகளாலாகிய அறிவு பொய்யென விடுத்தால் சிவஞானம் விளங்கும். அவ்வாறு விளங்கும்போது ஆன்மா சத்துக்கு அடிமையாகும்.

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
  தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வானமை நோய்வினை வாராமே
  காக்கு நாயகன் கச்சியே கம்பனே.

—திருநாவுக்கரசுசுவாமிகள்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
  புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
  யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
  திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
  இன்பமே யென்னுடை யன்பே. —திருவாசகம்.

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

—உத்தரவேதம்

## 2. அவத்தைகள்.

அவத்தை என்பது ஆன்மா தங்குமிடம். அது கீழாலவத்தை மத்தியாலவத்தை மேலாலவத்தை என மூவகைப் பட்டுத்தனித்தனி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தாக விரியும்.

கீழாலவத்தை கீழ்நோக்கிச் சென்றொடுங்குவதும் மேல் நோக்கித் தோன்றுவது மென இருவகைப்படும். கீழ்நோக்கிச் செல்லும் முறையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவைத்தைகள் உண்டு. ஆன்மா உறக்கத்துக்குச் சென்று உறங்குமுன் புருவமத்தியில் சாக்கிராவத்தையைப் பொருந்தி, ஞானேந்திரிய மைந்து, கன்மேந்திரிய மைந்து, சத்தாதி ஐந்து, வசனாதி யைந்து, பிராணாதிவாயுப் பத்து, அந்தக்கரணநான்கு, புருடன் ஒன்று என்னும் முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டுக் கண்டத்தானத்தில் சொப்பனாவத்தையை அடையும்பொழுது வாயுப்பத்து, சத்தாதியைந்து, வசனாதி ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று என்னும் இருபத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டு இருதயத்தானத்தில் சுழுத்தியை அடையும்பொழுது பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் கூடிநிற்கும்.

இதனைவிட்டு நாபித்தானத்தில் துரியாவத்தையை அடையும் பொழுது பிராணன், புருடன் என்னும் இரண்டுடன் கூடி நிற்கும்.

இதனைவிட்டு மூலாதாரத்தில் துரியாதிதத்தை அடையும் பொழுது, புருடதத்துவ மொன்றினைக் கூடிநிற்கும். இவ்விதம் ஒடுங்குவதினால் இளைப்பு நீங்கும்.

மேனோக்கித் தோன்றும் முறையாவது துரியாதீதத்தை அடைந்த ஆன்மா முன்னொடுங்கியமுறையே ஒவ்வொருதத்துவத்தையும் பொருந்தி புருவநடுவில் சாக்கிராவத்தையை அடையும். அடைதலினால் கன்மத்தின் பயனை அனுபவிக்கும். அனுபவிப்பதினால் பிறவி நீங்கும்.

மத்தியாவத்தையாவது சாக்கிராவதத்தைக் கிடமாகிய புருவநடுவில் விடயங்களை அனுபவித்தலில் இடைவிடாது நிகழ்வதாகிய சாக்கிரத்திற் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளைப் பொருந்துதல். விடயங்களை நேரே யனுபவித்தல் சாக்கிரத்திற் சாக்கிரமாம். சுகதுக்கங்கள் வந்தவரலாற்றை நாடி மனோவியாபாரஞ் செய்து நிற்றல் சாக்கிரத்திற் சொப்பனமாம். சுகதுக்கத்தில் மூழ்கி நிற்றல் சாக்கிரத்திற் சுழுத்தியாம். சுகதுக்கந் தோன்றாது பெருமூச்செறிந்து நிற்றல் சாக்கிரத்திற் றுரியமாம். சுகதுக்கங்களைக்கேட்டமாத்திரத்தில் திடுக்கிட்டுப் பிராணவாயுசலியாமல் மூர்ச்சித்து மயங்கிநிற்றல் சாக்கிரத்திற் றுரியாதீதமாம்.

இந்திரியங்கள் விடயங்களை யறியினும் தம்மையும் தம்மைச் செலுத்துகின்ற ஆன்மாவையும் அறியமாட்டாத தன்மைபோல ஆன்மாவும் தனக்குத் துணையான திரோதானசத்தியினால் கீழாலவத்தையினும் மத்தியாவத்தையினும் நின்று வினைப்பயன்களை அனுபவிப்பினும், அனுபவிக்குந் தன்னையும் தன்னைச்செலுத்துகின்ற திரோதான சத்தியையும் அறியமாட்டாது.

மேலாலவத்தையாவது கீழ்நோக்கித் தோன்றுவதும் மேற்சென்றொடுங்குவதுமென இருவகைப்படும். கீழ்நோக்கித் தோன்றுவது பிறவிக்குக் காரணமாகும். மேற்சென்றொடுங்கும்முறையாவது இருதயத்திற்சாக்கிராவத்தையையும் கண்டத் தானத்திற் சொப்பனவத்தையையும், நாக்கினடியிற் சுழுத்தியையும், புருவநடுவில் துரியத்தையும், பிரமரந்திரத்தில் துரியாதீதத்தையும் பொருந்துதல். இவை யோகப்பயிற்சியுடையார்க்குத் தோன்றும். இதனாற் பிரபஞ்சப் பற்றுக் குறைந்து பிறவியறுதற்குக் காரணமாகும்.

## 3. ஐந்துமலம்.

ஐந்துமலங்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பனவாம்.

### ஆணவம்.

**ஆணவமாவது** அநாதியே யுள்ளதாய், ஒன்றாய், அநேக சத்திகளை யுடையதாய், ஆன்மாக்களோடு சேர்ந்து நிற்பதாய், தன்னுருவைப் பிறரறியாதபடி மறைத்திருப்பதாய், மோகம் முதலிய கெட்ட குணங்களை உண்டாக்குவதாய், கேவலத்தில் அறியாமையைச் செய்வதாய்ச், சகலத்திற் கருவிகளோடுங் கூடியவிடத்து, விபரீத உணர்வை உண்டாக்குவதாய் அரிசியின் உற்பத்திக்குக் காரணமாகிய உமிபோலச் சரீர உற்பத்திக்குக் காரணமாய், செம்பைப் பற்றிய களிம்பு போல்வதாய், பாகம் வந்தகாலத்துத் தீக்ஷையில் நீக்கப்படுவதாய் உள்ளது.

### கன்மம்.

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவினைக்கும் முதற்காரணமாய், இடையறு தொழுகும் நீரோட்டத்தில் முன்வந்தநீர் இது பின்வந்தநீர் இது எனப் பிரித்தறிய மாட்டாதவாறு போல, முன்செய்த கன்மம் இது பின் செய்த கன்மம் இது எனப் பிரித்தறியப்படாததாய் நெல்லுக்கு முளை போல்வதாய், முற்பிறப்பிலே செய்த வினைக்கேற்பச் சாதி ஆயுள் வடிவம் போகங்களைக் கொடுப்பதாய், அநுபவித்துத் தொலையும் வரையும் நீங்காததாய், தூலசூக்கும தேகங்களின் வியாபக முடையதாய், மனத்தைவிட்டு நீங்காததாய், தன்செயலற்றுஞ் சிவன்செயலாயுள்ளவர்களைப் பந்தியாததாய் உள்ளது.

### மாயை.

**மாயை** யானது சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயை என மூவகைப்படும். சுத்தமாயையாவது நித்தியமாய்,

வியாபகமாய், அருவாய், சடமாய், அறிவைஉண்டாக்குவதாய், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்திய தீதை என்னும் பஞ்சகலைகளும், சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்திசிவம் என்னும் சிவதத்துவம் ஐந்தும், சுத்த காலம் முதற் சுத்தநிலமிறுதியாகிய முப்பத்தொரு தத்துவங்களும் தோன்றுவதற்கு முதற்காரணமாய். வியாபகமாய் உள்ளது. அசுத்தமாயையானது அழியாததாம், வியாபகமாய், சடமாய், விபரீத உணர்வைக் கொடுப்பதாய், பிரளய காலத்திலே ஆன்மாக்கள்செய்த கன்மத்துக்கு உறைவிடமாய், சுத்தாசுத்தகாலம் முதல் அசுத்தநிலமீறாக முப்பது தத்துவங்களுந் தோன்றுவதற்கு முதற்காரணமாயுள்ளது. பிரகிருதி மாயை அசுத்தமாயையினின்றுந் தோன்றியமையால் அநித்தம் எனப்படும்.

## மாயேயம்.

மாயாகாரியங்கள் தநு கரண புவன போகங்களாம். தனு-தூலஉடம்பு. கரணம் - இந்திரிய அந்தக்கரண முதலிய சூக்குமஉடம்பு. புவனம் - உலகம். போகம் - உலகத்திலேயுள்ள அனுபவிக்கப்படும் பொருள். வஸ்திரத்தின் அழுக்கைச் சாணி உவர்மண் முதலிய வேறழுக்கைக்கொண்டு, வண்ணான் முற்றாக நீக்கி வெண்மையாக்குவதுபோல, இறைவன் மாயாகாரியமாகிய தனுகரண புவன போகங்களை ஆன்மாவிற்கூட்டி, ஆணவ மலத்தையும் கன்மமலத்தையும் நீக்கிச் சிவானந்தப் பெரும்பேறு கொடுப்பர்.

## திரோதாயி.

ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருவித்தற் பொருட்டு, வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்வதும், ஆணவத்தோடு நின்று, அதைப்பக்குவப் படுத்துவதும் திரோதானசத்தி

யாகும். திரோதானம் - மறைத்தல். மலபரிபாகம் செய்வதற்காகவே சிவசத்தி திரோதாயி என்னும் பெயரைப் பொருந்தும். மலபரிபாகம் வந்தவிடத்து இச்சத்தி திருவருட் சத்தியாகும்.

மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்
முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்
ஆவின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்
ஆதியு மந்தமு மானான் கண்டாய்
பால விருத்தனு மானான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.

—திருநாவுக்கரசுசுவாமிகள்.

பாசசா லங்களெல்லாம் பற்றுவிட ஞானவைவாள்
வீசுநா ளெந்நாள் விளம்பாய் பராபரமே.

—தாயுமானசுவாமிகள்.

---

## ஆரும்நாள் உற்சவம்.

ஆரும்நாள் உற்சவம் காமமுதலிய உட்பகை யாறும், கலை முதலிய அத்துவா ஆறும், இருத்தல் முதலிய கன்மமல குணம் ஆறும், பிரமசாலோகம் முதலிய பதமுத்தி ஆறும் நீக்குதல் காரணமாகச் செய்யப்படுவதாம்.

### 1. உட்பகையாறு.

அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. அவற்றுள், காமம் என்பது பொன், வீடு, பூமி முதலியவைகளை அதிகமாகச் சம்பாதித்தற்கு விருப்பம் வைத்தல்.

குரோதம் என்பது தனக்குத் தீமை செய்தானுக்குத் தானும் அதற்கு கெதிராய்த் தீமை விளைத்தல்.

உலோபம் என்பது தான் தேடியபொருளை அற்பமே னும் சிவபுண்ணியத்திற் கீயாதிருத்தல்.

மோகம் என்பது மாயா சம்பந்தமாகிய பொருள்களில் இடையறாது ஆசைவைத்து மயங்குதல்.

மதம் என்பது திரவியம் முதலியவற்றால் செருக்குற் றுப் பிறரை மதியாமை.

மாற்சரியம் என்றது பிறரநுபவிக்குஞ் சுகங்கண்டு சகிக்க மாட்டாது பொறாமை கொள்ளுதல்.

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலை யாமே.

—ஆளுடைய பிள்ளையார்.

## 2: அத்துவாக்கள் ஆறு.

அத்துவா என்பது வழி. அது புண்ணிய பாவங்கள் வரும்வழியும் ஆன்மா சிவபெருமானை அடையும் வழியும் என இருவகைப்படும். மந்திரங்களை உச்சரிக்கும் பேதங்களை அறிந்து உச்சரிப்பதனாலும், உச்சரியாமையாலும் மந்திராத்து வாவின் வழியாகப் புண்ணிய பாவகன்மம் வரும்.

பதங்களைப் பிரிக்குமுறையை அறிந்து பிரிப்பதனாலும் மாறுபடப் பிரிப்பதனாலும் பதாத்துவாவின் வழியாகப் புண் ணிய பாவகன்மம் வரும்.

அக்கரங்களின் குறில் நெடில் அளபெடைகளை அறிந்து, உச்சரிப்பதனாலும், உச்சரியாமையாலும் வர்ணாத்துவாவின் வழியாகப் புண்ணிய பாவ கன்மம் வரும்.

ஞானேந்திரியம், கன்மேந்திரியம் அந்தக்கரணங்களால் பிறர்க்கு இதம் அகிதம் செய்வதனாலும் தரும வழியாற் பொருளைத் தேடிப் போகமனுவிப்பதனாலும், பாவ வழியாக வந்த பொருளை அனுபவிப்பதனாலும் தத்துவாத்துவாவின் வழியாகப் புண்ணிய பாவம் வரும்.

புவனாதிபர்களைப் பூஜிப்பதனாலும் நிந்திப்பதனாலும் புவனாத்துவாவின் வழியாகப் புண்ணியபாவ கன்மம் வரும்.

கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி என்னும் பஞ்சசத்திகளைப் பூசித்து வழிபடுவதனாலும், நிந்திப்பதனாலும் கலாத்துவாவின் வழியாகப் புண்ணிய பாவ கன்மம் வரும்.

மந்திரம், பதம், வன்னம் என்னும் மூன்றும் சொற் பிரபஞ்சம் எனப்படும். புவனம், தத்துவம், கலை என்னும் மூன்றும் பொருட் பிரபஞ்சமெனப்படும். சொல்லாவது எழுத்தும், அவ்வெழுத்தாலாகிய பதமும், பதத்தாலாகிய மந்திரமுமென மூவகைப்படும்.

பொருளாவது உடலும் உலகமும் அவைகளை ஆக்கும் சத்தியுமென மூவகைப்படும். அவற்றுள், உடலாவது இந்திரியம் அந்தக்கரணம் முதலிய தத்துவ வடிவாயிருக்கும். புவனம் பஞ்சபூத வடிவாயிருக்கும். சத்தி கலைவடிவாயிருக்கும்.

இங்ஙனம் சொல்லும் பொருளுமாகிய ஆறத்துவாக்களும், ஆணவ கேவலத்தே கிடந்து அறிவு விளங்காத ஆன்மாக்களுக்கு, அறிவு விளங்குதற்கு வழியாகத் தோற்றுவன. அவ்

வறிவு விளக்கம் ஏகதேச மென்பதை அறிந்தபின், இவ்வத்துவாக்களாறனையும் ஒன்றிலொன்று அடங்க ஒடுக்கும் முறையினல் சிவபெருமானை அடைதற்கு வழியாகும். மந்திரம் பதத்தில் ஒடுங்கும்; பதம் வன்னத்திலொடுங்கும்; இம்மூன்றும் சொல் வடிவாதலால், சொல் பொருளைக் குறித்தன்றி நில்லாமையால், அச்சொல் வெளிப்படையாகக் காணப்படும் பொருளாகிய புவனத்திலொடுங்கும்; புவனம் தத்துவத்திலொடுங்கும். தத்துவம் கலையிலொடுங்கும்; நிவிர்த்திகலை பிரதிஷ்டா கலையிலொடுங்கும்; பிரதிஷ்டாகலை வித்தியாகலையிலொடுங்கும்; வித்தியாகலை சாந்திகலையிலொடுங்கும்; சாந்திகலை சாந்தியதீத கலையிலொடுங்கும்; சாந்தியதீத கலை பஞ்சகலைக்கும். ஆதாரமாயிருக்கும் சிவ சத்தியில் ஒடுங்கும்; சிவசத்தி சிவத்தில் ஒடுங்கும். இங்ஙனம் ஒடுங்குவதனல், சிவபெருமான் பிறவிக்கேதுவாகிய மலத்தை ஞானசத்தியாற் கெடுத்துப் பிறவியை நீக்குவர்.

## 3. கன்மமலகுணம் ஆறு.

(அவை இருத்தல், கிடத்தல், இருவினை யியற்றல், விடுத்தல், பரநிந்தை, மேவல் என்பன.)

அவை பூதவுடம்பு, [illegible]சாரவுடம்பு, யாதனை உடம்பு என்னும் உடம்புகளை எடுத்[illegible] பூமி சுவர்க்கம் நரகம் ஆகிய ஒவ்வோர் இடங்களைப்பற்றி யிருத்தலும், நோயாய்க்கிடத்தலும், இருவினையியற்றலும், சிவபூசை, ஓமம் தானம், ஆலய சேவை, சிவத்தியானம் முதலியவைகளை விடுத்தலும், சிவனடியார் முதலிய பெரியோர்களை நிந்தித்தலும் இகழ்ந்தாருடன் பொருந்துதலுமாம்.

இருத்தலுங் கிட[illegible] லு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருளினை

இருபாவிருபஃது.

## 4. பதமுத்தி ஆறு.

அவை பிரமசாலோகம், பிரமசாமீபம், பிரமசாரூபம், விஷ்ணு சாலோகம், விஷ்ணு சாமீபம், விஷ்ணு சாரூபம் என்பன. பிரமவிட்டுணுக்களுடைய உலகங்கள் அசுத்த மாயா தத்துவ புவனங்களாதலானும், மாயா காரியமாதலானும், காமிய கன்ம தவயோகிகள் எய்தும் பதமுத்திகளாதலானும், மெய்ஞ்ஞானிகள் எய்தும் பரமுத்தியாகாமையினுலும், பிரம விட்டுணுக்கள் மாயாகுண மூர்த்திகளாகையானும், அசுத்த மாயாதத்துவ புவனங்களைச் சிவாஞ்ஞையால் படைத்துக் காப்பவராகையானும் இவர்கள் ஓர்வகைப் பரபோகத்தைக் கொடுக்கும் மூர்த்திகளேயன்றி மாயாகாரிய பஞ்சகோசமும் நீக்கிய வீடுபேறருளும் பதியாகார்கள்.

நூறு கோடி பிரமர்க ளொழிந்தினர்
ஆறு கோடிநா ராயண ரங்ஙனே
ஏறு கங்கைமண லெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே.

—திருநாவுக்கரசுநாயனூர்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே.

—மாணிக்கவாசகசுவாமிகள்.

---

## ஏழாம்நாள் உற்சவம்.

எழுவகைப் பிறப்பும், வித்தியாதத்துவமேழும், மாயாமல குணமேழும் நீங்கும்பொருட்டு நடத்தப்படுவது.

## 1. எழுவகைப் பிறப்பு.

நால்வகைத் தோற்றத்தினுல் உண்டாகும் பிறவிகள் எழு வகைப்படும். அவை, தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன, தாவரம் என்பன. எழுவகைப் பிறப்பில் எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதங்கள் தோற்றுவன. தேவர் பதினெருலட்சம் யோனிபேதம். மனிதர் ஒன்பது லட்சம் யோனிபேதம். விலங்கு பத்துலட்சம் யோனிபேதம். பறவை பத்துலட்சம் யோனிபேதம். ஊர்வன பதினைந்து லட்சம் யோனிபேதம். நீர்வாழ்வன பத்துலட்சம் யோனி பேதம். தாவரம் பத்தொன்பது லட்சம் யோனிபேதம்.

> உரைசேரு மெண்பத்து நான்குநா
> ருயிரமாம் யோனி பேத
> நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
> யங்கங்கே நின்றன் கோயில்.

ஆளுடைய பிள்ளையார்.

## 2. வித்தியாதத்துவம் ஏழு.

அவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன.

கிரியாசத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு காலதத்துவத்தை எழுப்பக் காலம் முக்காலங்களிலுமுள்ள புசிப்பைக் கூட்டும். கிரியாசத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு நியதி தத்துவத்தை எழுப்ப நியதி அவரவர் செய்த கன்மத்தை அவரவர் அனுபவிக்குமாறு நியமிக்கும். கிரியா சத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு கலாதத்துவத்தை எழுப்ப, எங்கும் மூடிக்கொண்டிருக்கும் அந்தகாரத்தில் தீபமானது அந்த இருளை அடக்கி, விஷயத்தைக் காட்டுவது போல, ஆன்ம அறிவை மறைத்துக்கொண்டிருக்கும் கன்ம இருளைக் கலை

அடக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிக்கும். ஞான சத்தி சுத்த வித்தியா தத்துவத்தைக்கொண்டு, வித்தியா தத்துவத்தை எழுப்ப வித்தை அறிவை உண்டாக்கும். இச்சாசக்தி ஈசுவர தத்துவத்தைக்கொண்டு அராகத்தை எழுப்ப, அராகம் பத்தர்களுக்கு ஆசையை உண்டுபண்ணும். கலாதி ஐந்து தத்துவங்களும் கூடிய சங்கத்தில் உண்டான புருட தத்துவத்தைச் சாதாக்கிய தத்துவம் காரியப்படுத்தப் புருடன் போகத்தில் ஆசையை யுண்டுபண்ணும்.

### 3 மாயாமலகுணம்.

அவை, அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசுந்நியம், மாச்சரியம், பயம் என்பன.

அஞ்ஞானமாவது பொய்யை மெய்யென்று கொள்ளுதல். பொய்யாவது தான் அறிந்தவொன்றைப் பிறர் அறிந்திலரென நினைந்து உள்ளதை மறைத்துப் பிறர்க்குத் தீமைபயக்கும் சொற்களைச் சொல்லுதல். அது காமத்தாலும் பொருளாசையாலும் வருவதும் இம்மை மறுமைப் பயன்களைக் கெடுப்பதுமாய் உள்ளது. அயர்வாவது கண்டதை மறந்து மயங்கி வருந்துதல். மோகமாவது குருவினாலும் நூலினாலும் தீயன என்று அறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம். பைசுந்நியமாவது காணாத விடத்துப் பிறரை இகழ்ந்து தூற்றிக் கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டிப் பொய்யன்பு செய்தல். மச்சரியமாவது பிறர் கல்வி செல்வ முதலியவற்றைக் கண்டு சந்தோஷமடையாது அவர்களுக்குத் தீங்குநினைத்தலும் தீமை செய்தலும் தீமை சொல்லுதலுமாம். பயமாவது உயிர்க்கிறுதி வருமென்று அச்சப்பட்டுத் திரிகையாம். மாயாமலகுணங்களை நீக்கினவர் மனச்சுத்தியையும் ஞானத்தையுமடைந்து பிறப்பினின்று நீங்குவர்.

---

## எட்டாம்நாள் உற்சவம்.

எட்டாம் நாள் உற்சவம் சர்வஞ்ஞத்துவ முதலிய எண் குணங்களும் விளங்குதற்பொருட்டு நடாத்தப்படுவதாம்.

அக்கினியானது இரும்பைத் தன்வண்ணமாக்குவது போல, பரமசிவன் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பொருளை அறிந்து விதிப்படி மெய்யன்போடு இருதயத்தில் தியானித்துவரின், வாசனுமலத்தையும் நீக்கித் தம் வண்ணமாக்கித் தமது ஞான குணத்தின் வியாபார பேதமாகிய எண்குணங்களும் அவ்வான் மாக்களுடையனவாகக் கொடுத்தருள "மேவு சிவ சுபாவமதே தனது சுபாவமதாய்—விளங்குவன்'' எனச் சர்வ ஞானேத் தரங் கூறியவாறு எண்குணங்களும் தமது சுபாவமாகப் பிர காசிக்கப்பெறும். இதுவே சிவானந்த மேலிடுகை எனப்படும்.

அப்பர் சுவாமிகள் "நாவார நம்பனையே பாடப்பெற் றோம்'' என்னுந்திருத்தாண்டகத்தில் "எண்குளத்துளோமே'' என்றருளிச் செய்ததும் காண்க.

எண்குணங்களாவன: சர்வஞ்ஞத்துவம், திருப்தி, அநாதிபோதம், சுதந்திரத்துவம், அலுப்தசத்தி, அநந்த சத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்பன.

சர்வஞ்ஞ தாதிருத் தியனுதி போதம்
அறைசுதந் தாதா அலுத்த சத்தி
நிறையனந்த சத்தி நிராமய வான்மா
செறிவிசுத்த தேக மிவைசிவத் துவமே.

—சர்வஞ்ஞானேத்தரம்.

இவற்றுள்ளே சர்வஞ்ஞத்துவத்தை முற்றுமுணர்தல் எனவும், திருப்தியை வரம்பிலின்பமுடைமை எனவும், அநாதிபோதத்தை இயல்பாகவே பாசங்களினீங்குதல் என வும், சுதந்திரத்துவத்தைத் தன்வயத்தனாதல் எனவும்,

அநுத்தசத்தியைப் பேரருளுடைமை எனவும், அநந்தசத் தியை முடிவிலாற்றலுடைமை எனவும், நிராமயான்மாவை இயற்கை உணர்வுடைமை எனவும், விசுத்ததேகத்தைத் தூய வுடம்புடையனுதல் எனவுங் கூறுவர்.

ஆன்மாக்களையும் அவ்வான்மாக்களுக்கு வேண்டுவனவற் றையும் அறிதலின் முற்றுணர்வுடைமையும், அவ்வாறறிதல் தாம் இன்புறுதற் பொருட்டன்றி, அவ்வுயிர்களுக்கு இன்பஞ் செய்தற் பொருட்டாகலின் வரம்பிலின்ப முடைமையும், மலத்தினின்றும்நீங்கிய ஆன்மா சிவனைச்சார்ந்தவிடத்துச் சிவ மாய் நின்று வரம்பிலின்ப முடையதாய் விளங்குமாறு போலா காது இயல்பாகவே வரம்பிலின்ப முடைமையின் இயல்பாகவே பாசங்களின் நீங்குதலுடைமையும், இயல்பாகவே மலத்தின் வயப்படாமையின் தன்வயமுடைமையும் வரம்பில்லாத ஆன் மாக்களுக்கு அளவற்ற இன்பந்தருளுங் கிருபையுடைமை யின், பேரருளுடைமையும், அளவற்ற ஆன்மாக்களுக்கு வேண்டியவைகளை அறிந்து அறிந்தவாறு செய்யும் வல்லமை யுடைமையின் அளவிலாற்றலுடைமையும், இயல்பாகவே பாசங்களின் நீங்குதலின், இயற்கையுணர்வுடைமையும், ஞானமே வடிவாதலின் தூயவுடம்புடைமையும் சிவபெருமா னுக்கு இயல்பாயுள்ள குணங்களாம்.

இவ்வெண்குணங்களையே உத்தரவேதமுடையார் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்—தாளைவணங் காத்தலை" என்றருளிச் செய்தார்.

---

## ஒன்பதாம்நாள் உற்சவம்.

ஒன்பதாம் நாள் உற்சவம் மூவடிவங்களும், முக்கிருத்தி யங்களும், மூன்றிடத்துறைதலும் இல்லையென்பதைக் குறிப் பதாம்.

மூன்றுருவம் உருவம், அருவுருவம், அருவம் என்பன. அவற்றை ஆன்மா நீங்குதலாவது அதிகார சிவத்தை அடைந்து உடற்பற்றை விடுதலாகிய அதிகாரமுத்தியையும், போகசிவத்தை அடைந்து உலகப்பற்றை விடுதலாகிய போக முத்தியையும், இலய சிவத்தை அடைந்து மலமாயா கன்மங் களை விடுதலாகிய இலய முத்தியையும் விடுதலாம். முத்தொ ழில் சிருஷ்டி திதி சங்காரம் என்பன. அஃதாவது தநு கரண புவன போகங்களைப் பொருந்துதலும், அவற்றில் நிலைத்து நிற் றலும் அவற்றினின்று மாறுதலடைதலுமாம். மூன்றிடத் துறைதல் சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்தி மூன்றுமாம்.

பதிஞான முதிர்ச்சியால் சுத்தவித்தை முதலிய தத்துவங் களை அடைந்த ஆன்மா பதி தரிசனத்தால் அருள் விளக்கத்தை அடைந்து, பிறப்பு இறப்புக்களை நீக்கி, ஆண்டு நின்றவாறே சிவதரிசனத்தால் ஆனந்த விளக்கம் அடையும்.

---

## பத்தாம்நாள் உற்சவம்.

பத்தாம்நாள் திருவிழா அந்தமிலின்பத்தழிவில் வீடாகிய பரமானந்த வெள்ளத்து அமிழ்ந்துதற் பொருட்டுச் செய்யப் படுவதாம்.

வளர்பக்கச் சந்திரன் தனது ஒவ்வொரு கால்களால் ஒவ்வொரு நாளும்கண்ணிற் கலந்துள்ள இருளைச் சிறிது சிறி தாக நீக்கி, பூரணையில் முற்றாக நீக்குவதுபோலச், சிவபெரு மான் ஆன்மாக்களிடத்துள்ளமலசத்தியைச்சரியையிற் சரியை முதற் பதினாறுவகைப்பட்ட சிவபுண்ணியங்களுக்கேற்ப, அவ்வப் பருவந்தோறுஞ் சிறிதுசிறிதாக நீக்கி, நீங்குந்தோறும் நீங்குந்தோறும் நீக்குகின்ற திருவருட்சத்தியைச் சிறிது சிறி

தாகப் பதியச்செய்துமுதிர்ந்த பருவத்தில் முற்றாக நீக்கிச் சத்தியை முற்றாகப் பதியச்செய்து, தாம் பிரிப்பின்றி நிற்றலை அறியவொட்டாது செய்த அஞ்ஞானத்தை நீக்கி அறியச் செய்து, காந்தமானது இரும்பைத் தன் வசமாக்கி ஒருகாலும் விடாத தன்மைபோல, ஆன்மாவை விடாது தம்வசமாக்கி, உப்பானது நீரோடுகூடிய விடத்துத் தன்னிடத்துள்ள சுவை முழுதையும் அந்நீருக்காக்கி அதனோடு மறைந்து நிற்குமாறு போலத் தமது எண்குணங்களை ஆன்மாவிடத்து விளங்கச் செய்து கலந்து நிற்பர்.

அணையினுள்ளாகக் கட்டுப்பட்டுத் தேங்கிநின்ற ஆற்று நீர் அவ்வணையை முரித்து ஒரு தடையுமின்றி, விரைந்து சென்று கடல் நீருடன் கலந்து அடங்கி, மீண்டு வராத தன்மைபோலப் பாசஞானத்திலடங்கித் தடைப்பட்ட ஆன்மா அத்தடையினின்றும் நீங்கிச் சிவபெருமானுடைய ஸ்ரீபாதங் களிற் கலந்து அருள் நிறைவாயடங்கிப் பின்பு மீளுதலின்றிக் கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, அமுதம், கற்கண்டு, சர்க் கரை என்னுஞ் சுவைப் பொருள்களை ஒன்றாகக் கலந்த விடத்து உண்டாகிய சுவை இத்தன்மைத்தெனப் பிரித்தறிய வாராதது போலப் பரமுத்தியில் இத்தன்மைத்தெனப் பிரித் தறிய முடியாத ஆனந்த சொரூபமாய் நிற்கும்.

> வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
> தாக்கா வுணர்வரிய தன்மையனை—நோக்கிப்
> பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
> குறிக்குமரு ளல்கக் கொடி. —கொடிக்கவி.

> தானந்த மில்லான் தனையடைந்த நாயேனை
> ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
> ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
> வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.

—திருவாசகம்.

## தைலாப்பியங்கம்.

உற்சவ கால முதலியவற்றில் அப்பியங்கத்துக்குரிய வாரங்களில் தைலாப்பியங்கஞ் செய்க. மிருத்திகை தாரு இவைகளாற் செய்யப்பட்ட பேரங்களுக்கு அப்பியங்கம் உத்தமம். சுவர்ணபேரம் சித்திரம் ரத்தினபேரம் லோகபேரங்களுக்குக் கண்ணுடியினுற் செய்க. தாருபேரங்களினது சிரசிற் புரோட்சிக்க. தைலத்துக்கு மந்திரபூர்வமான சுத்தி செய்க.

சுவாமிக்குத் தந்தகாஷ்டம், கண்ணுடி, தாம்பூலம் சமர்ப்பித்து அப்பியங்கத்தைச் செய்க. பின்பு நெல்லிக்காப்பினுலும் மஞ்சட்காப்பினுலும் அபிஷேகிக்க. பக்தர்களுக்கும் பரிசாரகர்களுக்கும் தைலத்தைக் கொடுக்க. இதனுல் சர்வரோகமும் விநாசமாகும்.

---

## வசந்தோற்சவம்.

ஆறுவது விழாவில் வசந்தோற்சவம் செய்க.

---

## மிருகயாத்திரை.

இதனை வேட்டைத் திருவிழா எனவும், சங்கார யாத்திரை எனவும் கூறுவர். பன்றிபோன்ற ஆணவ மலமும் மான்போன்ற கன்மமலமும், பட்சிபோன்ற மாயாமலமும் ஆகிய மும்மலங்களும் ஆன்மாவைச் சார்ந்து நின்று வருத்துந் துட்டர்களாம். அஞ்ஞானத்தை உண்டுபண்ணுகிற மும்மலங்களை அடக்கிச் சிவபெருமான் சாயுச்சியம் கொடுக்கும் குறிப்பாகவே இவ்வுற்சவம் நடைபெறுவதாம். இதனை எட்டாந் தினத்திற் செய்க.

மன்னிய கலாதி யேழு மாணவ மலமு மாயத்
தன்னியல் வேட்டை யாடுந் தன்மையுட் கொண்டு நாதன்
சின்மயக் குடிலை வில்லுஞ் சிற்பரை யம்புஞ் சேர்த்திப்
பன்னெடுங் கருவி தோற்றப் பகையற வுலாவலுற்றார்.

—உற்சவ விளக்கம்.

## கிருஷ்ணகந்தம்.

திரிபுர சங்காரத்து உண்மையை உணர்த்தும் பொருட்டுக் கிருஷ்ணகந்தம் சாத்தப் படுவதாம். ஆன்மாக்களை இரட்சித்தல் காரணமாக இதனை ஒன்பதாந் தினத்திற் செய்க.

---

## இரதோற்சவம்.

### தேர்த் திருவிழா.

பசுபதியாகிய சிவபெருமான் சூரியசந்திரர்கள், உருள்களாகவும், மற்றைச் சரம் அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விட்டுவை அம்பாகவும், அக்கினியை அவ்வம்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களைத் தமது திருப்புன் முறுவலால் எரித்தருளினார்.

விருது குன்றமா மேருவி னாண
வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டங்
கருதி நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

—திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையுங் கெடுத்தற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

"புரமடு நாட்—சான்ற நிலத்தேர் பொருமணித்தேர்
சங்கத் தலைவரு ருட்டினார்."

—திருவானைக்காப்புராணம்.

## சூர்ணோற்சவம்.

தநுகரண புவனபோகங்கள் நான் எனது என்னும் செருக்கை எழுப்புவன. அவைகளைச் சத்தியால் இடித்துச் சுத்த சூரணமாக்கி இறைவனிடத்தில் ஒப்பிக்க அவர் திரோபவ கிருத்தியம் செய்தருளுவர். அப்பொழுது ஆன்மா இருவகைப் பற்றுமற்றுத் தன்செயலற்றுச் சிவன்செயலாய்நிற்கும்.

தனுவொடு காணமாயா புவனபோ கந்தவிர்க்கும்
புனிதநீ ருயசுன்னம் போதகற் களித்திட்டுண்மை
யினிதமர் சிவம தாக்கி. —உற்சவ விளக்கம்.

சத்திகளாற் றனுகாண புவனபோகங் கடமை
யத்தனுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூவுதலே
யொத்த திருச் சுண்ணம்.

—திருப்பெருந்துறைப்புராணம்.

---

## தீர்த்தம்.

சௌரவம், சாவனம், சாந்திரம், நட்சத்திரம் என்னும் நால்வகை மாத உற்சவத்தில் தீர்த்தோற்சவம் செய்யலாம். சௌரசாவன மாதங்களைத் தீர்த்தாந்தமாகக் கொள்பவர்கள், சாலோகாதி பதமுத்தி அடைவார்கள். சாந்திர நக்ஷத்திர மாதங்களைத் தீர்த்தாந்தமாகக்கொள்பவர்கள் சகல சம்பத்தையும், சுகத்தையும் அடைவார்கள்.

தீர்த்த தினத்தை நிச்சயித்துக்கொண்டு, துவசாரோகணம் செய்க. சமுத்திர தீர்த்தம் திதியைப் பிரதானமாகக் கொண்டது. நதி முதலியவற்றிற் கொடுக்கப்படுந் தீர்த்தம் நக்ஷத்திரத்தைப் பிரதானமாகக் கொண்டது. திதியும் நக்ஷத்திரமும் கூடிவருவது உத்தமம். அது கிடைத்தற்கரியது. சௌர உற்சவத்துக்குச் சங்கிராந்தி பிரதானம். சாந்திர உற்சவத்துக்குத் திதி பிரதானம். நக்ஷத்திரமாச உற்சவத்துக்கு நக்ஷத்திரம் பிரதானம். திதி சேர்ந்திருந்தாலும் சேராதிருந்தாலும் நக்ஷத்திரத்திலே தீர்த்தோற்சவம் செய்க.

தீர்த்தோற்சவத்தைப் பூர்வான்னத்திற் கொள்வது உத்தமம். மத்தியானத்திற் கொள்வது மத்திமம். அதற்கு மேற்பட்ட காலங்களிற் கொள்வது அதமம். பூர்வான்னத்தில் உதயாதி மூன்று நாழிகை உத்தமம். மூன்று நாழிகைக்கு மேல் ஏழு நாழிகை வரையுங் கொள்வது மத்திமம். அதன் மேற் பத்துநாழிகை வரை கொள்வது அதமம். இவை முறையே இராசதகாலம், சாத்துவிககாலம், தாமதகாலம் எனப்படும். இராசதகாலம் சுப்பிரமணியருக்கும், சாத்துவிக காலம் சிவபெருமானுக்கும், தாமதகாலம் மற்றைய மூர்த்தங்களுக்கும் என்று விஜயாகமம் விளம்பும்.

ஆறு, குளம், சமுத்திரம் முதலிய இடங்களுக்கு பரமசிவன் திருவுலாக்கொண்டு எழுந்தருளுவது அங்கேயுள்ள ஆன்மாக்களுக்கு அருள் செய்யுங் குறிப்பாம். அஷ்டமூர்த்திகளுள் பவன் என்னுந் திருநாமத்தையுடைய சிவபெருமானது வல்லமையாகிய சியேட்டை சலரூபமாய் அமைந்து தன்னை அடைந்து தரிசித்து ஆசமித்து ஸ்நானஞ்செய்யும் அடியார்களது பிறவியாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து, தத்துவாதீதராய் விளங்குஞ் சிவத்துடன் கூட்டும்.

ஸ்நானஞ் செய்யும் அடியார்கள் ஆசாரியரால் சகல தீர்த்தங்களையுஞ் சங்கிரகிக்கப்பட்டதாகிய திருவருள் என்னுந் தீர்த்தத்தை அடைந்து, சரீரத்திலேயுள்ள அசுத்த வாயுவைக் கழித்து, புறத்தேயுள்ள சுத்த வாயுவைப் பூரித்து, பெருவிரல்களாற் காதுகளையும், சுட்டுவிரல்களாற் கண்களையும் நடுவிரல்களால் மூக்கையும், மற்றைய விரல்களால் வாயையும் மூடிப் பிராணவாயுவைக் கும்பித்துப் பிரமரந்திரத்தில் இருக்கும் சந்திர மண்டலத்தை யிளகச்செய்து, அதிலிருந்து பெருகும் அமிர்தத்தினாலும், தீர்த்தத்தினாலும் ஸ்நானஞ்செய்து, மெய்யன்போடு சிவத்தலங்களையும் வழிபடின், பிறவிக்கு வித்தாகிய மும்மலங்களும் நீங்கிச் சிவானந்த முத்தி அடைவார்கள்.

"எல்லையொன் றில்லா வின்ப—வனுபவ தீர்த்தமாடியமலமாய்
நிலைமை செய்தார்." —உற்சவ விளக்கம்.

இத்தகு கடவுட் சாறு நோக்கியங் கிறைஞ்சு வோரும்
அத்தகு விழவி னீற்றிற் றீர்த்தநீ ராடு வோரும்
பைத்தபாம் பல்குற் செவ்வாய்ப் பனிமொழி யொருபான்மேய
வித்தகன் கயிலைநண்ணி விறற்கண நாத ராவார்.

—காஞ்சிப்புராணம்.

## யாக கும்பாபிஷேகம்.

சிவ யாகத்தினுடைய நிறைவின் பொருட்டும், உலகங்களை இரட்சித்தற் பொருட்டும், யாக கும்பாபிஷேகத்தை நன்றாகச் செய்க. பரிசாரகனை வருவித்து, உட்டிணீஷம் முதலிய சர்வாலங்கார முடையவனாகச் செய்து, சிரசில் இடபதேவரைப் பூசிக்க. கும்பத்தை எடுத்து அவன் சிரசில் வைத்து வேதாத்தியயனமும் தமிழ் வேத பாராயணமுஞ் செய்துகொண்டு பல வகை வாத்தியங்கள் குடை, கொடி, சாமரம், தீபம், தூபம் முதலியவைகளுடனும் பத்த ஜனங்களுடனும் வீதிப் பிரதக்ஷி

ணம் செய்க. கருப்பக்கிருக மண்டபத்திற் பிரவேசித்து, சாத கன் பரிசாதகனிலிருந்து கும்பத்தை எடுத்து ஆசாரியரிடம் கொடுக்க; அவர் சாவதானமாக வாங்கி விதிப்படி மூல லிங்கத் தில் அபிஷேகஞ் செய்க.

---

## மௌனோற்சவம்.

மௌனமாவது வாக்குமோனம், கரணமோனம், காட்ட மோனம், சுழுத்திமோனம் என நான்கு வகைப்படும். அவற் றுள் வாக்கு மோனமாவது வாய் பேசாதிருத்தல். கரண மோனமாவது காது முதலிய இந்திரியங்கள் ஒருவழிப்பட்டு அடங்கி யிருத்தல். காட்டமோனமாவது சரீரம் அசையா திருத்தல். இம் மூன்று மோனங்களிலும் மனம் ஒன்றைப் பற்றி நிற்குமேயன்றிச் சும்மா இருக்கமாட்டாது. இங்கே கூறப்பட்ட மூன்று மோனங்கள் வரம்புக் குட்பட்டவைகள். அவைகளால் பசுஞானமும், பாசஞானமுமுண்டாம். மோன மென்பது சும்மா இருத்தல். அது சுழுத்தி மோனத்தாற் சித் திக்கும். சுழுத்தி மோனமாவது உலகத்திலேயுள்ள எல்லாப் பொருள்களும் சிவப்பொருளின்றித் தனித்து நில்லா; ஆகை யால் அந்தச் சிவம் மற்றெல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிற்பதை அறிந்து, எல்லாப் பொருள் களுஞ் சிவமெனக்கண்டு, கண்டோமென்னும் போதமும் நீங்கி நிற்கும் ஞான நிட்டையேயாம். “மோனமென்பது ஞான வரம்பு” என **ஔவைத் தாயாரும்**, “ஆனந்தமான நின்னையன்றி யொன்றையுன்னுத—மோனந் தமியேற்கு முத்தி பராபரமே” எனத் **தாயுமான சுவாமிகளுங்** கூறியருளுவது காண்க.

இஞ்ஞான நிட்டையை ஆன்மா அடைதல் வேண்டு மென்னுங் குறிப்பாகவே மோனோற்சவம் நடத்தப்படுகின்

றது.. உற்சவ விளக்கம் என்னும் நூலிலேயே "விந்துரு விழுந்த மோனத் திருவுலா வீதி வந்திட்டு" என்று சொல்லப் பட்டிருக்கின்றது.

---

## சண்டேச்வர உற்சவம்.

சண்டேசுரரை விதிப்படி வஸ்திரம், ஆபரணம், மாலை முதலிய சிவநிர்மாலியங்களால் அலங்கரித்துப் பூசித்து சிவி கையிலாவது, கேடகத்திலாவது ஏற்றி குடை, சாமரை முத லிய அலங்காரங்களுடனும், கீதவாத்தியங்களுடனும் வீதிப் பிரதக்ஷிணமாக வந்து அவருடைய தானத்தில் தாபித்து சிவோற்சவபலனைத் தரும்படி பிரார்த்திக்க. இவ்வுற்சவத்தை மனவுறுதியுடன் செய்பவர்களே சிவோற்சவ பலனை அடை வார்கள்.

---

## ஆசார்யோற்சவம்.

உற்சவாசாரியருடைய முன்னிலையை அடைந்து இருகரங் களையுங்கூப்பி, அஞ்சலிபண்ணிக் கொண்டு, அர்ச்சிப்பதற்கு அனுமதிபெற்று ஆசனமிட்டு அதில் இருத்தி சதாசிவ மூர்த்தி யாகப் பாவித்து,புஷ்பம்,தூபம், தீபம் முதலியவற்றாற் பூசித்து வணங்கித் துதிக்க. உடல், பொருள், ஆவி மூன்றையுங் கொண்டருளுகஎன்று இயன்றதக்ஷிணையையும்வஸ்திராதிகளை யுங் கொடுக்க. அத்தக்ஷிணையை ஆசாரியர் செய்த கிரியைக்குக் கூலியென்று நினைத்தலாகாது. தக்ஷிணையில்லாத கருமம் நிஷ் பலமாகும். ஆசாரியருடைய மனசு திருப்தி யுறுதலினாலே பரமசிவன் திருப்தியுறுகின்றார். இருத்துவிக்குகள் சாதகர், போதகர் முதலியோருக்கும்தக்ஷிணையையும்வஸ்திராதிகளையும்

கொடுக்க. பின்பு ஆசாரியரைக் குடை, கொடி முதலிய மங்கலச் சிறப்புடன் நகரப் பிரதக்ஷிணம் செய்து அவரது மாளிகையில் விட்டுத் திருவருளாகிய விபூதிப் பிரசாதம் பெற்றுத் தங்கள் தங்கள் இல்லங்களை அடைந்து குருபக்தி குன்றாதவர்களாய் இருக்கக் கடவர்.

சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சம்ஸ்கார தீக்ஷையினாலே வாகீசுவரர் வாகீசவரிகளிடத்திருந்து தோன்றியவராகையினால், ஆசாரியரை மனிதரென்று கருதலாகாது. ஆசாரியரை மனம் வாக்குக் காயங்களினாலே சிரத்தையுடன் வழிபடுவோர் போகமோக்ஷங்களைப் பெறுவர்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருரூபஞ் சிந்தித்தல் தானே. —திருமந்திரம்.

கொடிகொள் செல்வ விழாக்குண லையறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

—திருநாவுக்கரசு நாயனார்.

# பிரகடன பத்திரம்

## சம்ஸ்கிருதம்

| | ரூபா. | சதம். |
|---|---|---|
| சிவாகமசேகரம் சிவப்பிரதிஷ்டாவிதி (பிரதம பாகம்) | 5 | 00 |
| சிவலிங்கப்ரதிஷ்டாவிதி (இரண்டாம் பாகம்) ... | 10 | 00 |
| பிரணய கலஹவர்ணனம் (கண்டனூர் இராமநாதக் குருக்கள் செய்த உரை) ... ... | 0 | 25 |
| பிரஸாத ஷட்சுலோகி (சங்கரபண்டிதர் உரை) ... | 0 | 25 |

## தமிழ்

| | | |
|---|---|---|
| சிவபூசை விளக்கம் ... ... ... | 3 | 00 |
| பிராசாததீபம் புத்துரை ... ... ... | 1 | 00 |
| அநுஷ்டான அகவலுரை ... ... | 0 | 25 |
| புவனேசுவரி மகத்துவம் ... ... ... | 0 | 25 |
| முப்பொருள் விளக்கம் ... ... ... | 1 | 50 |
| வேதாகம நிரூபணம் (முதற் பாகம்) ... ... | 1 | 00 |
| ஷை (இரண்டாம் பாகம்) ... | 1 | 00 |
| சங்கரபண்டிதர் சரித்திரம் ... ... | 0 | 50 |
| சிவபூசாவிதி ... ... ... | 0 | 50 |
| சைவப்பிரகாசிகை 5-ம் புத்தகம் ... ... | 1 | 00 |
| ஷை 4-ம் ,, ... ... | 0 | 75 |
| ஷை 3-ம் ,, ... ... | 0 | 60 |
| ஷை 2-ம் ,, ... ... | 0 | 50 |
| ஷை 1-ம் ,, ... ... | 0 | 40 |
| விநாயக பரத்துவம் ... ... | 0 | 65 |

கிடைக்குமிடம்:—

**ச. கு. வைத்தீசுவரக்குருக்கள்,**
அச்சுவேலி (இலங்கை.)

**சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை,**
26, காரணேசுரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை.

தம்.
00
00

25
25

00
00
25
25
50
00
00
50
50
00
75
60
50
40
65

.)

Vidyanubalana
Press
300, Mint St.,
Madras-1.